
# முறிந்த உடன்படிக்கை

மல்கியா நூல் பற்றிய வேத ஆராய்ச்சி



தியோடர் வில்லியம்ஸ்

First Edition 1996 - 3000 Copies

© Bible Teching Ministries

All rights reserved

'MPRINT, Bangalore - 560 025.

# உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| | மல்கியா - ஓர் அறிமுகம் | 1 |
| 1 | கடவுள் உன்னை நேசிக்கிறார் | 8 |
| 2 | தகுதியற்ற பலிகள் | 17 |
| 3 | லேவியுடன் உடன்படிக்கை | 28 |
| 4 | உங்கள் திருமண உறவு எப்படி இருக்கிறது? | 40 |
| 5 | கடவுளைக் குறை கூறுதல் | 56 |
| 6 | கடவுளை வஞ்சித்தல் | 67 |
| 7 | கடவுள் சுத்திகரிக்கிறார், சீர்ப்படுத்துகிறார் | 80 |
| 8 | பூரண இரட்சிப்பு | 88 |

# முகவுரை

நமது சமுதாயத்திலே பெருகி வரும் ஒழுக்கக் கேடுகளையும், மதத்தின் பெயரால் நடை பெறும் சீர்கேடுகளையும், குடும்ப வாழ்வின் சீரழிவுகளையும் கண்டு மலைத்து நிற்கும் நமக்கு பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி ஒருவர் கொண்டு வரும் செய்தி இன்றைக்கும் எத்தனை பொருத்தமாக அமைந்துள்ளது என்பதைக் காணும்போது அதிக வியப்பாயிருக்கிறது! மல்கியா நூலில் என்னைக் கவர்ந்தது இதுதான். பெங்களூரிலுள்ள ரிச்மண்ட் டவுன் மெதடிஸ்டு ஆலயத்தில் நான் போதகராயிருந்த பொழுது இதிலிருந்து வரிசையாக செய்திகளைக் கொடுத்தேன். பின்னர் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் பல கன்வென்ஷன்களில் வேத ஆராய்ச்சி செய்திகளாக இவை கொடுக்கப்பட்டன; அதோடு அருட்பணி இதழிலும் வெளிவந்தன. அப்படித்தான் இது புத்தக வடிவம் பெற்றது!

உலகம் அனைத்திலுமுள்ள கிறிஸ்தவர்கள் நடுவிலும், சபைகள் மத்தியிலும் காணப்படும் பெருத்த ஆவிக்குரிய குறைபாடு என்னவென்றால் தேவ பயமின்மையே ஆகும். நம்முடைய திருச்சபைகளில் வழக்குகளும், வாதுக்களும், ஊழல்களும் காண ப்படுவதன் காரணமும் இதுதான். தேவனுடைய மகத்துவம், மாட்சிமை, பரிசுத்தம் ஆகிய அனைத்தையும் மறந்தவர்களாக, ஏதோ அவர் நமக்கு அதிகப் பரிச்சயமானவர் போலப் பேசி வருகிறோம். சிறையிருப்பிலிருந்து மீண்டு வந்த இஸ்ரவேலரும் இதே தவறைத் தான் செய்தனர். மற்ற எல்லா வீழ்ச்சிகளும், தோல்விகளும் ஏற்

படக் காரணம் இந்த தேவ பயம் இல்லாமற் போவதே. அவருக்கு எந்தக் கனமும் கொடுக்காதபடி அவர்கள் அவருடன் உள்ள உடன்படிக்கையை முறித்துப் போட்டனர். ஆயினும், உடன்படிக்கை முறிந்து போனதோடு மல்கியா புத்தகம் முடிவடைந்து விடவில்லை. அந்த உடன்படிக்கை மீண்டும் நிலைநிறுத்தப் பட்டதை நாம் பார்க்கிறோம். தேவனுடைய மக்கள் தேவனுக்குப் பயப்பட ஆரம்பிப்பது தான் எழுப்புதல். தேவ மக்களின் மத்தியில் தேவபயத்தை மீண்டும் நிலைநாட்டி, பெருத்த சன்மார்க்க ஆவிக்குரிய மாறுதல்களைக் கொண்டு வரக் கூடிய அந்த எழுப்புதலுக்காக நாம் ஏங்கி, ஜெபிக்கிறோம்! இந்த நூலின் பாரம் இதுதான்.

இதை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்த சகோதரி ஜமிலா பால் அவர்களுக்கும், இதை அச்சிட்டு வெளியிட உதவிய நண்பருக்கும் என் மனமார்ந்த நன்றி!

**தியோடர் வில்லியம்ஸ்**

# மல்கியா - ஓர் அறிமுகம்

மல்கியாவின் புத்தகம் வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டின் இறுதிப் புத்தகம் மட்டுமல்ல, சிறிய தீர்க்கதரிசனப் புத்தகங்களில் இறுதியானதும் கூட. பழைய ஏற்பாட்டுக் காலத் தீர்க்கதரிசிகளுள் இறுதியானவர் மல்கியா.

**காலம்**

இந்த நூல் எஸ்றா, நெகேமியா இவர்களின் காலத்தைச் சேர்ந்தது. *1:8*ல் ''அதிபதி'' என்ற பதம் காணப்படுகிறது. இதே வார்த்தை ஆகாய் *1:1*ல் செருபாபேலைக் குறிப்பதற்கும் நெகேமியா *5:14*ல் நெகேமியாவைக் குறிப்பதற்கும் பயன் படுத்தப் பட்டுள்ளது. இது அதிபதிகள் ஆண்ட காலம், அதாவது சிறையிருப்புக்குப் பிற்பட்ட காலம். ஆலயம் குறிப்பிடப் படுவது காலத்தைப் பற்றிய மற்றொரு குறிப்பாகும். ஆலயம் இருப்பதாகக் குறிப்பிடப் பட்ட போதிலும் **(1:10, 3:10)** ஆராதனையோ சீர்கெட்டுப் போயிருந்தது. எனவே ஆலயம் மீண்டும் கட்டப்பட்டபின்னர், சற்றுக் காலம் கடந்திருக்க வேண்டும்.

யூதர்கள் யூதரல்லாத பெண்களை மணப்பது, சமுதாயத்தில் நலிவுற்ற மக்களை நசுக்கி ஒடுக்குவது போன்ற சமுதாய சூழ்நிலைகள், மல்கியாவும் எஸ்றா, நெகேமியா காலத்தைச் சேர்ந்தவராயிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றன. ஒருவேளை மல்கியா தீர்க்கதரிசியின் வார்த்தைகளே எஸ்றாவின் காலத்தில் ஏற்பட்ட எழுப்புதலுக்கு அடிகோலுவதாக அமைந்திருக்கக் கூடும்.

## தீர்க்கதரிசி

பழைய ஏற்பாட்டில் வேறு எங்கும் மல்கியா குறிப்பி டப் படவில்லை. புதிய ஏற்பாட்டில் அவரது வார்த்தைகள் குறிப்பிடப்பட்டாலும் அவருடைய பெயர் குறிப்பிடப் பட வில்லை. மல்கியா என்பதன் பொருள் ''என் தூதுவன்'' என்பதாகும். அவரைப் பற்றி வேறு விபரங்கள் எதுவும் கொடுக்கப் படவில்லை. மல்கியா என்பது தீர்க்கதரிசியின் சொந்தப் பெயராகவோ அல்லது ஒரு பட்டப் பெயரா கவோ அல்லது நூலாசிரியரின் புனைபெயராகவோ இருந் திருக்கலாம். ஜெரோம், கால்வின் போன்ற ஆதித் திருச்ச பைத் தலைவர்கள் மல்கியா என்பது எஸ்றாவின் பட்டப் பெயர் எனக் கருதுகின்றனர். மற்றவர்கள், மல்கியா என்பது தீர்க்கதரிசியின் சொந்தப் பெயரே என்று எண்ணுகின்ற னர். தூதுவனின் பெயரை விட தூதுவன் கொண்டு வரும் செய்தியே முக்கியமானது என்பது மட்டும் நிச்சயம்.

## மக்கள்

இஸ்ரவேல் மக்கள் சிறையிருப்பிலிருந்து பெரிய எதிர் பார்ப்புகளுடன் திரும்பி வந்திருந்தார்கள். ஆலயம் மீண்டும் கட்டி முடிக்கப் பட்ட பின்னரும் கூட, ஆகாய் சகரியா போன்ற தீர்க்கதரிசிகள் கூறிய வாக்குத் தத்தங்களின் மூலம் உற்சாகப் படுத்தப் பட்ட மக்கள் பெருத்த நம்பிக்கையுடன் காத்திருந்தனர். இவ்விதமாய்க் காத்திருந்த மக்களின் மத்தி யில் தேவனுடைய பிரசன்னத்தையும், அவரது வல்லமை யையும் விளங்கச் செய்யும் வெளிப்பாடுகளோ, பெரிய அற்புதங்களோ இல்லாத ஒரு உற்சாகமற்ற காலத்தில் தான் மல்கியா நூல் எழுதப்பட்டது. யூதா என்ற சிறிய மாநிலமா னது இன்னும் அந்நியரின் ஆதிக்கத்தின் கீழ் அடிமைப் பட்டுக் கிடந்தது, அதன் மக்கள் அற்பரும் ஏழைகளுமாயி ருந்தனர். தேவன் தங்களை மறந்து விட்டது போல அவர் களுக்குத் தோன்றிற்று.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் யாருடனும் சேராமல் தனித்து வாழ்ந்த படியால், அவர்களைச் சுற்றியிருந்த மற்ற மக்கள் சிறு கூட்டமான அவர்களைப் பயமுறுத்தி வந்தனர். யூதர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையும் சன்மார்க்க வாழ்க்கையும் சீர்கெட்டுப் போயிருந்தன.

தீர்க்கதரினம்

எஸ்றாவின் புத்தகத்தில் இஸ்ரவேலரின் சீர்கெட்டுப் போன **ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அடையாளமாக இடிந்து போன ஆலயத்தைக்** காண்கிறோம். **நெகேமியாவின் புத்தகத்தில் அவர்களுடைய சீர்கேடான அரசியல் வாழ்விற்கும் சமுதாய வாழ்விற்கும் அடையாளமாக இடிந்து போன மதிலைப் பார்க்கிறோம். மல்கியாவின் புத்தகத்தில் அவர்களுடைய வீழ்ச்சியுற்ற ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அடையாளமாக முறிக்கப்பட்ட உடன்படிக்கையைக்** காண்கிறோம்.

கடவுள் இஸ்ரவேலருடன் கொண்டிருந்த உடன்படிக்கை உறவே மல்கியாவுக்கு அவர் கொடுத்த செய்திக்கு அடிப்படையாக அமைகிறது. மற்ற தீர்க்கதரிசிகளைப் போல மல்கியா ''கர்த்தர் சொல்லுகிறதாவது'' என்று சொல்லவில்லை. கர்த்தரே நேரடியாக மக்களுடன் பேசுகிறார். மொத்தம் உள்ள **55** வசனங்களில் **47** வசனங்கள் கடவுள் தன்மையில் பேசுவதாக அமைந்துள்ளன. இது மல்கியாவில் மட்டும் காணப்படும் சிறப்பாகும். தீர்க்கதரிசனமானது உரையாடல் போல அமைந்துள்ளது. மக்களைச் சிந்திக்கும் திறன் பெற்ற, சுதந்தரமுள்ள தனிநபர்களாகக் கருதிப் பேசுகிறார். அவர்களிடமிருந்து பதிலை எதிர்பார்த்துக் கேள்விகள் கேட்கிறார். அவர்கள் கேள்வி கேட்கிறார்கள்; அவர் அவற்றுக்குப் பதிலளிக்கிறார். இந்தப் புத்தகத்தில் **23** கேள்விகள் வருகின்றன.

மல்கியாவின் தரிசனம் **தேவனுடைய உடன்படிக்கை**

**அன்பை** வலுயுறுத்துகிறது. தங்களுடைய கடினமான சூழ் நிலைகள் மற்றும் பயத்தின் காரணமாக அவர்கள் தேவன் தங்களைச் சிநேகிப்பது உண்மைதானோவென்று சந்தேகம் கொண்டிருந்தனர். மல்கியாவின் மூலம் தேவன் அவர்கள் மேல் தாம் கொண்டிருந்த அன்பை உறுதிப்படுத்தியதோடு, அந்த அன்பின் பின்னணியில் அவர்களது வீழ்ச்சிகளை யும் அவர்களுக்குச் சுட்டிக் காட்டினார். அந்த அன்பின் நிமித்தமாக அவர்களுக்கு மீட்பும், மீண்டும் சீரடைதலும் உண்டு என்றும் கூறினார்.

இந்தத் தீர்க்கதரிசனமானது **தேவனுடைய மக்களின் வீழ்ச்சிகளைப்** - ஆவிக்குரிய வாழ்வில் வீழ்ச்சி, ஆண்ட வருக்கு ஊழியம் செய்வதில் வீழ்ச்சி, குடும்ப வாழ்வில் வீழ் ச்சி மற்றும் விசுவாசத்திலும் அர்ப்பணத்திலும் வீழ்ச்சி - பற்றிப் பேசுகிறது. ஆனால் இந்த எல்லா வீழ்ச்சிகளைக் காட்டிலும் பெரிதான வீழ்ச்சி அவர்கள் தேவனுக்குப் பயப் படவில்லை என்பதே ஆகும். மல்கியா நூலின் முக்கிய வாக்கியம் **1:6**, "குமாரன் தன் பிதாவையும் ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம் பண்ணுகிறார்களே; நான் பிதா வானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக் குப் பயப்படும் பயம் எங்கே?" இந்த நூலின் முக்கிய பொருள் **முறிக்கப் பட்ட உடன்படிக்கையும், அந்த உடன்படிக்கையை மீண்டும் நிலைநாட்டும் தேவனு டைய உடன்படிக்கை அன்புமாகும்.**

மல்கியாவின் கரிசனை இஸ்ரவேல் மக்கள் மேல் மட்டும் இருப்பது போல் தோன்றுகிறது. ஏனெனில் முறிக் கப் பட்ட உடன்படிக்கை உறவை மீண்டும் சீர்ப்படுத்தி மக்களைக் கடவுள் பக்கமாகத் திருப்புவது மட்டுமே அவரது நோக்கமாயிருந்தது. ஆனால், அதற்காக மல்கியாவுக்கு மற்ற மக்களைப் பற்றிய கரிசனையே இல்லை என்று கூறிவிட முடியாது. அவருடைய மிஷனெரி பாரத்தை **1:5, 11, 14** மற்றும் **3:12** ஆகிய வசனங்களில் காணலாம். யெகோவா

வின் ஆளுகை இஸ்ரவேலின் எல்லைகளைக் கடந்து மற்ற மக்களின் மேலும் இருந்தது. அவர்களும் அவரை ஏற்றுக் கொண்டு, அவருக்குப் பயந்து, அவரைத் தொழுதுகொள் ளும் காலம் வரும். ஏசாயா, எரேமியா மற்றும் ஆமோஸ் போன்று பரந்த கருத்துகளை முன்னுரைத்த தீர்க்கதரிசி யல்ல மல்கியா என்றும், அவர் ஒரு தீர்க்கதரிசி என்பதை விட நியாயப் பிரமாணத்திலும் மதச் சடங்காசாரங்களிலும் அதிக நாட்டம் கொண்ட ஒரு வேதபாரகர் என்று கூறுவதே பொருந்தும் என்றும், பிற்கால யூத சமயத்துக்கு இவரே வழி வகுத்தார் என்றும் சிலர் கருதுகின்றனர். இது உண்மையான கருத்து அல்ல; ஏனெனில் மக்கள் ஆண்டவரைக் கனம் பண்ண வேண்டும், அவரோடு உள்ள தனிப்பட்ட உறவில் மீண்டும் சீர்பொருந்த வேண்டும் என்பதே அவரது முழு பாரமாயிருந்தது.

***நமக்குச் சொல்வது என்ன?***

**ஆண்டவருடன் உள்ள நமது தனிப்பட்ட உறவில் ஏற்படும் தோல்வியானது, மற்ற எல்லா உறவுகளிலும், நமது வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் தோல்வி யைக் கொண்டு வரும்.** தேவன் நம்மை நேசிக்கிறார், அவ ருடன் தனிப்பட்ட விதத்தில் உறவு கொண்டு வாழும்படி யாக நம்மைத் தெரிந்தெடுத்துள்ளார். இந்த உறவிலே நாம் அவரை நேசிக்க, கனம் பண்ண, அவருக்கு ஊழியம் செய்ய அழைக்கப்படுகிறோம். ''இப்பொழுதும் இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளி லெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்பு கூர்ந்து, உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவ னாகிய கர்த்தரைச் சேவித்து, நான் இன்று உனக்குக் கற் பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்ட ளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ள வேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்'' (உபாகமம் ***10:12, 13***).

நமது தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், ஆலயத்துக்கடுத்த காரியங்களிலும், சமுதாய வாழ்விலும் காணப்படும் சன்மார்க்க, ஆவிக்குரிய தோல்விகளுக்கெல் லாம் காரணம் தெய்வ பயமின்மையே ஆகும். தேவன் நமக்கு மெய்யானவராக இல்லாதபோது, நமது வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் அவருடைய பிரசன்னத்தை நாம் உணர முடியாதபொழுது, நாமே சுயமாகத் தெரிந்தெடுப்பு களையும் தீர்மானங்களையும் செய்ய ஆரம்பிக்கிறோம். அவரை நாம் கலந்தாலோசிப்பதில்லை. சுயநல நாட்டங்க ளும் கிறிஸ்தவத்திற்கு முரணான கலாச்சாரக் கொள்கைக ளும், பாவமான பழக்க வழக்கங்களும் நமது தெரிந்தெடுப் புகளையும், தீர்மானங்களையும் ஆட்கொள்ளுகின்றன. ஆகையினால்தான் நாம் நமது ஆவிக்குரிய வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமுதாய வாழ்விலும் தேவனைக் கனம் பண்ணுவதில்லை. நம்மிடையே தெய்வ பயம் இருக்குமா னால் நமது குடும்பவாழ்வில் சீரழிவுகள் காணப்படாது. நமது ஆலயங்களில் சண்டை சச்சரவுகளும், வழக்குகளும் இருக்காது. ஏழை எளியோரையும், ஒடுக்கப் பட்டோரையும் சுரண்டுவதும் நின்று போகும்.

இரண்டு அடிப்படையான சத்தியங்களை நாம் கவனிக்க வேண்டும். **ஒன்று, ஆண்டவருடன் நாம் கொண்டுள்ள உறவு நமது ஆராதனை, உபவாசம், ஜெபம் இவற்றோடு மட்டும் நின்று விடக் கூடாது.** அது நமது திருமண உறவிலும், கொடுக்கல் வாங்கல்களிலும், நமது வீடுகளில் குடியிருப்போர் மற்றும் நம் கீழ் வேலை செய்வோருடன் நாம் கொண்டுள்ள உறவுகளிலும் வெளிப் பட வேண்டும். நம்முடைய பக்தியைக் கண்டு மட்டும் திருப்தி அடைந்து விடுபவரல்ல நமது ஆண்டவர். நாம் திரு மண உறவில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டு மென்றும், சமுதாய உறவுகளில் நீதியுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்றும் அவர் எதிர்பார்க்கிறார். இரண்டாவ தாக, **பழைய ஏற்பாட்டின் மற்ற தீர்க்கதரிசிகளைப்**

போலவே மல்கியாவும், சமூக நீதி, நியாயம் மற்றும் நேர்மை ஆகியவற்றை தேவ மக்களின் உடன்படிக்கை உறவோடு இணைத்துப் பேசுகிறார். செங்குத்தான உறவு சரியாயிராவிட்டால், கிடைமட்டமான உறவுகள் நிச்சய மாக சரியாயிராது. ஆண்டவருடன் உடன்படிக்கை உறவு கொண்டுள்ள மக்களிடம்தான் நியாயம் வேண்டி முறையி டுகிறார் தீர்க்கதரிசி. உடன்படிக்கைக்குப் புறம்பாக இருக் கும் மக்கள் தேவனுடைய நீதியையும் நியாயத்தையும் அறிய வேண்டுமானால், முதலாவது நீதியும் நியாயமும் உள்ள தேவனை அவர்கள் அறிய வேண்டும்.

ஆண்டவர் நமது ஆவிக்குரிய வாழ்வில் மட்டுல்ல, நமது முழு வாழ்விலும் அக்கறையுள்ளவராக இருக்கிறார் என்பதே மல்கியா நமக்குத் தெளிவாக அளிக்கும் செய்தி யாகும். நமது தனிப்பட்ட வாழ்விலும், பொருளாதார வாழ் விலும், பாலுறவிலும், திருமண உறவிலும், வியாபாரத்தி லும், தொழிலிலும், சமுதாய உறவுகளிலும் அவரே ஆண் டவர் என்பதை ஒப்புக் கொண்டு நமது வாழ்வின் எல்லாப் பகுதிகளையும் அவருக்கு முற்றிலுமாக அர்ப்பணம் செய்ய அழைக்கப் படுகிறோம். அவரையே கனம் பண்ண வேண் டும், பிரியப்படுத்த வேண்டும் என்ற வாஞ்சையானது இவ் வித அர்ப்பணத்தைத் தொடர வேண்டும். தேவனுக்குப் பயப்படுதல் என்பது அவருக்கு அஞ்சி நடுநடுங்கி வாழுதல் என்று பொருள்படாது. அது அன்பினால் வரும் பயம், அதாவது அவரை எங்கே துக்கப்படுத்தி விடுவோமோ என் கிற பயம். அது பவுலுடன் சேர்ந்து நாமும், ''நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற் போனாலும் அவருக்குப் பிரி யமானவர்களாயிருக்க நாடுகிறோம்'' (II கொரிந்தியர் 5:9) என்று கூறுவதாகும்.

## அதிகாரம் 1

# கடவுள் உன்னை நேசிக்கிறார்

கடவுள் தமது மக்களோடு ஓர் உடன்படிக்கை செய்துள்ளார் என்ற சத்தியமே மல்கியா நூலின் போதனைக்கு அடிப்படையாக அமைகிறது. இந்த நூல் கடவுளுடைய அன்பின் அறிவிப்போடு ஆரம்பிக்கிறது, உடன்படிக்கையின் நிபந்தனைகளாகக் கொடுக்கப்பட்ட நியாயப் பிரமாணத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற அழைப்போடு முடிவு பெறுகிறது. தேவனுக்குக் கீழ்ப்படிவதிலும் அவரைக் கனம் பண்ணுவதிலும் வெளிப்படுகின்ற ஜீவனுள்ள உறவு வலியுறுத்தப் படுகிறது.

### உடன்படிக்கை அன்பு 1:1-5

தங்களைத் தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டிருந்த அண்டை நாடுகளின் மத்தியில் இஸ்ரவேல் மக்கள் ஒரு சிறு கூட்டமாயிருந்த காலம் அது. மேலும் அவர்கள் பொருளாதாரத்திலும் நலிவுற்றுப் போயிருந்தனர். இதையெல்லாம் பார்க்கும் பொழுது அவர்களுக்கு தேவன் தங்களை உண்மையிலேயே நேசிக்கின்றாரா என்ற சந்தேகம் வந்துவிட்டது. தேவன் தங்களை நேசித்ததினால்தான் தங்களைச் சிறையிருப்பிலிருந்து மீட்டுக் கொண்டு வந்து, ஆலயத்தையும் எருசலேமின் மதில்களையும் மீண்டும் கட்ட உதவி செய்தார் என்பதை அவர்கள் மறந்து விட்டனர்.

சூழ்நிலைகளை நோக்கி தேவனுடைய அன்பைச் சந்தேகிக்கும் தவறை இஸ்ரவேலர்கள் மட்டும் செய்யவில்லை. நாம் எதிர்பார்த்தபடி காரியங்கள் நடைபெறாமல் போகும் பொழுது நாமும் இதே தவறைச் செய்யச் சோதிக்கப்படுகிறோம், இல்லையா? சிறுமி சூசன் தன் தாயிடம், ''அம்மா நீங்கள் என்னை உண்மையாகவே நேசிக்கிறீர்களா?'' என்றாள். தாயார், ''நிச்சயமாகவே உன்னை நேசிக்கிறேன், என் கண்மணியே, அது உனக்குத் தெரியாதா, என்ன?'' என்று பதிலளித்தார். சூசன் மீண்டும் கேட்டாள் : ''அம்மா, நீங்கள் என்னை நேசிப்பது உண்மையானால், எனக்கு 'சாக்லேட்' தருவீர்களா?'' தாயார் கூறினார்கள் : ''நிச்சயமாக நான் உனக்கு 'சாக்லேட்' வாங்கித் தருவேன். எத்தனையோ முறை நான் உனக்கு வாங்கித் தந்திருக்கிறேன், இல்லையா?'' சூசன், ''அம்மா, எனக்கு காலை, மாலை, மதிய உணவு நேரங்களில் எல்லாம், உணவுக்குப் பதிலாக 'சாக்லேட்' தருவீர்களா?'' என்று கேட்டாள். தாயாருக்கு அவள் என்ன சொல்கிறாள் என்பது புரிந்து விட்டது. உடனே, ''இல்லை, நீ உன் ஆகாரத்தைச் சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும்'' என்று கண்டிப்புடன் கூறிவிட்டார்கள். சூசன் அலறி அழ ஆரம்பித்து விட்டாள், ''அம்மா, நீங்கள் என்னை நேசிக்கவேயில்லை.'' என்று கூறினாள். பல வேளைகளில் நாமும் இப்படித்தான் நடந்து கொள்கிறோம், இல்லையா? தேவன் நமதுமேல் வைத்துள்ள அன்பை, நமக்கு என்ன சம்பவிக்கிறது, நமக்கு என்ன கிடைக்கிறது அல்லது கிடைக்கவில்லை என்கிற அடிப்படையிலே மதிப்பிடுகிறோம்.

தேவனுடைய அன்பு மாறாதது. நம்முடைய நடத்தையைப் பொறுத்தோ அல்லது சூழ்நிலைகளைப் பொறுத்தோ அது மாறுவதில்லை. ''நீ எனக்கு நல்லவனாயிருந்தால் நானும் உனக்கு நல்லவராயிருப்பேன், நீ கெட்டவனானால் நானும் உனக்குத் தீங்கு செய்வேன்'' என்று தேவன் ஒரு போதும் செல்வதில்லை. ''நாம் பாவிகளாயிருக்கையில்

கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்'' (ரோமர் 5:8) என்று அவருடைய வசனம் கூறுகிறது. தேவன் நீதியுள்ள வராகவும் அவருடைய பிரமாணங்கள் நியாயமுள்ளவையா கவும் இருப்பதினால் நம்முடைய பாவத்திற்குப் பின் விளை வுகள் உண்டு. ஆனால் அது தேவன் நம்மை நேசிக்கிறார் என்ற உண்மையை ஒருபோதும் மாற்றிப் போடுவதில்லை. தேவன் தமது ஜனங்களாகிய இஸ்ரேவேலரிடம் அவர்க ளது வழிகள் தமக்குப் பிரியமற்றவையாக இருந்த போதி லும், அவர்களுடைய தோல்விகளைத் தாம் சுட்டிக் காட்டிய போதிலும் இன்னும் அவர்களை நேசிப்பதாகவே கூறுகி றார். ஆகையினால் தான் மல்கியாவின் தீர்க்கதரிசனம் தேவனுடைய அன்பை எடுத்துக் கூறுவதுடன் ஆரம்பமாகி றது. கிறிஸ்தவப் பிரசங்கிமார்களுக்கு ஏற்ற ஒரு பாடம் இங்கே காணப்படுகிறது. தேவனுடைய அன்பைச் சுட்டிக் காட்டாதபடி, அவருடைய நியாயத் தீர்ப்பைக் குறித்து நாம் ஒருபோதும் பிரசங்கிக்கக் கூடாது. ஒரு ஞாயிறு காலை ஆராதனையில் தாம் நரகத்தைப் பற்றிப் பிரசங்கித்ததாக ஓர் இளம் போதகர் தமது மூத்த உடன் ஊழியரிடம் கூறி னார். அதற்கு அந்த மூத்த தேவனுடைய மனிதர் ''நீ அதை உன் கண்களில் கண்ணீரோடும் இதயத்தில் பொங்கி வழி யும் அன்போடும் பிரசங்கித்தாயா? அதுவே ஆண்டவரின் வழி'' என்று சொன்னார்.

## *1. அன்பு அறிவிக்கப்பட்டது 1:1-2அ*

''மல்கியாவைக் கொண்டு கர்த்தர் இஸ்ரவேலுக்குச் சொன்ன வார்த்தையின் பாரம். நான் உங்களைச் சிநேகித் தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.''

தேவன் தமது அன்பை எடுத்துக் கூறி இஸ்ரவேலரு டன் பேச ஆரம்பிக்கிறார். அவர் தமது மக்களுடன் தமது அன்பின் அடிப்படையில் இடைபடுகிறார் என்பதை இது காட்டுகிறது.

**தேவன் அன்பின் அடிப்படையில் தமது மக்களிடம் தொடர்பு கொள்ளுகிறார்.** அவர் பேசமுடியாத ஊமையான தேவன் அல்ல. அவர் நம்மை நேசிப்பதினாலே நம்மோடு பேசுகிறார். அவர் நம்மோடு தொடர்பு கொள்ளும் பொழுது நம்முடைய ஆள்தத்துவத்தை மதித்து, சிந்தனைத் திறன் படைத்த சுதந்தர மனிதர்களாக நம்மைப் பாவித்து நடத்துகிறார். அவர் நம்முடைய சிந்தை, மனச்சாட்சி, உணர்ச்சி, சித்தம் ஆகிய அனைத்தையும் தொட விரும்புகிறார். அவர் தமது வசனத்தின் மூலமும் தமது ஆவியானவர் மூலமும் நம்முடன் பேசுகிறார். அவர் தாம் மட்டுமே பேசிக் கொண்டிருப்பதில்லை. நம்மைக் கேள்வி கேட்கிறார், நம்மிடமிருந்து பதில் வர வேண்டுமென்று எதிர் பார்க்கிறார். ஆதாம் பாவம் செய்துவிட்டு ஒளித்துக் கொண்டபொழுது தேவன் அவரைத் தேடிவந்து, ''நீ எங்கே இருக்கிறாய்?'' என்று கேட்டார் (ஆதியாகமம் 3:9). ஆதாம் எங்கே இருந்தார் என்பது தேவனுக்குத் தெரியாதா? நிச்சயமாக அவருக்குத் தெரியும். ஆனால் ஆதாம் தம் மறைவிடத்தை விட்டு வெளியே வந்து தம்முடன் பேச வேண்டுமென்று அவர் விரும்பினார். காயீன் தன் சகோதரனாகிய ஆபேலைக் கொலை செய்தபொழுது தேவன், ''உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே?'' (ஆதியாகமம் 4:9) என்று காயீனிடம் கேட்டார். உயிர்த்தெழுந்த ஆண்டவர் தமஸ்குவுக்குப் போகிற வழியில் சவுலைச் சந்தித்தபொழுது, ''சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப் படுத்துகிறாய்?'' (அப்போஸ்தலர் 22:7) என்று கேட்டார். இந்தக் கேள்விகள் எல்லாமே தேவன் சந்தித்தவர்களிடமிருந்து பதில் வர வேண்டும் என்ற நோக்கத்துடனே கேட்கப்பட்டன.

**தேவன் தம் மக்களுடன் அன்பின் அடிப்படையிலே இடைபடுகிறார்.** அவர் நம்மோடு இடைபடும் விதத்தை நாம் எப்பொழுதும் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் அவருடைய அன்பைப் பற்றி நிச்சயமுள்ளவர்களாயிருக்கலாம். சில நேரங்களில் அவர் நம்மைக் கடினமாக

நடத்துவது போலத் தோன்றினாலும் கூட அதற்குப் பின் னால் அவருடைய மாறாத அன்பு இருக்கிறது. அவர் நம் மைச் சிட்சிப்பதும் கூட அன்பின் காரணமாகத்தான். ''கர்த் தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்'' (எபிரெயர் 12:6). ''அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய்த் தேவனிடத் தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏது வாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்'' (ரோமர் 8:28).

தேவன் தமது மக்களிடம் அவர்களது தவறுகளைச் சுட் டிக் காட்டி, அவர்களை எச்சரிப்பதற்கு முன், தாம் அவர்கள் மேல் வைத்துள்ள அன்பை உறுதிப்படுத்தினார்.

## 2. அன்பு சந்தேகிக்கப்பட்டது 1:2ஆ

''நீங்கள்: எங்களை எப்படிச் சிநேகித்தீர் என்கிறீர்கள்.''

மக்கள் தேவனுடைய அன்பைச் சந்தேகித்தார்கள், அதைத் தேவன் அறிந்திருந்தார். நாமும் சந்தேகமும் அதி ருப்தியும் கொண்டு முறுமுறுப்பதை அவர் கேட்டுக் கொண்டுதானிருக்கிறார். நாம் துன்பப் படும் பொழுதும் வேதனையை அனுபவிக்கும்பொழுதும் ''தேவன் எங்கே?'' என்று கேட்கிறோம். அவரது அன்பைச் சந்தேகிக்கிறோம்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்திருந்த மக்களுக்கு அது ஒரு கடினமான காலமாயிருந்தது. சுற்றிலும் பகைவர் களால் சூழப்பட்டிருந்தனர்; எண்ணிக்கையில் சொற்பமாயி ருந்தனர்; ஏழைகளாக இருந்தனர்; சூழ்நிலைகள் எல்லாம் அவர்களுக்குப் பாதகமாயிருந்தன. தேவனுடைய வல்லமை விளங்கும்படியான வெளிப்பாடுகளோ மகிமையான அற் புதங்களோ அவர்களது முன்னோர் காலத்தோடு முடிவ டைந்து விட்டது போல் தோன்றிற்று. எனவே அவர்கள் தேவன் தங்களை மறந்து விட்டாரென்று எண்ணி அவரது அன்பைச் சந்தேகித்ததில் வியப்பேதுமில்லை.

## 3. அன்பு விளக்கிக் காட்டப்பட்டது 1:3-5

அவர்களுடைய கேள்விக்கு தேவன் அளித்த பதில் விந்தையாகத் தோன்றுகிறது. அவர் சரித்திரத்தில் பின்னோக்கிச் சென்று தாம் யாக்கோபைத் தெரிந்து கொண்டதைக் குறிப்பிடுகிறார். ''கர்த்தர் சொல்லுகிறார் : ஏசா யாக்கோபுக்குச் சகோதரன் அல்லவோ? ஆகிலும் யாக்கோபை நான் சிநேகித்தேன். ஏசாவையோ நான் வெறுத்தேன்; அவனுடைய மலைகளைப் பாழும் அவனுடைய சுதந்தரத்தை வனாந்தரத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தாவும் ஆக்கினேன்'' *(1:2,3)*.

தேவனுடைய உடன்படிக்கை அன்பு வெளிப்படையான ஒரு காரியத்தின் மூலம் விளக்கிக் காட்டப் படுகிறது. இந்த வெளிப்படையான காரியத்தை நாம் விசுவாசிக்கும் பொழுது அவருடைய அன்பைப் பற்றிய நிச்சயம் நம் உள்ளத்தில் ஏற்படுகிறது. இஸ்ரவேலரின் முற்பிதாவான யாக்கோபைத் தாம் தெரிந்து கொண்டதை தேவன் இங்கே குறிப்பிடுகிறார். ''சிநேகித்தேன்'' என்ற சொல் தேவனுடைய தெரிந்து கொள்ளும் அன்பைக் குறிக்கிறது. தெரிந்து கொள்ளுதலின் அடிப்படையில் தான் ''வெறுத்தேன்'' என்ற பதத்தையும் பொருள் கொள்ள வேண்டும். அதாவது தேவன் பாரபட்சமுள்ளவராக, யதேச்சாதிகாரமாக, ஏசாவை வெறுத்துத் தள்ளிவிடவில்லை. தேவன் ஏசாவைத் தெரிந்து கொள்ளவில்லை என்பது மட்டுமே இதன் பொருளாகும். அவருக்கு அவன்மீது தனிப்பட்ட விதத்தில் எவ்விதப் பகையுணர்வும் கிடையாது. தேவன் பட்சபாதமற்றவர். மற்றோர் இடத்திலும் ''வெறுத்து'' என்ற சொல்லின் பொருளைக் காணலாம். நமது ஆண்டவர் கூறினார் : ''யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும் தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்'' (லூக்கா 14:26). இங்கே பயன்

படுத்தப் பட்டுள்ள ‘‘வெறுத்தல்’’ என்ற சொல்லின் பொருள் ‘‘தள்ளி விடுதல்’’ என்பதல்ல. அதன் பொருள் ‘‘ஒன்றை விட அடுத்ததைக் குறைவாக நேசித்தல்’’ என்பதாகும். நமது உற்றார் உறவினரைக் கைவிட்டு விடவேண்டும் என்று இது பொருள்படவில்லை, ஆனால் அவர்கள் எல்லாருக்கும் மேலாக இயேசுவை நேசிக்க வேண்டும் என்று பொருள்படும். அதே விதமாகத்தான் தேவனும் ஏசாவை விட யாக்கோபை நேசித்து அவனைத் தெரிந்து கொண்டார்.

இரண்டாவதாக, யாக்கோபிடமிருந்த நற்குணத்திற்காக தேவன் அவனைத் தெரிந்து கொள்ளவில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். ‘‘சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள் பேரில் அன்பு வைத்து, உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள். கர்த்தர் உங்களில் அன்பு கூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்க வேண்டும் என்பதினாலும்...’’ (உபாகமம் 7:7, 8). ‘‘ஆனாலும் கர்த்தர் உன் பிதாக்கள் மேல் அன்பு கூரும்பொருட்டு, அவர்களிடத்தில் பிரியம் வைத்து, அவர்களுக்குப் பின் அவர்களுடைய சந்ததியாகிய உங்களை, இந்நாளில் இருக்கிறபடியே, சகல ஜாதிகளுக்குள்ளும் தமக்கென்று தெரிந்து கொண்டார்’’ (உபாகமம் 10:15).

மூன்றாவதாக, தெரிந்து கொள்ளப்படுதலில் சில பொறுப்புகள் உண்டு என்று நாம் பார்க்கிறோம். அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அவரைக் கனம் பண்ண வேண்டும், அவருக்குச் சாட்சிகளாய் இருக்க வேண்டும். ‘‘நானே அவரென்று நீங்கள் உணர்ந்து, என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு, நீங்களும் நான் தெரிந்து கொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்’’ (ஏசாயா 43:10). அவர்கள் தங்கள் பொறுப்பிலிருந்து தவறியபோது, தண்டிக்கப் பட்டனர். ‘‘பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம்

அறிந்து கொண்டேன்; ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்'' (ஆமோஸ் *3:2*). தேவனால் தெரிந்து கொள்ளப் பட்டவர் களாகத் தங்கள் பொறுப்பிலிருந்து தவறியபொழுது அவர் கள் சிறையிருப்புக்கு ஆளாயினர்.

ஏசாவின் சந்ததியாராகிய ஏதோமியர் சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுக்கப் படவில்லை. ஆனால் அவர்கள் தங்கள் பாவங்களுக்காகவும், அக்கிரமங்களுக்காகவும் தண்டனை அடைந்தனர். அவர்களுடைய பிரதான பாவம் என்ன வென்றால் இஸ்ரவேல் மக்களைப் பகைத்ததேயாகும். பாபி லோனியர்கள் இஸ்ரவேலரைச் சிறைபிடித்துச் சென்ற போது ஏதோமியர் பாபிலோனியரை ஆதரித்தனர் (ஒபதியா *10-14* வசனங்கள்). ''நீ எதிர்த்து நின்ற நாளிலும், அந்நியர் அவன் சேனையைச் சிறை பிடித்துப் போன நாளிலும், மறுதேசத்தார் அவன் வாசல்களுக்குள் பிரவே சித்து எருசலேமின் பேரில் சீட்டுப் போட்ட காலத்தில், நீயும் அவர்களில் ஒருவனைப் போல் இருந்தாய்'' (ஒபதியா, வசனம் *11*). படையெடுத்து வந்தவர்களுக்கு இரகசிய உள வாளிகளாகச் செய்திகள் கொடுத்து உதவிய ஏதோமியர் இஸ்ரவேலர் தப்பித்துக் கொள்ளக் கூடிய எல்லா வழிகளை யும் அடைத்துப் போட்டனர். யூதர்களைக் கொள்ளையடித் ததோடு, யூதர்கள் விட்டு ஓடிப் போன இடங்களில் தாங்கள் குடியேறி விட்டனர். இஸ்ரவேலர் கானான் தேசத்தை நோக்கிப் பிரயாணமாய்ச் சென்றபோதும் இதேவித பகை மையுணர்வோடு தான் செயல் பட்டிருந்தார்கள். ஏதோமியர் தங்கள் நாட்டின் வழியே இஸ்ரவேலர் கடந்து செல்வதற்கு அனுமதிக்க மறுத்து விட்டனர் (எண்ணாகமம் *20:18-21*). இவ்விதமாக ஏசாவும் அவனுடைய சந்ததியினரும் தேவனு டைய யதேச்சாதிகாரமான முடிவினால் தண்டிக்கப்படா மல், தங்களுடைய பாவத்திற்கும், தேவனுக்கு எதிரான கல கத்திற்கும் ஏற்றபடி தண்டிக்கப் பட்டனர். மல்கியா தம் நூலை எழுதியபோது வனாந்தரத்திலுள்ள நேபாத்தியர் ஏற்

கனவே படையெடுத்து வந்து, ஏதோமைச் சூறையாடி தரை மட்டமாக்கி விட்டிருந்தனர். ''அவனுடைய மலைகளைப் பாழும், அவனுடைய சுதந்தரத்தை வனாந்தரத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தாவும் ஆக்கினேன்'' (1:4). இதைக் காணும் இஸ்ரவேலர், ''கர்த்தர் இஸ்ரவேலுடைய எல்லை துவக்கி மகிமைப் படுத்தப் படுவார்'' என்பார்கள் (1:5). தேவன் தமது நோக்கங்களை இஸ்ரவேலின் எல்லைகளுக்கு அப்பாலும் நிறைவேற்றுவார். எவ்வளவு சிறந்த மிஷனெரி வசனம் இது!

தேவன் நமதுமேல் வைத்திருக்கும் அன்பு இரண்டு காரியங்களில் திட்டவட்டமாக வெளிப்படுகிறது. ஒன்று அவருடைய வசனம், அடுத்தது அவருடைய சிலுவை. அவருடைய வசனம் அவரது அன்பை எடுத்துக் கூறுகிறது, அவருடைய சிலுவை அதைச் செயல்முறையில் எடுத்துக் காட்டுகிறது. ''நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது (I யோவான் 4:10). ''நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்'' (ரோமர் 5:8). நமது சூழ்நிலைகள் ஒருவேளை பாதகமாக இருக்கலாம், நமக்கு இவ்விதம் நடக்க தேவன் ஏன் அனுமதித்தார் என்று நாம் எண்ணிச் சோர்வுறும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கலாம். என்றாலும் அதன் மத்தியிலும் அவருடைய வசனமும், அவருடைய சிலுவையும் அவருடைய அன்பு மாறாதது, நித்தியமானது என்று கூறுவதினால் நாம் நிச்சயம் கொள்ளலாம். அந்த நிச்சயத்தின் அடிப்படையிலே அவர் நம்மோடு இடைபடுவதற்கு நாம் இணங்கி இடம் கொடுக்க முடியும்.

## அதிகாரம் 2

# தகுதியற்ற பலிகள்

பாவம் என்ற ஒன்று கிடையவே கிடையாது என்று தம் வேதபாட வகுப்பு ஆசிரியரிடம் வாதிட்டுக் கொண்டிருந்தார் ராஜூ. கலாச்சாரம் மற்றும் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்ட விதிகள் தாம் மனிதனுடைய நடத்தைக்கு அடிகோலாக அமைகின்றன என்பது அவரது வாதம். ஒரு சந்ததியினரால் பாவம் என்று கருதப்பட்டது அடுத்த சந்ததியினரைப் பொறுத்தமட்டில் பாவமாகக் கருதப் படாமல் போகலாம் என்று அவர் கூறினார். அதே வகுப்பில், குற்றவுணர்வு என்பது மனத்தில் எழும் ஒரு உணர்வு மட்டுமே, ஒரு நபர் ஓர் ஆலோசகரிடமோ அல்லது ஒரு போதகரிடமோ சென்று தம் குற்றத்தை அறிக்கையிட்டு விட்டால் உடனே அவருக்கு மன அமைதி கிடைத்து விடும் என்று சுனில் கூறினார். இந்துமத தத்துவ ஞானியும் முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவருமான டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், ''நன்மை என்ற இலக்கை அடைய இன்னும் எவ்வளவு தூரம் செல்லவேண்டும் என்பதைக் குறிப்பதே தீமையாகும். தவறு என்பது சத்தியத்தை நாடிச் செல்லும் வழியில் ஒரு மைல்கல் மட்டுமே'' என்று கூறியுள்ளார். ஆனால், பாவம் என்பது வெறும் உள்ளுணர்வல்ல, அது வாழ்வின் வெளிப்படையான ஒரு உண்மை அனுபவம் என்பதை வேதாகமம் வலியுறுத்துகிறது. அது

தேவனுக்கு எதிரான முரட்டாட்டம். பாவம் என்பது பரிசுத்தமும் நீதியுமுள்ள தேவனுடன் நமக்கு உள்ள உறவைப் பாதிப்பது. அவருடன் நமக்கிருக்கும் உடன்படிக்கையை முறித்துப் போடுவது.

ஆண்டவருடன் நமக்குள்ள தனிப்பட்ட உறவில் ஏற்படும் தோல்வி மற்ற எல்லா உறவுகளிலும், நமது வாழ்க்கையின் சகல பகுதிகளிலும் தோல்வியையும் வீழ்ச்சியையுமே கொண்டுவரும். இதைத்தான் மல்கியாவின் நூலில் நாம் பார்க்கிறோம். முறிந்த உடன்படிக்கையைப் பற்றி எழுதிவிட்டு, தேவ மக்களின் வீழ்ச்சிகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார் மல்கியா.

## முறிந்த உடன்படிக்கை *1:6-2:17, 3:5-15*

## ஆவிக்குரிய வாழ்வில் வீழ்ச்சி 1:6-2:3

தமது மக்கள் தம்மை நேசிக்க வேண்டும், தம்மைக் கனம் பண்ண வேண்டும், தமக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்பது கடவுளின் தெளிவான கட்டளை. அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் நுழைவதற்கு முன் அவர் சொல்லியிருந்தார் : *“இப்பொழுதும் இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்புகூர்ந்து, உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து, நான் இன்று உனக்குக் கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும், அவருடைய கட்டளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ள வேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்” (உபாகமம் 10:12,13)*. தேவனுக்குப் பயந்து, அவரைக் கனம் பண்ணத் தவறியதே அவர்களது அடிப்படைத் தோல்வியாகும். ஆகையினால் தான், ஆவிக்குரிய வாழ்வில் வீழ்ச்சியைப் பற்றிப் பேசும் பகுதியின் ஆரம்ப வரிகளாக வசனம் 6 வருகின்றது. “குமாரன் தன் பிதாவையும், ஊழியக்

காரன் தன் எஜமானையும் கனம் பண்ணுகிறார்களே; நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டை பண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்'' (1:6).

கடவுள் யோசேப்புக்கு இருந்ததைப் போல இஸ்ரவேலருக்கு மெய்யானவராக இல்லை.போத்திபாரின் மனைவி யோசேப்பைப் பாவம் செய்யத் தூண்டிய பொழுது, அவர், ''நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி?'' என்று சொல்லி சோதனை வந்த இடத்திலிருந்து விலகி ஓடித் தப்பித்துக் கொண்டார். அவ்வளவு பெரிய வீட்டில் தன்னைப் பாவம் செய்யத் தூண்டிய பெண்ணோடு தனியாயிருந்த வேளையிலும் கூட தேவனுடைய பிரசன்னத்தை அங்கே உணர்ந்தவராக, அவரைக் கனவீனம் பண்ண மனமற்றவராக விலகியோடினார். அதுதான் தேவனுக்குப் பயப்படும் பயம். ஆனால் இஸ்ரவேல் மக்களுக்கோ தேவனுடைய பிரசன்னம் மெய்யானதாயிருக்கவில்லை. அவர்கள் ஏதோ சடங்காசாரமான மதக் கட்டுப்பாடுகளுக்குள் சிக்கிக் கட்டுண்டு கிடந்தார்கள். அவர்களுக்குத் தேவனைப் பற்றிய பயமில்லை. இது அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் பிரதிபலித்தது. இந்த வீழ்ச்சியின் அடையாளங்களை நாம் கவனிப்போம்.

### 1. தவறான பலிகள் 1:6-12

''நீங்கள் கண் ஊனமானதைப் பலியிடக் கொண்டு வந்தாலும் அது பொல்லாப்பல்ல, நீங்கள் காலூனமானதையும் நசல் பிடித்ததையும் கொண்டு வந்தாலும் அது பொல்லாப்பல்ல என்கிறீர்களே; அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து, அவன் உன் மேல் பிரியமாயிருப்பானோ? உன் முகத்தைப் பார்ப்பானோ என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார்'' (1:8).

தேவன் தம்முடைய வசனத்தில் அவர்கள் பழுதற்ற விலங்கை மட்டுமே பலியாகச் செலுத்த வேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறியிருந்தார். ''அவன் செலுத்துவது மாட்டு மந்தையிலிருந்து எடுக்கப்பட்ட சர்வாங்க தகன பலி யானால், அவன் பழுதற்ற ஒரு காளையைச் செலுத்துவா னாக'' (லேவியராகமம் **1:3**). மற்ற பலிகளும் இதேவிதமாக பழுதற்றவையாக இருக்க வேண்டும் என்ற நியமத்தைக் காண்கிறோம் (யாத்திராகமம் **12:5**, லேவியராகமம் **1:10; 3:1, 6; 4:3; 5:15; 6:6**). கண் குருடானது, கால் ஊனமானது, நசல் கொண்டது ஆகிய மிருகங்களை அவர்கள் பலியிடக் கூடாது என்று தெளிவான கட்டளை பெற்றிருந்தனர். ''குருடு, நெரிசல், முடம், கழலை, சொறி, புண் முதலிய பழுதுள்ளவைகளை நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தாமலும் அவைகளாலே கர்த்தருக்குப் பலிபீடத்தின் மேல் தகன பலி யிடாமலும் இருப்பீர்களாக'' (லேவியராகமம் **22:22**). ''அதற்கு முடம் குருடு முதலான யாதொரு பழுது இருந்தால், அதை உன் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிட வேண் டாம்'' (உபாகமம் **15:21**). ஏன் அவர்கள் தவறான பலிக ளைச் செலுத்தினார்கள்? அப்படிச் செய்யக் கூடாதென்று அவர்களுக்குத் தெரியாதா? இப்படிப் பட்ட பழுதுள்ள பலி களைச் செலுத்தக் கூடாது என்று எச்சரித்த வேத வசனங் களை அவர்கள் நிச்சயமாக அறிந்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் தேவனுக்குப் பயப்படாததினால், அவ ருடைய பிரசன்னத்தை உணராததினால் அவருக்குக் கீழ்ப் படிய அக்கறை காட்டவில்லை. அவர்களுடைய மனப் பான்மை சரியாயில்லை. ''கர்த்தருடைய பந்தி எண்ணமற் றுப் போயிற்று'' (**1:7**) என்று அவர்கள் சொன்னார்கள். அவர்கள் தங்கள் அதிபதிக்குச் செலுத்தத் துணியாத பலிக ளைத் தேவனுக்குத் துணிந்து செலுத்தினார்கள். ஏனெனில் தேவனை விட அதிபதி அவர்களுக்கு மெய்யானவராகத் தெரிந்ததால், அவரைக் கனவீனம் பண்ணாமல் ஜாக்கிர தையோடு நடந்து கொண்டார்கள்.

மனத்தை வருத்தும் இவ்விதச் சூழ்நிலையின் நடுவில் மல்கியா ஒரு மகிமையான காட்சியைக் கண்டார். இப்படிப் பட்ட குறையுள்ள பலிகளெல்லாம் ஒரு குறைவுமற்ற, பரிபூரணமான பலியினால் ஈடு செய்யப்படுவதை அவர் முன்னறிந்தார். 1:11ல் ''சுத்தமான'' என்று மொழி பெயர்க்கப் பட்டுள்ள ''டாகோர்'' என்ற சொல் பரிபூரண பரிசுத்தத்தைக் குறிக்கும். அதாவது சன்மார்க்க ரீதியாகவும், சரீர ரீதியாகவும், சடங்காசார ரீதியாகவும் முற்றிலும் சுத்தமானது எனப் பொருள்படும். பொதுவாக ''டமின்'' என்ற பதம் தான் சடங்குப் பிரமாணங்களின்படி சுத்தமான பலிகளைக் குறிக்கப் பயன்படுத்தப்படும். லேவியரின் பலிகளைக் குறிக்க ''டாகோர்'' என்ற பதம் ஒருபோதும் பயன்படுத்தப் படவில்லை. ஆனால் தீர்க்கதரிசி மேசியாவின் வருகையிலே பூரணமான பலிகளும் சுத்தமான ஆராதனையும் மீண்டும் நிலை நாட்டப்படுவதை முன்னறிந்தவராக ''டாகோர்'' என்ற பதத்தை இங்கே பயன்படுத்தியுள்ளார்.

அதுமட்டுமல்ல, இவ்விதமான சுத்தமான காணிக்கையும் உண்மையான ஆராதனையும் சகல சாதிகளாலும் தேவனுக்கு ஏறெடுக்கப்படும் என்பதையும் அவர் தரிசனமாகக் கண்டார். தேவனுடைய நாமம் சகல சாதிகள் நடுவிலும் மகிமையடையும். ''சூரியன் உதிக்கிற திசை தொடங்கி, அது அஸ்தமிக்கிற திசை வரைக்கும், என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும்; எல்லா இடங்களிலும் என் நாமத்துக்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் செலுத்தப் படும்; என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்'' (1 :11).

இந்த வசனமானது, ஆராதனையானது உண்மையோடும் உத்தமத்தோடும் செய்யப்படுமானால் அது எந்த மதத்தின் பெயரால் எந்தக் கடவுளுக்கு நேராகச் செய்யப்பட்டாலும் உண்மையில் ஒன்றான மெய் தேவனையே சென்றடையும் என்று 'யுனிவர்சலிசம்' கொள்கையைப் போதிக்

கச் சிலரால் தவறாகப் பயன்படுத்தப் படுவதுண்டு. ஆனால், விக்கிரகவணக்கத்தாரின் பலிகளைக் கண்டனம் செய்யும் வேதாகமத்தின் போதனை இந்தக் கொள்கைக்கு எதிராயிருக்கிறது.

## 2. ஆத்மீக அலட்சியம் 1: 13

பின்வாங்குதல் என்பது எப்போதுமே வெளிப்படையான பாவம் அல்லது முரட்டாட்டமாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மிகச் சிறந்த நிலையில் இருந்து இரண்டாந்தரமான நிலைக்கு மெல்ல மெல்லச் சறுக்கிச் செல்வது பின் வாங்குதல் தான். ஆவிக்குரிய வீழ்ச்சியின் பாதையில் ஒவ்வொருபடியும் முந்தின படியை விட கீழே இறங்கிச் செல்வதாக அமைகிறது. தவறான காணிக்கைகளைச் செலுத்திய பின்பு இஸ்ரவேலர் செய்த தவறான காரியம் தேவனுக்கு ஏறெடுக்கப் படும் ஆராதனையை அவமதித்ததாகும்.

''இதோ, இது எவ்வளவு வருத்தமென்று சொல்லி, அதை ஒரு திரணமாய்ப் பேசி.....'' (1:13).

ஆராதனை பாரமாகி விட்டது! ''அதை ஒரு திரணமாய்ப் பேசி'' என்பது ''என்னைத் திரணமாய்ப் பேசி'' என்றும் மொழி பெயர்க்கப்படலாம். நமக்குத் தயவு காட்டுவது தேவனுடைய கடமை என்ற எண்ணம் நமக்கு வரும் போது, இவ்விதமான கவலையற்ற மனப்பான்மை தான் ஏற்படும். இதே மனப்பான்மை, ஒரு மனிதன் ''தேவன் என்னை மன்னித்து விடுவார், மன்னிப்பதைத் தவிர அவருக்கு வேறென்ன வேலை!'' என்று கூறும்போது வெளிப்படுகிறது.

இது அவமரியாதையைக் காட்டும் மனப்பான்மையாகும். தேவன் மேலுள்ள அன்பு குளிர்ந்து போகும்போது, ஊழியமும் ஆராதனையும் பாரமாகி விடுகின்றன. திருமண உறவிலும் இது உண்மையான ஒரு காரியம். ஆரம்ப நாட்

களிலே, அன்பு இன்னும் புதிதாயிருப்பதினால், கணவனும் மனைவியும் ஒருவருக்காக ஒருவர் எதையும் செய்ய ஆயத்தமாயிருக்கின்றனர். ஆனால் ஆண்டுகள் செல்லச் செல்ல, ஒரு சிறு காரியத்தை மற்றவருக்காகச் செய்வது கூட பாரமான வேலையாகிவிடுகிறது. சிறு சிறு எரிச்சல்கள் எல்லாம் பெரிய சண்டைச் சச்சரவுக்குரிய காரியங்களாகி விடுகின்றன. அதே விதமாகத் தான், கிறிஸ்தவ வாழ்விலும் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட ஆரம்ப நாட்களில் அவருக்காக எந்தக் கஷ்டத்தையும் சகிக்கத் தயாராக இருந்தோம். நாட்கள் ஆகஆக, அவரை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக விலகி, அவர் மேலுள்ள அன்பு குறைந்து, குளிர்ந்து போனதும் சிறு சிறு காரியங்களுக்கெல்லாம் முறுமுறுக்கத் தொடங்கி விட்டோம். ஆரம்ப நாட்களிலே ஊழியத்தில் எந்தக் கஷ்டத்தையும் உற்சாகத்தோடு ஏற்றுக்கொண்டோம். ஆண்டுகள் கழிய கழிய ஆண்டவர் மேலுள்ள அன்பு மங்கி, நம்முடைய பணக்கஷ்டங்களிலும் உறவுப் பிரச்சினைகளிலும் முறுமுறுக்க ஆரம்பித்து விட்டோம். ஆண்டவருக்கு ஊழியம் செய்வது பாரமாகி விட்டது. நமது ஊழியத்திலும் ஆராதனையிலும் சுவை குன்றி விட்டதானால் நாம் பின்வாங்கி விட்டோம் என்பதற்கு அது அறி குறி.

### *3.* உடைந்த பொருத்தனைகள் *1: 14*

''தன் மந்தையில் கடா இருக்கையில் கெட்டுப்போனதை ஆண்டவருக்கு நேர்ந்து கொண்டு பலியிடுகிற கபடஸ்தன் சபிக்கப்பட்டவன்; என் நாமம் ஜாதிகளுக்குள்ளே பயங்கரமாயிருக்கும்; நான் மகத்துவமான ராஜா என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்'' *(1:14)*.

இங்கே குறிப்பிடப்படும் காணிக்கை எண்ணாகமம் *30:2* லும் குறிக்கப்படுகிறது. ''ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொண்டாலும், அவன் சொல் தவறா

மல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக் கடவன்.''

தேவன் விடுதலை அருளுவாரானால் நான் இன்னதைச் செய்வேன் என்று மனோற்சாகமாக ஒரு நிர்ப்பந்தமான சூழ்நிலையின் மத்தியிலிருந்து செய்யப்பட்ட பொருத்தனையை இது குறிக்கிறது. ''கெட்டுப்போனதை'' என்பதை ''பழுதுள்ள பெண் மிருகத்தை'' என்றும் மொழி பெயர்க்கலாம்.

லேவியராகமம் 22:18, 19ல் ''இஸ்ரவேல் குடும்பத்தாரிலும் இஸ்ரவேலில் தங்குகிற அந்நியர்களிலும் தங்களுடைய பொருத்தனைகளின் படியாகிலும் உற்சாகத்தின் படியாகிலும் சர்வாங்க தகன பலிகளாகக் கர்த்தருக்குத் தங்கள் காணிக்கையை எவர்கள் செலுத்தப் போகிறார்களோ, அவர்கள் தங்கள் மனதின்படியே மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் பழுதற்ற ஒரு ஆணைப் பிடித்து வந்து செலுத்துவார்களாக'' என்று வாசிக்கிறோம். பொருத்தனையை நிறைவேற்றுவதற்குச் செலுத்தப்படவேண்டியது பழுதற்ற ஆண் மிருகம். ஆனால் இஸ்ரவேலரோ பழுதுள்ள பெண் மிருகங்களைப் பலியிட்டார்கள். அதையெல்லாம் தேவன் கவனிக்க மாட்டார் என்று எண்ணினார்கள். தேவன் அவர்களுக்கு மெய்யானவராக இல்லை; அவர்களுக்குத் தேவ பயமும் இல்லை. அவரைத் தங்களுக்குப் பிதாவாகவும் எஜமானராகவும் மட்டுமல்ல தங்களது மகத்துவமான ராஜாவாகவும் ஏறறுக்கொள்ளத் தவறி விட்டனர்.

தேவனுக்கு நாம் கொடுக்கும் வாக்குகள் அல்லது பொருத்தனைகளை நிறைவேற்றத் தவறுவது பாவமாகும். நாம் அதை ஒரு பொருட்டாக எண்ணாவிட்டாலும் தேவன் அதைக் கவனித்துக் கொண்டேயிருக்கிறார். எத்தனையோ முறைகள் தேவன் நம்மைத் தொடும்பொழுது அவருக்கு அதைச் செய்வேன் இதைச் செய்வேன் என்று வாக்குக் கொடுத்துவிட்டு, பின் அவற்றை மறந்து விடுகிறோம், கவ

லையீனமாக அவற்றை நிறைவேற்றாமல் விட்டு விடுகி றோம், இல்லையா? நாம் தேவனுக்குக் கொடுத்த நமது வாக் குகளையும், தேவனுக்கென்று செய்த நமது அர்ப்பணத்தை யும் உடைத்துப் போடும்பொழுது, அதற்குப் பின் விளைவு கள் நிச்சயமாக உண்டு. சிம்சோன் நசரேய விரதம் கொண் டவர். அவர் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்த படியால் பீறுண்டு போன எதையும் தொடக்கூடாது, மதுபானம் அருந்தவும் கூடாது. ஆனால் அவரோ செத்துக் கிடந்த சிங் கத்தின் உடலிலிருந்து தேனை எடுத்து யாரும் பார்க்காத வேளையில் அதைப் புசித்தார் (நியாயாதிபதிகள் 14: 8,9). அவர் பங்கு பெற்ற பெலிஸ்தரின் விருந்தில் மதுபான வகைகள் வழங்கப்பட்டிருக்கவேண்டும் (நியாயாதிபதிகள் 14:10). இவ்விதமாக தம் விரதத்தை உடைத்துப் போட்டவ ருக்கு, தமது நசரேய விரதத்தின் அடையாளமாயிருந்த தலை முடியைப் பற்றிய இரகசியத்தைத் தெலீலாளிடம் கூறுவது கடினமான காரியமாயிருக்கவில்லை; அவளும் அவருடைய முடியை வெட்டிப்போட்டாள் (நியாயாதிபதிகள் 16: 17-19). அதன் விளைவாக அவருடைய பலம் அவரை விட்டுப் போய்விட்டது; பெலிஸ்தர்கள் அவரைப் பிடித்து, அவர் கண்களைக் குருடாக்கி, தங்களுக்கு வேடிக்கை காட் டும்படி அவரை வைத்தனர். அது மட்டுமல்ல, அவருடைய தேவனையும் அவர்கள் பரிகாசம் செய்தனர் (நியாயாதிப திகள் 16: 21-23). தேவனுக்கு நாம் கொடுக்கும் வாக்குகளை நிறைவேற்றாமல் போகும்பொழுது நமக்கு அது நிச்சயமா கவே சாபத்தைக் கொண்டு வரும்.

### 4. வாடிப்போன வாழ்க்கைகள் 2:1-3

தேவனைக் கனவீனம் பண்ணுதல் வேண்டாத பின் விளைவுகளைக் கொண்டு வரும். தேவன் நமது தகுதியற்ற பலிகளையும், ஆராதனையை அவமதிக்கும் மனப்பான்மை யையும், பொருத்தனைகளை உடைத்தெறிந்து போடுவதை யும் கவனித்துக் கொண்டேயிருந்து விட்டு நமக்கு நியாயத் தீர்ப்பு செய்ய ஆரம்பிக்கிறார்.

### அ. ஆசீர்வாதங்கள் சாபங்களாக மாறின 2:2

''நீங்கள் கேளாமலும் என் நாமத்துக்கு மகிமையைச் செலுத்தும்படி இதைச் சிந்தியாமலுமிருந்தால், நான் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி, உங்கள் ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவேன்; ஆம், நீங்கள் அதைச் சிந்தியாமற்போனதினால் அவைகளைச் சபித்தேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.''

நாம் தேவனைக் கனம் பண்ணாமலும், அவருக்குக் கீழ்ப்படியாமலும் போகும்பொழுது அவர் நமக்களித்துள்ள ஆசீர்வாதங்களும் ஈவுகளும் நமக்குச் சாபமாக மாறிப்போகும். நமது வேலை, நமது செல்வம், நமது குடும்பங்கள் மற்றும் நமது தாலந்துகள் ஆகிய எல்லாவற்றிலும் இதை நாம் காணலாம். இவையெல்லாம் தேவனுடைய ஈவுகள், இவற்றைக் கொண்டு நாம் அவரைச் சேவிக்க வேண்டும், அவரைக் கனம் பண்ண வேண்டும்.

### ஆ. பிள்ளைகள் பாதிக்கப்பட்டனர் 2:3

''இதோ, நான் உங்கள் பயிரைக் கெடுத்து''

''பயிர்'' என்பது ''சந்ததி'' அல்லது ''வித்து'' என்றும் மொழி பெயர்க்கப்படலாம். சில மொழி பெயர்ப்புகள் அறுவடை மோசமாக இருக்கும் என்ற பொருளிலும் வேறு சில, சந்ததியினர் பாதிக்கப்படுவார்களென்றும் கருத்து தருகின்றன. இரண்டாவது கருத்தை நாம் ஏற்றுக் கொள்வோமானால், அது பெற்றோரின் கீழ்ப்படியாமை பிள்ளைகளைப் பாதிக்கும் என்று பொருள் தரும். இது எவ்வளவு உண்மை, இல்லையா!பெற்றோர் தேவனைக் கனம் பண்ணி, அவருக்குப் பயந்து நடப்பார்களானால் பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். பெற்றோர் தேவனைக் கனம் பண்ணவில்லையானால் பிள்ளைகளும் அவருடைய வழிகளில் நடக்கமாட்டார்கள். அதன் விளைவாக, அவர்கள் ஆவிக்குரிய வாழ்விலும் சரீர வாழ்விலும் நலிந்து போவார்கள்.

### இ. காணிக்கைகள் தள்ளுபடியாயின 2:3

''உங்கள் பண்டிகைகளின் சாணியையே உங்கள் முகங்களில் இறைப்பேன்''. இவை தள்ளி விடுதலைக் குறிக்கும் கடுமையான வார்த்தைகள். பலி செலுத்தப்படும் மிருகங்களின் சாணமானது பலிபீடத்திலிருந்து அகற்றப்பட்டு புறம்பே கொண்டு போகப்பட்டு எரிக்கப்பட வேண்டும் (யாத்திராகமம் *29:14*, லேவியராகமம் *4:11, 12*). ஆனால் இப்பொழுதோ, அந்தச் சாணத்தை அவர்கள் முகங்களின் மேல் எறிந்து விடுவேன் என்று தேவன் கூறுகின்றார்.

நாம் தேவனைக் கனம் பண்ணாமல், அவருக்குக் கீழ்ப்படியாமல் போகும்பொழுது அவர் நம்முடைய ஆராதனையையோ, காணிக்கைகளையோ, ஊழியத்தையோ அங்கீகரிக்க மாட்டார். ''கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும் ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்'' *(1 சாமுவேல் 15:22)*.

### ஈ. தேவனுடைய பிரசன்னம் விலகிற்று 2:3

''அதனோடு கூட நீங்களும் தள்ளுபடியாவீர்கள்'' அதாவது ''என் பிரசன்னத்திலிருந்து உங்களை விலக்கிப் போடுவேன்.''

நாம் தேவனைக் கனம் பண்ணவும் கீழ்ப்படியவும் மறுக்கும் போது அவர் தமது பிரசன்னத்தை நம்மிடத்திலிருந்து நீக்கிப் போடுவார். வேறு எந்த ஆசீர்வாதத்தையும் இழப்பதைக் காட்டிலும் இது பேரிழப்பாகும். அவர் ஏலிக்குச் சொன்னது இதுதான்: ''என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள்'' *(1 சாமுவேல் 2:30)*.

## அதிகாரம் 3

# லேவியுடன் உடன்படிக்கை

ஒரு ஞாயிறு மதியம் அது. சுனில் தன் நண்பனின் வீட்டில் மதிய உணவு அருந்திக் கொண்டிருந்தான். அன்றைய உணவு 'வறுத்த பிரசங்கியாரோ' என்று எண்ணத் தோன்றியது! பேச்சு முழுவதும் அவர்களுடைய போதகரையே சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. அவரைக் கடுமையாக விமரிசித்தார்கள், வாய்க்கு வந்தபடியெல்லாம் அவரைப் பற்றிப் பேசினார்கள். நண்பன் சொன்னான்: ''அவர் தேவனுடைய ஊழியக்காரர் அல்லவா? பிறகு எப்படி அவரால் இதைச் செய்ய முடிந்தது?'' சுனில் கேட்டான்: ''உங்கள் திருச்சபையில் அவர் ஒருவர் தான் தேவனுடைய ஊழியக்காரரா?'' சுனில் என்ன சொல்கிறானென்று அவனது நண்பனுக்கு விளங்கவில்லை. எனவே சுனில், ''நாம் எல்லாரும் அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவர்களானால், நாம் எல்லோருமே ஆண்டவருக்கு ஊழியக்காரர்கள் தாம். எல்லா விசுவாசிகளும் ஆண்டவருடைய ஊழியக்காரர்கள் என்று தான் வேதம் போதிக்கிறது'' என்று விளக்கிக் கூறினான்.

நம்முடைய நாட்டிலே பிற மதத்தைச் சேர்ந்த பூசாரிகள் அல்லது ஆலயத் தொண்டில் ஈடுபட்டிருப்பவர்கள் மதச்சடங்காசாரங்களைச் செய்வதற்காகப் பிரத்தியேகமாக

தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். அம்மதத்தைச் சேர்ந்த மற்ற வர்கள் இந்தப் பூசாரிகளின் சேவையைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நாம் இவ்விதமான கலாச்சாரப் பின்ன ணியிலிருந்து வந்தவர்களாதலால், எல்லா விசுவாசிகளும் தேவனுடைய ஊழியக்காரர்கள் என்ற உண்மையை உணரத் தவறி விடுகிறோம். 1 கொரிந்தியர் 9:14ல் பவுல் எழுதுவதைப்போல நம்மில் சிலர் ஆண்டவருக்கு ஊழியம் செய்வதன் மூலம் தங்கள் பிழைப்புக்கு வேண்டியதைச் சம் பாதிக்கும்படி அழைக்கப்படலாம். ''அந்தப்படியே சுவிசே ஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளை யிட்டிருக்கிறாரே.'' மற்றவர்களுடைய உற்சாகமான, உதார மான காணிக்கைகளால் தாங்கப் படுகின்ற தேவனுடைய ஊழியக்காரராக ஒருவர் இருப்பதில் தவறு எதுவும் இல்லை. அதே வேளையில் இன்னும் சிலர் வேறு தொழில்கள் செய் யும்படி அழைக்கப் படலாம். ஆனால் எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் அவர்களும் தேவனுக்கு ஊழியம் செய் யக் கடமைப்பட்டவர்களே. திருச்சபைக்கு எழுதும்போது, ''ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையா கவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசா ரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்'' (1 பேதுரு 2:5) என்று பேதுரு எழுதுகிறார். எல்லா விசுவாசிகளுக்கும் ஆசாரியத்துவ ஊழியம் உண்டு என்பதை மார்ட்டின் லூத் தர் பெரிதும் வலியுறுத்தினார்.

முறிந்த உடன்படிக்கையைப் பற்றி மல்கியா எழுதும் பொழுது, தேவனுடைய மக்களின் வீழ்ச்சிப் பட்டியலில் ஊழியத்தில் தோல்வி என்பதையும் வரிசைப்படுத்திக் காட் டினார்.

### ஊழியத்தில் தோல்வி 2:4-9

இந்த வசனங்களில் ''லேவியோடே பண்ணின

உடன்படிக்கை" (வசனங்கள் 4,5) மற்றும் "ஆசாரியன்" (வசனம் 7) ஆகிய பதங்கள் குறிப்பிடப் படுகின்றன. இந்தப் பதங்களை வேதவசனப் போதனையின் அடிப்படையில் நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். இஸ்ரவேலரின் முழுக் கூட்டத்திற்கும் பிரதிநிதிகளாக தேவனுடைய ஊழியத்திற்கென்று லேவியர் தெரிந்து கொள்ளப்பட்டனர். "இஸ்ரவேல் புத்திரரிலிருந்து அவர்கள் எனக்கு முற்றிலும் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்; இஸ்ரவேல் புத்திரர் எல்லாரிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற சகல முதற்பேறுக்கும் பதிலாக அவர்களை எனக்கு எடுத்துக் கொண்டேன்" (எண்ணாகமம் 8:16). "லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதற்பேறு சகலத்திற்கும் பதிலாக எடுத்துக் கொண்டு" (எண்ணாகமம் 8:18). தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடு உடன்படிக்கை பண்ணினபொழுது, "நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்" (யாத்திராகமம் 19:6) என்று சொன்னார். மேலும் அவர், "நீங்களும் நான் தெரிந்து கொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்" (ஏசாயா 43:10) என்று கூறினார். இந்த வசனங்களைக் கவனித்துப் பார்க்கும்பொழுது, தேவன் முழு இஸ்ரவேல் ஜனக்கூட்டத்தையும் தமது ஆசாரியர்களாகவும் ஊழியக்காரர்களாகவும் கருதினார் என்பது விளங்குகிறது.

லேவியர் மற்றும் ஆசாரியர்களிடம் தேவன் கூறிய இந்தச் சொற்கள், தமக்கு ஊழியம் செய்யும்படி அவர் அழைத்துள்ள அவரது மக்கள் அனைவருக்கும் ஏற்றவை. இந்தச் சொற்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கும் எல்லாருக்கும் பொருந்தும்.

### 1. அவர்களுடைய சிலாக்கியம் 2:4-5

"லேவியோடே பண்ணின என் உடன்படிக்கை நிலைத்திருக்கும்படிக்கு இந்தக் கட்டளையை உங்களிடத்திற்கு அனுப்பினேன் என்கிறதை அப்பொழுது அறிந்து

கொள்வீர்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அவனோடே பண்ணின என் உடன்படிக்கை ஜீவனும் சமாதானமுமாக இருந்தது'' (2:4,5).

ஆகமங்களில் லேவியுடன் உள்ள உடன்படிக்கை குறிக்கப்படவில்லை. ஆதியாகமம் 34:25,26; 49:5-7 ஆகிய இடங்களில் லேவி கொடுமையுள்ள மனிதராகச் சித்திரிக்கப்படுகிறார். ஆரோனும் மோசேயும் தோன்றிய கோத்திரம் என்பதால் லேவியின் கோத்திரம் பெயர் பெற்றதாயிற்று (யாத்திராகமம் 2:1,2;4:4). பொன் கன்றுக்குட்டியை வணங்கி இஸ்ரவேலர் வழிதப்பிப் போனபொழுது மோசேயின் பட்சமாக நின்று, பாவம் செய்தவர்கள் மீது தேவனுடைய நியாயத் தீர்ப்பைச் செலுத்த உதவியவர்கள் லேவியரே. அப்பொழுது மோசே, ''கர்த்தர் இன்றைக்கு நீங்கள் அவனவன் தன்தன் மகனுக்கும் சகோதரனுக்கும் விரோதமாயிருக்கிறதினால், கர்த்தருக்கு உங்களைப் பிரதிஷ்டை பண்ணுங்கள்'' என்று சொல்லியிருந்தார் (யாத்திராகமம் 32:29). தேவனுடைய ஊழியத்திற்கென்று லேவியர்கள் அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்டதன் பின்னணி இதுதான். லேவியர்கள் தேவனுடைய பணிக்கென்று வேறுபிரிக்கப்பட்டதைக் குறித்து எண்ணாகமம் 8:5-14 பேசுகிறது.

''இப்படி நீ லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்தெடுக்கக் கடவாய்; லேவியர் என்னுடையவர்களாயிருப்பார்கள்'' என்று தேவன் சொன்னார் (எண்ணாகமம் 8:14). பின்னர், ஆரோனுக்கும் அவனது உடன் ஆசாரியர்களுக்கும் லேவியர்களுக்கும் சேர வேண்டிய பலிகளைப் பற்றிக் கூறுகையில், ''கர்த்தருடைய சந்நிதியில் இது உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் செல்லும் மாறாத உடன்படிக்கை'' என்றார் (எண்ணாகமம் 18:19). இந்த ஒரு இடத்தில் மட்டும் தான் ஆசாரியர்களோடு உள்ள உடன்படிக்கை குறிப்பிடப் படுகிறது. அது மட்டுமல்ல, உபாகமம் 33:8ல் லேவி தேவனுடைய கிருபையைப் பெற்ற மனிதராகக்

குறிப்பிடப் படுகிறார். லேவியைப் பற்றி ஆசீர்வாதம் கூறும்பொழுது மோசே, "உன் பரிசுத்த புருஷன் வசமாய் உன்னுடைய தும்மீம் ஊரீம் என்பவைகள் இருப்பதாக" என்றார். லேவியுடன் உள்ள உடன்படிக்கை முதன் முதலாக எரேமியா *33:21*ல் தான் குறிக்கப்படுகிறது. "என் ஊழியக் காரராகிய லேவியரோடும் ஆசாரியரோடும் நான் பண் ணின உடன்படிக்கை" என்று தேவன் குறிப்பிடுகிறார். அதோடு கூட "தாவீதோடே நான் பண்ணின உடன்படிக் கை"யும் குறிப்பிடப்படுகிறது. எனவே லேவியரோடும் ஆசாரியரோடும் ஓர் உடன்படிக்கை இருந்திருக்க வேண் டும். பின் நாட்களில் நெகேமியாவும் இதைக் குறித்துப் பேசு கிறார். "என் தேவனே, அவர்கள் ஆசாரிய ஊழியத்தையும் ஆசாரிய ஊழியத்துக்கும் லேவியருக்கும் இருக்கிற உடன்ப டிக்கையையும் தீட்டுப்படுத்தினார்கள் என்று அவர்களை நினைத்துக் கொள்ளும்" (நெகேமியா *13:29*).

இந்த உடன்படிக்கை "ஜீவனும் சமாதானமுமான உடன்படிக்கை" ஆகும். தேவன் அவர்களுக்கு ஜீவனையும் சமாதானத்தையும் அருளியிருந்தார். ஆண்டவருக்கு ஊழியம் செய்தவர்கள் அவரிடமிருந்து ஜீவனையும், சமாதானத்தை யும் பெற்றிருந்திருக்க வேண்டும். அவருக்கு ஊழியம் செய் பவர்கள் அவருடைய ஊழியத்தையும் அவர் தரும் ஈவுகளை யும் பெற்றிருக்க வேண்டும். அதனால்தான் நமது ஆண்ட வர் பேதுருவிடம், "நான் உன்னைக் கழுவாவிட்டால் என் னிடத்தில் உனக்குப் பங்கில்லை" என்றார் (யோவான் *13:8*). நாம் அவரிடமாகத் திரும்பி அவரில் விசுவாசம் வைக்கும்போது அவர் தமது ஜீவனையும் சமாதானத்தையும் நமக்குக் கிருபையாக அருளிச் செய்கிறார். இரட்சிப்பு இல் லாமல் ஊழியம் இருக்க முடியாது. நாம் நமது பாவத்தை விட்டும், சுயநீதியை விட்டும் மனம் திரும்பி அவரில் நம் பிக்கை வைத்து அவருடைய ஜீவனையும் சமாதானத்தையும் பெற்றுக்கொண்டாலொழிய அவருக்கு ஊழியக்காரர்களா யிருக்க முடியாது.

## 2. அவர்களுடைய பொறுப்பு 2:5-7

''அவன் எனக்குப் பயப்படும் பயத்தோடே இருக்க வேண்டுமென்று இவைகளை அவனுக்குக் கட்டளையிட்டேன்; அப்படியே அவன் என் நாமத்துக்குப் பயந்தும் இருந்தான். சத்திய வேதம் அவன் வாயில் இருந்தது; அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை; அவன் என்னோடே சமாதானமும் யதார்த்தமுமாய்ச் சஞ்சரித்து, அநேகரை அக்கிரமத்தினின்று திருப்பினான்; ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்க வேண்டும்; வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே; அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்''

அவர்களுடைய கடமையில் அவர்கள் வாழுகின்ற விதமும் அவர்கள் பணி செய்கிற விதமும் அடங்கும். தேவனுடைய மக்களைப் பொறுத்தமட்டில் இது எப்பொழுதும் உண்மையான ஒரு காரியம். நமது வாழ்க்கையின் மூலமாகவும் நமது ஊழியத்தின் மூலமாகவும் அவரைப் பிரியப்படுத்தும்படி எதிர்பார்க்கப் படுகிறோம்.

### அ. அவர்களுடைய வாழ்க்கை 2:5-6

### i) அவர்களுடைய நடை 2:5

''அவன் பயந்தும் இருந்தான்''. அவர்கள் தேவனுக்குப் பயப்படும் பயத்தில் நடக்க வேண்டும். அவர்கள் தங்கள் வழிகள் எல்லாவற்றிலும் தேவனையே கனம் பண்ண வேண்டும்.

''அவன் என்னோடே சமாதானமும் யதார்த்தமுமாய்ச் சஞ்சரித்து'' அவர்கள் தேவனோடே இணைந்து உத்தமமாய் நடக்க வேண்டும். ஆண்டவருக்கு ஊழியம் செய்பவர்கள் தேவனுக்குப் பயப்படும் பயத்தில், அவருடன் இணைந்து, அவருக்கு முன்பாக மன உண்மையுள்ளவர்களாய் நடக்க வேண்டும். ஆகையினால் தான் தாவீது,

''இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்; அந்தக் கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப் படுத்துவீர்'' என்று ஜெபித்தார் (சங்கீதம் 51:6). உண்மையான ஞானம் என்பது தேவனுக்குப் பயப்படும் பயம் ஆகும். தாவீது தேவனுக்கு முன்பாக உத்தமமாகவும், அவருக்குப் பயப்படும் பயத்திலும் நடக்க வேண்டும் என்று ஜெபித்தார்.

### ii) அவர்களுடைய சொற்கள் 2:6,7

''சத்திய வேதம் அவன் வாயில் இருந்தது; அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை.'' ''ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்க வேண்டும்.''

தேவனுடைய மக்களின் உதடுகளில் தேவனுடைய வசனம் காணப்படவேண்டும். அவர்களுடைய பேச்சு சத்திய வேதத்தின் கட்டளைகளாலும் சத்தியங்களாலும் நிறைந்ததாய் இருக்க வேண்டும். பொய்யான, போலியான அனைத்துக்கும் அவர்கள் தங்கள் உதடுகளை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும். பவுல், ''கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்'' என்று எழுதினார் (எபேசியர் 4: 29).

வீணான வார்த்தைகளுக்கு நமது உதடுகளை விலக்கிக் காத்துக் கொள்வோமானால் நமது பேச்சின் மூலமாகப் பிறரைக் கட்டியெழுப்ப முடியும். யாக்கோபு எழுதுகிறார்: ''துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது'' (யாக்கோபு 3:10). தேவன், எரேமியா தீர்க்கதரிசியிடம், ''நீ திரும்பினால் நான் உன்னைச் சீர்ப்படுத்துவேன்; என் முகத்துக்கு முன்பாக நிலைத்துமிருப்பாய்; நீ தீழ்ப்பானதினின்று விலையேறப் பெற்றதைப் பிரித்தெடுத்தால் என் வாய் போலிருப்பாய்'' (எரேமியா 15:19) என்று கூறினார். தேவ

னுடைய வார்த்தை நமது வாயில் இருந்து நாம் அந்த வார்த்தையை வல்லமையாகப் போதிக்கிறவர்களாக இருக்க வேண்டுமானால், நமது பேச்சில் போலித்தனமோ, வஞ்சகமோ, அசுத்தமோ இல்லாதபடி காத்துக்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, நாம் நமது மனத்தையும், இருதயத்தையும் வேதவசனங்களைப் பற்றிய அறிவினால் நிரப்ப வேண்டும்; அப்பொழுதுதான் இருதயத்தின் நிறைவிலிருந்து எடுத்துப் பிறருக்குப் போதிக்க முடியும். *''பரலோக ராஜ்யத்துக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்'' (மத்தேயு 13:52).*

### iii) அவர்களுடைய ஊழியம் 2:5-7

*''அவன் எனக்குப் பயப்படும் பயத்தோடே இருக்க வேண்டுமென்று, இவைகளை அவனுக்குக் கட்டளையிட்டேன்; அப்படியே அவன் என் நாமத்துக்குப் பயந்தும் இருந்தான்.'' ''சத்தியவேதம் அவன் வாயில் இருந்தது. (அவன்) அநேகரை அக்கிரமத்தினின்று திருப்பினான்.'' ''ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்க வேண்டும்; வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே; அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்.''*

லேவியரின் முதலாவது கடமை என்னவென்றால் அவர்கள் தேவனுக்கு முன்பாக பயபக்தியுடன் நின்று, அவருக்குத் துதியையும் ஆராதனையையும் ஏறெடுக்க வேண்டும். *''நாள்தோறும் காலையிலும் மாலையிலும் கர்த்தரைப் போற்றித் துதித்து... (அது அவர்கள் வேலையாயிருந்தது)'' (1 நாளாகமம் 23:30).* நாம் ஆண்டவருக்காகச் செய்யும் பணியில் முதலாவது இடம் பெற வேண்டியது ஆராதனை

யாகும். நமது தலையாய கடமை தேவனுக்குத்துதியையும், வணக்கத்தையும் செலுத்துவதே. ஆராதனை செய்யாதபடி அங்குமிங்கும் ஓடி அதையும் இதையும் செய்யும் செயல்வீரர்களாய் இருப்பதில் பயனில்லை.

இரண்டாவது பணி, பிறருக்குப் போதிக்கத் தக்கதாக தேவனுடைய வசனத்தைப் படித்தறிந்து தங்கள் மனத்திலும் இருதயத்திலும் அதை நிறைத்து வைப்பதாகும். தேவனுடைய வசனமும், ஞானமும் அவர்கள் உதடுகளில் காணப்படுவதை அறியும்பொழுது மக்கள் அவர்களுடைய போதனையையும் ஆலோசனையையும் தாங்களாகவே நாடி வருவார்கள். ''கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதி நியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்'' (எஸ்றா 7:10). பவுல் தீமோத்தேயுவுக்கு, ''கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத் தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவன்'' ஆகையால், ''சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு'' என்று எழுதுகிறார் (2 தீமோத்தேயு 4:2).

லேவியருடைய மூன்றாவது பணி, கர்த்தருடைய தூதுவர்களாக இருந்து, மக்களைப் பாவத்தினின்று தேவனுக்கு நேராகத் திருப்ப வேண்டும். மக்களை மனந்திரும்பச் செய்து, சீஷர்களாக்கும் பணி.

இஸ்ரவேலருக்கு தேவனுடைய நியாயப் பிரமாணத்தைப் போதிக்கும் பணி மோசேயின் கால முதல் லேவியருக்குக் கொடுக்கப்பட்டதாகும். லேவியைக் குறித்து மோசே, ''அவர்கள் உம்முடைய வார்த்தைகளைக் கைக்கொண்டு, உம்முடைய உடன்படிக்கையைக் காக்கிறவர்கள். அவர்கள்

யாக்கோபுக்கு உம்முடைய நியாயங்களையும் இஸ்ரவே லுக்கு உம்முடைய பிரமாணத்தையும் (போதிப்பார்கள்)....'' (உபாகமம் 33:9,10) என்று கூறினார். யோசபாத் ராஜா ஆண்ட காலத்தில், ''இவர்கள் யூதாவிலே உபதேசித்து, கர்த் தருடைய வேத புஸ்தகத்தை வைத்துக்கொண்டு, யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்குப் போதித் தார்கள்'' (2 நாளாகமம் 17:9). இன்னும் எஸ்றா, நெகேமி யாவின் நாட்களில் மக்களுக்கு வேதப்பிரமாணங்களைப் போதிப்பதில் லேவியர் எஸ்றாவுக்குத் துணையாக நின் றார்கள் (நெகேமியா 8:7,8).

பிறருக்குப் போதித்து அவர்களை ஆண்டவரிடம் வழி நடத்தும் பணி எல்லா விசுவாசிக்களுக்கும் கொடுக்கப்பட்ட ஒன்று. ஒருவருக்கொருவர் போதித்து, புத்தி சொல்லி, பக்தி விருத்திக்கேதுவானவைகளைக் கற்பிப்பது திருச்சபையின் அங்கங்களாகிய அனைவரும் செய்ய வேண்டிய பணியா கும். ''ஆனபடியால் சமாதானத்துக் கடுத்தவைகளையும் அந் நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத் தக்கவைகளையும் நாடக்கடவோம்'' (ரோமர் 14:19). எல்லா விசுவாசிகளுக் கும் ஆசாரிய ஊழியம் உண்டு, எல்லா விசுவாசிகளுக்கும் போதகக் கடமையும் உண்டு என்று வேதம் கற்பிக்கிறது.

### 3. அவர்களுடைய வீழ்ச்சி 2:8

''நீங்களோ வழியை விட்டு விலகி, அநேகரை வேதத் தைக் குறித்து இடறப்பண்ணினீர்கள்; லேவியின் உடன்ப டிக்கையைக் கெடுத்துப் போட்டீர்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.''

வேதத்தைப் போதிக்கும் ஓர் ஆவிக்குரிய தலைவன் தேவனுடைய வழியை விட்டு விலகிச் செல்லும் பொழுது, தன்னைச் சார்ந்த பிறரையும் வழி விலகப் பண்ணுகிறான். ''அவர்கள் குருடனுக்குக் குருடன் வழி காட்டினால் இருவ ரும் குழியிலே விழுவார்களே'' (மத்தேயு 15:14) என்று இயேசு பரிசேயர்களைக் குறித்துச் சொன்னார். நாம் ஆண்

டவரோடு நடக்காத பொழுது, நமது போதனை மற்றவர் களை இடறச் செய்கிறது. வீழ்ச்சியானது ஆசாரியர்களின் தனிப்பட்ட வாழ்வில் ஆரம்பித்து, பின் அவர்களது ஊழி யத்தையும் பாதித்து விட்டது. முதலாவது அவர்களுடைய தகாத நடக்கையினாலும், பின்னர் அவர்களுடைய தவ றான போதனையினாலும் மக்கள் தேவனைப் பற்றித் தவ றாகப் புரிந்து கொண்டனர். ''வழி'' என்ற சொல் தெய்வ பக்தி முழு வாழ்க்கை முறையையும் பற்றியது என்பதைக் குறிக்கிறது. அப்போஸ்தலர் **9:2, 19:9**ல் கிறிஸ்தவ விசுவா சம் ''மார்க்கம்'' அல்லது ''வழி'' என்று குறிப்பிடப்படுகி றது.

அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய வச னத்தைச் சரியானபடி போதிக்கத் தவறியது மட்டுமல்லாமல், மக்களுடைய மனத்திற்குப் பிரியமானபடி தேவனுடைய பிரமாணங்களை மாற்றியமைக்கவும் முயன்றார்கள். மக்க ளைப் பிரியப்படுத்தும் வண்ணமாக நமது போதனையை யும் பிரசங்கத்தையும் மாற்றிக் கொள்ளும்பொழுது நாம் தேவனைத் துக்கப் படுத்துகிறோம்.

நமது ஆண்டவர் இயேசு, ''என்னிடத்தில் விசுவாசமா யிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக் குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல் லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்து கிறது அவனுக்கு நலமாயிருக்கும்'' (மத்தேயு **18:6**) என்று சொன்ன போது, பிறரை இடறச் செய்வதன் பயங்கரத்தைச் சுட்டிக் காட்டினார். ஆகையினால் தான் யாக்கோபும், ''என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர் களாக'' (யாக்கோபு **3:1**) என்று எச்சரிக்கிறார்.

### 4. அவர்களுடைய சிறுமை 2:9

''நீங்கள் என் வழிகளைக் கைக்கொள்ளாமல் வேத தைக் குறித்துப் பட்சபாதம் பண்ணினபடியினால், நானு

உங்களை எல்லா ஜனத்துக்கு முன்பாகவும் அற்பரும் நீசரு மாக்கினேன்.''

ஆண்டவருடைய பணியில் நாம் தோல்வியுறுவோமானால் அதன் விளைவு சிறுமையும், அவகீர்த்தியுமே. ஆசரிப்புக் கூடாரத்தில் பணி செய்த தம் பிள்ளைகள் அக்கிரமச் செய்கைகளில் துணிந்து ஈடுபட்டபொழுது ஏலி அவர்களைக் கண்டிக்காமற் போன பாவத்திற்காக அவர் மேல் வந்த தேவனது நியாயத்தீர்ப்பு என்ன தெரியுமா? ''என்னைக்கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கன ஈனப்படுவார்கள்'' என்பதுதான் (1 சாமுவேல் 2:30). தேவனுடைய நியாயப் பிரமாண விதிகளைத் தளர்த்தி அவற்றை மக்களுக்குப் பிரியமானவையாக மாற்றுவதன் மூலம் மக்களிடையே மதிப்பையும், புகழையும் பெற நாடினார்கள் அவர்கள். ஆனால் விதிகளைத் தளர்த்தி, மக்களைப் பிரியப்படுத்த முயன்ற அதே காரணத்தினால் மக்களிடம் மரியாதையை இழந்தனர்; தேவனும் அவர்களை அவமானத்திற்கும் நிந்தைக்கும் ஒப்புக்கொடுத்தார். அவர்கள் தங்களுடைய சன்மார்க்க அதிகாரத்தையும் ஆவிக்குரிய அதிகாரத்தையும் இழந்தார்கள். தேவனுக்கும் அவருடைய வசனத்திற்கும் உண்மையுள்ளவர்களாக நாம் வாழ்ந்து அவரைக் கனம் பண்ணும்போது சன்மார்க்க அதிகாரமும் ஆவிக்குரிய அதிகாரமும் நமக்குண்டு. மக்களைக் கண்டு அஞ்சியோ, அவர்களிடமிருந்து பாராட்டை விரும்பியோ நாம் விட்டுக்கொடுத்து, ஒத்துப் போகத் தொடங்கினால் இந்த அதிகாரத்தை இழந்து விடுகிறோம். அதிகாரத்தை இழந்தவர்களாக ஊழியம் செய்வது நிந்தையையே கொண்டு வரும்.

அதிகாரம் 4

# உங்கள் திருமண உறவு எப்படி இருக்கிறது?

ரவி தமது திருச்சபையில் அதிக ஈடுபாடுள்ள ஒரு நபர், தமது ஓய்வு நேரம் முழுவதையும் திருச்சபைக்கடுத்த காரியங்களிலே செலவிடுவார். அவர் தம் மனைவியையோ குழந்தைகளையோ கவனிப்பதேயில்லை, அவர்களோடு நேரம் செலவிடுவதில்லை என்பது மனைவியின் குறைபாடு. தமது மனைவி ஆவிக்குரியவள் அல்லவென்றும், தாம் ஆண்டவரது பணியில் ஈடுபாடு கொள்வதை அவளால் புரிந்து கொள்ள இயலவில்லை என்றும் ரவி தம் போதகரிடம் கூறினார். அது மட்டுமல்ல, தம் மனைவியோ, குடும்பமோ ஆண்டவருக்கும் தமக்கும் இடையில் வராதபடி பார்த்துக் கொள்ளத் தீர்மானித்திருப்பதாக வெகு உறுதியுடன் கூறினார். தேவ மனிதரான அவரது போதகர் இரண்டு காரியங்களை அவருக்குத் தெளிவு படுத்த முயன்றார். ஒன்று, இந்து மதத் தத்துவங்களால் பாதிக்கப்பட்ட நம் கலாச்சாரம் எந்த அளவிற்கு ரவியைப் பாதித்திருக்கிறது என்பது. இந்து மதத்திலே ஒரு மனிதன் தன் குடும்பம் மற்றும் எல்லாவிதப் பந்த பாசங்களிலிருந்தும் எந்த அளவிற்குத் தன்னை விடுவித்துக் கொள்ள முடியுமோ அந்த அளவிற்கு

விலகி, தனது தெய்வத்தை அதன்மூலம் பிரியப்படுத்தவும், தனது இரட்சிப்பைத் தானே தேடிக்கொள்ளவும் முயலுகின் றான். ஆனால் கிறிஸ்தவ மார்க்கத்திலே நாம் தேவனோடு ஐக்கியம் கொள்ளும்படியாகவும், நமது குடும்ப உறவுகள் உட்பட அனைத்து மனித உறவுகளிலும் ஈடுபட்டு, தரமுள்ள, அர்த்தமுள்ள உறவுகளை உருவாக்கிக் கொள்ளும் படியாக வும் இரட்சிக்கப் படுகிறோம். இரண்டாவதாக, திருமண மான நிலையிலே தான் ரவி ஆண்டவருக்குப் பணி செய்ய வேண்டும்; ஏற்கெனவே மணமாகிவிட்டதால் தனி நிலை யில் இருப்பதுபோல குடும்பத்தைக் கவனிக்காமல் பணி செய்யக்கூடாது. திருமணமானவராதலால் ரவி தன் மனை விக்கும் குடும்பத்திற்குமென நிறைவேற்ற வேண்டிய சில பொறுப்புகள் உண்டு. குடும்ப வாழ்வின் பொறுப்புகளிலே அவர் தவறுவாரானால், வேறு எந்த ஊழியம் செய்தும் பயனில்லை, அதை ஆண்டவர் அங்கீகரிக்க மாட்டார்.

முறிந்த உடன்படிக்கையின் ஒரு அடையாளம் குடும்ப வாழ்வு சீர்குலைந்து போவது என்று மல்கியா எழுதுகிறார். தமது மக்கள் நடுவில் காணப்பட்ட இந்த வீழ்ச்சியைத் தேவன் ஒரு பெரும் தோல்வியாகக் கருதினார்.

## குடும்ப வாழ்வில் வீழ்ச்சி 2:10-16

வீழ்ச்சியின் பாதை தொடர்ந்து கீழ் நோக்கிச் செல்லும் சரிவான பாதையாகும். அதன் ஒவ்வொரு படியும் கீழ் நோக்கிச் செல்லும் படியே. குடும்ப வாழ்வில் கீழ் நோக்கிச் செல்லும் வீழ்ச்சி என்னும் பாதையை மல்கியா இவ்வசனங் களில் தெளிவாகக் காட்டுகிறார். இதிலே மூன்று படிகள் உண்டு.

### *1. கீழ்ப்படியாமை 2:10-13*

''நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையோ? ஒரே தேவன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ? நாம் நம்முடைய பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்தக் குலைச்ச

லாக்கி, அவனவன் தன்தன் சகோதரனுக்குத் துரோகம் பண்ணுவானேன்? யூதா ஜனங்கள் துரோகம் பண்ணினார்கள்; இஸ்ரவேலிலும் எருசலேமிலும் அருவருப்பான காரியம் செய்யப்பட்டது; கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை யூதா ஜனங்கள் பரிசுத்தக் குலைச்சலாக்கி அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள்.''

இந்தக் கீழ்ப்படியாமையைப் பற்றிய பல உண்மைகளை நாம் இங்கே பார்க்கிறோம்.

### அ. அது கூட்டான கீழ்ப்படியாமை

அது தனி மனிதரின் திருமண உறவு, குடும்பம் ஆகியவற்றைப் பொறுத்த கீழ்ப்படியாமை என்றாலும், உடன்படிக்கைச் சமுதாயத்தின் தோல்வியாகவே கருதப்பட்டது. தீர்க்கதரிசி கேட்கிறார்: ''நாம் நம்முடைய பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி அவனவன் தன்தன் சகோதரனுக்குத் துரோகம் பண்ணுவானேன்?'' அவர் மேலும் கூறுகிறார்: ''யூதா ஜனங்கள் துரோகம் பண்ணினார்கள்.''

குடும்பத்திலே காணப்பட்ட உண்மையும் பொறுப்புணர்வும் தான் தேவ மக்களின் சமுதாய நல்வாழ்விற்கும் ஆசீர்வாதத்திற்கும் காரணமாக இருந்தது. ஆகையினால் தான் சங்கீதம் **128:5,6** ''எருசலேமின் வாழ்வையும்'', ''இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும்'' பற்றிப் பேசுகிறது. இது குடும்ப உறவுகளைப் பற்றிப் பேசும் ஒரு சங்கீதம். இன்னும் எபேசியர் **5:25-32**ல் பவுல் கணவன்- மனைவி உறவைக் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையேயுள்ள உறவிற்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். உடன்படிக்கை சமுதாயத்தின் மிக முக்கியமான அம்சம் குடும்பம்தான். குடும்பங்களின் நல்வாழ்வுதான் திருச்சபையை வாழ வைக்கும். குடும்ப உறவுகளில் தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழுவது என்பது ஏதோ தனிமனிதனின் தனிப்பட்ட விஷயம் அல்ல.

அது தேவ மக்களின் ஆசீர்வாதத்தோடு பின்னிப் பிணைந்தது. திருமண உறவில் காணப்பட்ட பொறுப்பற்ற நடத்தை உடன்படிக்கை உறவைப் பாதித்து விட்டது.

இஸ்ரவேலரது கூட்டான தன்மை இந்த வசனங்களில் வெளிப்படுகிறது. "நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையோ? ஒரே தேவன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ?" (2:10). இங்கே குறிப்பிடப்படும் தேவனுடைய பிதாத் தன்மை அவர் அகில உலகின் சர்வ சிருஷ்டிகளுக்கும் பிதாவானவர் என்பதைக் குறிக்கவில்லை; மாறாக உடன்படிக்கை உறவின் அடிப்படையில் இஸ்ரவேலருக்கு அவர் தகப்பன் என்பதையே குறிக்கிறது. மல்கியா இஸ்ரவேல் மக்களை நோக்கித்தான் பேசுகிறார். தேவன் பிதா என்பதும் சிருஷ்டிகர் என்பதும் வேதம் போதிக்கும் சத்தியங்களாகும். மோசே தமது பாட்டில், "உன்னை ஆட்கொண்ட பிதா அவரல்லவா? உன்னை உண்டாக்கி உன்னை நிலைப்படுத்தினவர் அவரல்லவா?" என்று கூறினார் (உபாகமம் 32:6). ஏசாயா, "இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்; நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை" என்று எழுதினார் (ஏசாயா 64:8). அவர்களது கூட்டுத் தன்மையின் நிமித்தமாக அவர்களது குடும்ப வாழ்வில் காணப்பட்ட தோல்வியானது தேவனுடன் அவர்களுக்கிருந்த உடன்படிக்கை உறவையும், ஒருவரோடொருவருக்கு இருந்த உறவையும் பாதித்தது.

கிறிஸ்தவர்கள் ஏன் ஒருவருக்கொருவர் பொய் சொல்லக் கூடாது என்பதற்கான காரணத்தை பவுல் எபேசியர் 4:25 ல் தருகிறார். "அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்." ஒரே சரீரத்தின் அவயவங்களாக நாம் இருக்கிறபடியால் நாம் ஒருவருக்கொருவர் உண்மையாய் இராவிட்டால் ஒருவரையொ

ருவர் வேதனைப் படுத்துவோம். நாம் இரட்சிக்கப் பட்ட போது தேவனுடன் ஐக்கியம் கொள்வதற்கு மட்டுமல்ல, சக விசுவாசிகளுடன் ஐக்கியம் கொள்ளவும் அழைக்கப்பட்டி ருக்கிறோம். தேவ மக்களின் சமுதாயத்திலே, அதாவது திரு ச்சபையிலே ஒருவரோடொருவர் ஐக்கியம் கொண்டு வாழுவதற்காக இரட்சிக்கப் பட்டுள்ளோம். எனவே, உடன் படிக்கைச் சமுதாயத்திற்கென்று நிறைவேற்ற வேண்டிய கடமை, பொறுப்பு நமக்கு உண்டு.

## ஆ. அது ஆவிக்குரிய கீழ்ப்படியாமை

*''நாம் நம்முடைய பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி, அவனவன் தன் தன் சகோதர னுக்குத் துரோகம் பண்ணுவானேன்?''* (வசனம் 10).

*''கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை யூதா ஜனங்கள் பரி சுத்தக் குலைச்சலாக்கி (னார்கள்)''* (வசனம் 11).

### i. அதன் பொருள்

கிடைமட்டமான மனித உறவுகளில் ஏற்பட்ட தோல்வி யின் விளைவாக மனிதன் தேவனோடு கொள்ளும் செங் குத்தான உறவும் தோல்வியில் முடிந்தது. தேவனுடன் உள்ள தங்கள் உறவில் அவர்கள் உண்மையற்றவர்களாய்ப் போனதினிமித்தமாக, ஒருவரோடொருவர் கொண்டுள்ள உறவுகளும், மிக நெருக்கமான திருமண உறவு உட்பட எல்லா உறவுகளும் உண்மையற்றவையாகி விட்டன. தேவ னுடைய வசனத்தின்படி மேற்கூறிய இரண்டு கருத்துகளும் சத்தியமானவை. *''அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப் பட்டி ருப்போம்''* (1 யோவான் 1:7).

*''தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன்''* (1 யோவான் 4:20).

திருமண உறவில் ஏற்படும் தோல்வியானது ஆவிக்கு ரிய வீழ்ச்சியாகும். அது ஒரு மனிதன் தேவனோடு கொண் டுள்ள உறவைப் பாதிக்கிறது. மல்கியா, "அவர் இனிக் காணிக்கையை மதியார், அதை உங்கள் கைகளில் பிரிய மாய் ஏற்றுக்கொள்ளவு மாட்டார்" (வசனம் *13*) என்று கூறுகிறார். அவர்கள் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தையும், ஆராதனையையும் பரிசுத்தக் குலைச்சலாக்கிப் போட்டார் கள். "பரிசுத்தம்" (வசனம் *11*) என்பது "பரிசுத்த வித்து அல்லது தேவனுடைய மக்கள்" என்பதையும் குறிக்கலாம். அந்தப் பொருளில் எடுத்துக் கொள்வோமானால், அவர்கள் தேவனுடைய பரிசுத்த ஜனங்களாக வாழ வேண்டும் என்ற அழைப்பைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி விட்டனர்.

## திருமண வாழ்வில் ஏற்பட்ட தோல்வி என்ன?

அவர்களுடைய தோல்வியைக் குறிக்க தேவன் "அரு வருப்பான காரியம்" என்ற பதத்தைப் பயன்படுத்துகிறார். இதே பதம் விக்கிரக வணக்கத்தைக் குறிக்க உபாகமம் *32:16* லும், ஏசாயா *44:19*லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே அவர்களுடைய தோல்வி விக்கிரகாராதனைக்குச் சமமானது. மேலும் *2:11*ல், "கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத் தத்தை யூதா ஜனங்கள் பரிசுத்தக் குலைச்சலாக்கி, அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள்" என்று வாசிக்கிறோம். "குமார்த்தி" என்ற சொல் "அதே தன்மையுள்ள" என்ற பொருளையும் தரும். அதாவது, தாங் கள் வணங்கிய தெய்வத்தைப் போன்றே குண லட்சணங் களுள்ள பெண்களை இஸ்ரவேல் மனிதர் விவாகம் செய் தார்கள். அந்தப் போலியான தெய்வங்கள் ஆவிக்குரிய தன் மையிலும் சன்மார்க்கத் தன்மையிலும் இஸ்ரவேலரின் தேவனுக்கு முற்றிலும் எதிரானவை. ஆகையினால்தான், இஸ்ரவேலர் பிற மதத்தைச் சேர்ந்த பெண்களைத் திரும ணம் செய்தபொழுது தங்கள் விசுவாசத்தை மட்டுமல்ல தங் கள் சன்மார்க்க நெறிகளையும் விட்டுக்கொடுத்து இணங் கிப் போனார்கள். அந்த மதங்களில் கண்டிப்பான அறநெ

றிக் கட்டுப்பாடுகள் இல்லாததால் அவற்றுக்கேற்ப இணங்கி நடப்பதும், ஏகோவாவை வழிபடுவதை விட்டு விடுவதும் அவர்களுக்கு எளிதாகி விட்டன. சாலொமோன் வாழ்விலும், (1 இராஜாக்கள் 11:1-8) ஆகாபின் வாழ்விலும் இதுதான் நடந்தது (1 இராஜாக்கள் 16:31).

இஸ்ரவேலரின் வரலாறு முழுவதிலுமே அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் சீர்கேட்டுக்குக் காரணமாய் அமைந்தது பிற மதங்களைச் சேர்ந்த பெண்களுடனும் ஆண்களுடனும் திருமண உறவில் நுழைந்ததே ஆகும். தேவன் இப்படிச் செய்யக் கூடாதென்று ஏற்கெனவே அவர்களை எச்சரித்திருந்தார். ''அவர்களோடே சம்பந்தம் கலவாயாக; உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக. என்னைப் பின்பற்றாமல், அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்கள் உன் குமாரரை விலகப் பண்ணுவார்கள்; அப்போழுது கர்த்தருடைய கோபம் உங்கள் மேல் மூண்டு, உங்களைச் சீக்கிரத்தில் அழிக்கும்'' (உபாகமம் 7:3,4). ஆனாலும், அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாதபடி அவர்கள் விக்கிரகாராதனை செய்யும் பெண்களை மணந்து கொண்டார்கள்; தங்கள் பெண்களை அவர்களுக்குக் கொடுத்தார்கள். தங்கள் தேவனை விட்டு வழுவிப் போனதன் நிமித்தமாக அவர்கள் சிறையிருப்புக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டனர். என்றாலும், சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்னரும் கூட அவர்கள் தொடர்ந்து தேவனுக்குக் கீழ்ப்படியாமலே இருந்தனர். நெகேமியா, ''அஸ்தோத், அம்மோன், மோவாப் ஜாதிகளான ஸ்திரீகளைச் சேர்த்துக் கொண்ட சில யூதரையும் அந்த நாட்களில் கண்டேன்'' (நெகேமியா 13:23) என்று கூறுகின்றார். இதே நிலைமையைக் குறித்துத்தான் மல்கியாவும் அவர்களை எச்சரித்தார். இனத்தின் அடிப்படையில் தேவன் இவ்வித திருமணங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. எனவே கலப்பு இன அல்லது கலப்பு ஜாதித் திருமணங்களுக்கு எதிராக இந்த வசனத்தைப் பயன்படுத்தக்

கூடாது. தேவன் தமது வசனத்தில் இன வெறியையோ, ஜாதி வெறியையோ ஆதரிக்கவில்லை. ஒரு கிறிஸ்தவத் திருமணத்திற்கு இனமோ, அல்லது ஜாதியோ அடிப்படையாக அமையக்கூடாது. இங்கே குறிப்பிடப்படுவது ஆவிக்குரிய ஒரு பிரச்சினை. அதாவது விசுவாசியான ஒருவர் அவிசுவாசியான ஒருவரைத் திருமணம் செய்யக் கூடாது. பெற்றோரும் அவ்விதமான திருமணங்களை ஒழுங்கு செய்யக்கூடாது. புதிய ஏற்பாட்டில், ''அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?'' என்று பவுல் எழுதுகிறார் (2 கொரிந்தியர் **6:14**).

## ii. அதன் விளைவுகள்

நம்முடைய திருமண உறவில் ஏற்படும் தோல்வி நமது தனிப்பட்ட வாழ்வை மட்டுமே பாதிக்கும் என்று கூற முடியாது. அது நமது ஆவிக்குரிய வாழ்வையும், கூட்டு வாழ்வையும் பாதிக்கக்கூடிய பின் விளைவுகளை ஏற்படுத்தும்.

### அ. அது எதிர்காலத்தைப் பாதிக்கிறது

''இப்படிச் செய்கிறவன் எவனாயினும்....அவனை யாக்கோபின் கூடாரங்களில் இராதபடிக்குக் கர்த்தர் சங்கரிப்பார்'' (2:12). இதன் பொருள் என்னவென்றால், தன் திருமண உறவில் உண்மையற்றவனாயிருக்கும் ஒரு மனிதனுக்கு, தேவ மக்களின் ஆசீர்வாதத்திலும், சுதந்தரத்திலும் எவ்விதப் பங்கும் கிடையாது என்பதே.

### ஆ. அது பிள்ளைகளைப் பாதிக்கிறது

''இப்படிச் செய்கிறவன் எவனோ,....உத்தரவு கொடுக்கிறவனாயினும்,......அவனை யாக்கோபின் கூடாரங்களில் இராதபடிக்குக் கர்த்தர் சங்கரிப்பார்'' (வசனம் 12). சில ஆங்கில மொழி பெயர்ப்புகளில் ''இப்படிச் செய்கிறவன் எவனோ, அவனுக்காகப் பேசுகிறவன் அல்லது அவன் வம்சத்தவன்'' என்ற பொருளில் வருகிறது. அதாவது, தன்

திருமண உறவில் உண்மையற்றவனாய்ப் போன மனிதன் தனது வயது முதிர்ந்த காலத்தில் கூப்பிடும் போது அவனுக்கு உத்தரவு கொடுக்கவோ, அல்லது அவனது பெயரை விளங்கப் பண்ணவோ கூடிய குமாரனும், பேரனும் இராதபடிக்குக் கைவிடப்படுவான்.

*2:15* ''அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னே ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படி தானே'' என்று கூறுகிறது. எபிரேய மொழியிலே உள்ள இந்த வசனத்தை மொழி பெயர்ப்பதும், பொருள் கூறுவதும் கடினமாயிருந்தாலும், இந்தப் பகுதியில் மீதியான வசனங்களில் மல்கியா கூறும் கருத்துக்களின் அடிப்படையில் இதைச் சரியாக விளங்கிக் கொள்ள முடியும். தேவ பக்தியுள்ள சந்ததி உருவாக வேண்டுமென்ற நோக்கத்தோடு தேவன் ஒருவனுக்கு ஒருத்தியைக் கொடுத்தார். தங்களுடைய திருமண வாக்குறுதிகளுக்கு கணவன், மனைவி ஆகிய இருவரும் உண்மையுள்ளவர்களாயிருக்கும் போது மாத்திரமே இவ்வித தேவ பக்தியுள்ள சந்ததியை உருவாக்குவது சாத்தியமாகும். அந்தச் சூழ் நிலையில் மட்டுமே தேவபக்திக்கு ஆதாரமாக விளங்கக்கூடிய பாதுகாப்பு உணர்வைப் பிள்ளைகள் பெறுவார்கள்; அவர்களைத் தேவபக்தியில் பழக்குவிப்பதும் சாத்தியமாகும். பிள்ளைகள் தமது வழிகளில் கற்பிக்கப்படவும், பழக்குவிக்கப் படவும் கூடிய ஒரு பள்ளியாகக் குடும்பம் இருக்க வேண்டுமென்பது தேவனது எதிர்பார்ப்பாகும். ''அவைகளை (தேவனுடைய வார்த்தைகளை) உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக'' (உபாகமம் 11:20). திருமண உறவில் காணப்படும் உண்மையற்ற தன்மை பிள்ளைகளின் பாதுகாப்பு உணர்வைச் சிதறடித்து, அவர்களைத் தேவனிடமிருந்து துரத்தி விடும்.

## இ) அது தேவனுக்குச் செய்யப்படும் ஜெபம், ஆராதனை, ஊழியம் ஆகியவற்றைப் பாதிக்கிறது

''இப்படிச் செய்கிறவன் எவனாயினும்,...... சேனைகளின் கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துகிறவனாயினும், அவனை யாக்கோபின் கூடாரங்களில் இராதபடிக்குக் கர்த்தர் சங்கரிப்பார்'' (2:12).

''நீங்கள் இரண்டாந்தரமும் இதைச் செய்து, கர்த்தருடைய பீடத்தைக் கண்ணீரினாலும் அழுகையினாலும் பெருமூச்சினாலும் நிரப்புகிறீர்கள்; ஆகையால், அவர் இனிக் காணிக்கையை மதியார், அதை உங்கள் கைகளில் பிரியமாய் ஏற்றுக் கொள்ளவு மாட்டார்'' (2:13).

அவர்களுடைய உணர்ச்சி வசப்பட்ட, வெளிப்பார்வைக்கு நேர்மையானது போலத்தோன்றும் ஜெபங்களெல்லாம் கேட்கப்படமாட்டாது, அவர்களது ஆராதனைக்கும், ஊழியத்திற்கும் அடையாளமாகச் செலுத்தப்படும் காணிக்கைகள் அங்கீகரிக்கப் பட மாட்டா. பல வேளைகளில் நாம் தேவனுக்குச் செய்யும் ஊழியத்தையே, நமது வாழ்க்கைத் துணைவருக்கும், குடும்பத்திற்கும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளைத் தட்டிக் கழிப்பதற்கேற்ற சாக்குப் போக்காக ஆக்கிக் கொள்கிறோம். அவ்விதமான ஊழியத்தை தேவன் அங்கீகரிக்க மாட்டார். நமது திருமண உறவில் உண்மையற்ற நிலையும், தோல்வியும் காணப்படும்பொழுது தேவன் நமது ஜெபங்களையோ, ஆராதனையையோ, ஊழியத்தையோ ஏற்றுக்கொள்ள மாட்டார். இந்து மதக் கலாச்சாரத்தின் பாதிப்பின் காரணமாக, தங்கள் குடும்பப் பொறுப்புகளையும், வாழ்க்கைத் துணைவருக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் தட்டிக் கழித்து விட்டு ஊழியம் செய்வது மெச்சத் தகுந்த செயல் என்று கருதும் கிறிஸ்தவர்கள் அநேகர் உண்டு. தேவன் அப்படி விரும்பியிருப்பாரானால், அந்த நபரைத் திருமணமாகாத தனி நிலையிலே தமக்கு . ஊழியம் செய்யும்படியாக அழைத்திருப்பார்.

ஆனால் ஏற்கெனவே திருமணமானவர்கள் பிரம்மச்சாரிகளையோ, கன்னியரையோ போல நடந்து கொள்ளக் கூடாது!

## 2. துரோகம் 2:14-15

''ஏன் என்று கேட்கிறீர்கள்; கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார்; உன் தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு நீ துரோகம் பண்ணினாயே...... ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்''

இஸ்ரவேல் மக்கள் பிற மக்களைச் சேர்ந்த விக்கிரகாராதனை செய்யும் பெண்களைத் திருமணம் செய்து கொண்டது மட்டுமல்லாமல், இளமையில் தாங்கள் மணம்புரிந்திருந்த தங்களது சொந்த மனைவிகளுக்குத் துரோகம் செய்து, அந்நிய ஜாதிப் பெண்களுடன் உறவு கொண்டனர். வசனங்கள் 14, 15ல் ''உன் இளவயதின் மனைவி'' என்ற சொற்களைக் கவனியுங்கள். தங்கள் மனைவிகளுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து, திருமண உடன்படிக்கையை மீறக்கூடாது என்று அவர்கள் எச்சரிக்கப்பட்டனர். அவர்கள் தங்கள் சிந்தனைகளையோ, உணர்ச்சிகளையோ சிதற விடக்கூடாது.

திருமண உறவின் தன்மை காரணமாக இவ்விதத் துரோகம் முற்றிலும் தகாததாகும். மல்கியா கீழ்கண்ட அடிப்படை சத்தியங்களைத் தருகிறார்.

### அ. திருமணம் என்பது கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள ஓர் உடன்படிக்கை

''.....உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு....''

திருமணம் என்பது சட்டத்தையும் சமுதாயத்தையும் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப் பட்ட ஒரு சமுதாய ஒழுங்கு என்றும், மக்கள் தங்கள் இச்சைகளைத் தாறுமாறாக நிறை வேற்றிக் கொள்வதைத் தடுப்பதற்காக ஏற்படுத்தப் பட்டது என்றும் உலகம் கருதுகிறது. பண்டைக் காலத்தில் நிலவிய ஹம்முராபியின் பாபிலோனிய சட்டத்தின் படி திருமணம் என்பது தேவையான பத்திரங்களைக் கொண்டு ஏற்படுத் தப்பட ஒரு சட்டரீதியான ஒப்பந்தம் ஆகும். ஆனால் திரு மண உடன்படிக்கை என்பது தேவனுக்கு முன்பாக செய் யப்படும் ஓர் ஒப்பந்தம் என்று வேதம் கற்பிக்கிறது. எனவே, உடன்படிக்கை செய்யும் கணவன் மனைவி ஆகிய இருவரும் அர்ப்பணம், நம்பிக்கை மற்றும் உண்மை உள்ள வர்களாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம். அது ஏதோ வெறும் உணர்ச்சிகளின் அடிப்படையிலான அனு பவம் மட்டுமல்ல, தினந்தோறும் ஜெபத்தோடும் அக்கறை யோடும் வளர்க்கப் பட வேண்டிய தொடர்ச்சியான ஓர் உறவும் ஆகும்.

### ஆ. திருமண உடன்படிக்கைக்கு சாட்சி தேவனே. 2:14

திருமண உறவு என்பது தேவனுடன் கணவனும், மனைவியும் சேர்ந்து அமைக்கும் ஒரு முக்கோண உறவா கும். தேவனே இந்த முக்கோணத்தின் உச்சியாயிருப்பார். ‘‘கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சி யாயிருக்கிறார்.’’ திருமண உறவு கணவனுக்கும் மனைவிக் கும் இடையே மட்டும் உள்ள தனிப்பட்ட விஷயம் அல்ல. தேவன் அதில் பங்கு பெறுகிறார், அக்கறையும், கரிசனை யும் கொள்கிறார். அந்த உறவில் உண்மையற்ற தன்மையும், நம்பிக்கைத் துரோகமும் இடம் பெறும் போது அவர் அதைக் கவனித்துப் பார்க்கிறார், அது அவர் உள்ளத்தைத் தொடுகிறது.

## இ. திருமணம் என்பது சமமான இருவருக் கிடையே ஏற்படும் ஓர் உடன்படிக்கை 2:14

"உன் தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியு மாகிய (அவள்)......" கணவனும் மனைவியும் திருமண ஒப் பந்தத்தின் பங்காளர்களாக வருணிக்கப் படுகின்றனர். பெண் ஆணுக்குச் சற்றுக் கீழானவள் என்று வேதம் கரு துவதில்லை. பல கலாச்சாரங்களின் கண்ணோட்டத்தின் படி ஆணை விட பெண் குறைவுபட்டவள். நம்முடைய கலா ச்சாரமானது நமது திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய கோட்பாடுகளை எவ்விதத்திலும் பாதிக்காதபடி நாம் கவ னமாக இருக்க வேண்டும். நம்முடைய மனப்பான்மையும், நடவடிக்கைகளும் வேத வசனத்தினால் ஆளப்படவேண்டு மேயன்றி, நமது கலாச்சாரத்தினாலோ, பழக்க வழக்கங்க ளினாலோ ஆளப்படக்கூடாது. மனிதனுடைய விலாவிலி ருந்து தேவன் மனுஷியை உருவாக்கினார். "தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷி யாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந் தார்" (ஆதியாகமம் 2:22). மனுஷியானவள் மனிதனில் பாதி பகுதி என்றும், அவனுடன் சேர்ந்து அவனை நிறை வாக்குகிறவள் என்றும் இது காட்டுகிறது. ஆதியாகமம் 2:18,20 ல் காணப்படும் "ஏற்ற துணை" என்ற சொல்லின் பொருள் "கண்ணாடியில் பிரதிபலிக்கும் தோற்றம்" என் பதாகும். அவள் அவனது தோழியாக அருகில் வைக்கப்பட வேண்டியவள். மாத்யூ ஹென்றி என்ற வேத அறிஞர் குறிப் பிடுகிறார்: "அவள் அவனது தலையிலிருந்து எடுக்கப்பட் டிருப்பாளானால் அவளைத் தலைமேல் தூக்கி வைத்துக் கொள்ளலாம். அவனது காலடியில் இருந்து எடுக்கப் பட்டி ருப்பாளானால், அவளைக் காலின் கீழ் போட்டு மிதிக்க லாம். ஆனால் அவள் அவனது விலாவிலிருந்து எடுக்கப் பட்டிருக்கிறபடியால் அவள் அவனது பக்கத்தில், அவனுக் குச் சமமாக வைக்கப்பட வேண்டும்."

''யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்'' என்று பவுல் எழுதுகிறார் (கலாத்தியர் 3:28). பேதுரு கணவன்மாருக்கு எழுதுகையில், ''உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களான படியினால்'' என்று மனைவிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார் (1 பேதுரு 3:7). மனைவிகள் கணவன்மாருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று வேதம் போதிக்கும்போது, குடும்பத்தில் இருவருக்கும் இருக்கும் பொறுப்பைப் பற்றியே பேசுகிறது. அதாவது, ஒரு மனைவி பெண் என்பதால் ஆணுக்குக் கீழ்ப்படிய அவசியமில்லை; ஆனால் ஒரு பெண் மனைவியாக இருக்கும்போது கணவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஏனெனில் ஒரு நிறுவனத்தில் ஒரே சமயத்தில் இரண்டு தலைவர்கள் இருக்க முடியாது. குடும்பம் என்ற நிறுவனத்தின் தலைவன் கணவனே, ஆனால் அவன் **சமமானவர்களுக்குள் முதன்மையானவன்** மட்டுமே.

பங்காளர்களாயிருப்பது என்றால் ஒருவரோடொருவர் நெருக்கமான தொடர்பு கொண்டு, தங்கள் விருப்பு வெறுப்புகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். கணவனோ அல்லது மனைவியோ தன்னிச்சையாக ஒரு தலைப்பட்சமான முடிவுகள் எடுக்கக் கூடாது. எல்லா முடிவுகளும் இருவரும் கலந்தாலோசித்து நன்றாக ஜெபித்தபின் எடுக்கப்பட வேண்டும். ஒரு மனிதன் சராசரி ஒரு நாளில் பேசும் 29,000 சொற்களில் 5000 சொற்களை வீட்டிலும், மீதியை வெளியிலும் பேசுகிறான் என்றும் இதற்கு மாறாக ஒரு பெண் சராசரி ஒரு நாளில் பேசும் 35,000 சொற்களில் 28,000 சொற்களை வீட்டிலும், வெறும் 7000 சொற்களை மட்டுமே வெளியிலும் பேசுவதாகவும் கூறப்படுகிறது. இது உண்மையெனில், பேச்சுத் தொடர்பில் பிரச்சினை எழுவது நிச்சயம். தங்களுக்கு இடையே வந்து கவனத்தைச் சித

றடிக்கும் செய்தித்தாள், தொலைக்காட்சி போன்ற யாவற் றையும் ஒதுக்கி வைத்து விட்டு ஒருவருடன் ஒருவர் பேசவும் ஒருவர் சொல்வதை அடுத்தவர் கேட்கவும், ஒருவரோடொ ருவர் பகிர்ந்து கொள்ளவும் நேரத்தை எப்படியாவது கண வனும் மனைவியும் கண்டுபிடிக்க வேண்டும்.

### 3. விவாகரத்து 2:16

*''தள்ளி விடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ் ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்; அப்படிப் பட்டவன் கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடுகிறான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஆகையால் நீங்கள் துரோகம் பண்ணாமல் உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.''*

இஸ்ரவேல் மக்களின் நடுவிலே காணப்பட்ட சீர்கு லைந்து போன குடும்ப வாழ்வின் இறுதிப்படி தள்ளி விடு தல் அல்லது விவாகரத்து ஆகும். திருமண உறவில் காணப் பட்ட நம்பிக்கைத் துரோகமும் உண்மையற்ற நிலையும் விவாகரத்திற்கு நேராக வழி நடத்தின. தேவன் விவாக ரத்தை அங்கீகரிக்கவில்லை என்பது இந்த வசனத்திலிருந்து தெளிவாகிறது. தோல்வியை ஒப்புக் கொண்டு, நிலைமை முற்றிப் போகுமுன் உறவு சரி செய்யப்பட்டிருக்குமானால் விவாகரத்து செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் தவிர்க்கப் பட் டிருக்கக் கூடும். ''கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடு கிறான்'' என்ற சொற்றொடர் எல்லாவிதமான அநீதிகள், அநியாயங்களைக் குறிப்பதாகும். விவாகரத்து என்பது விவாகரத்து செய்யப்படுபவருக்கு எதிராக இழைக்கப் படும் கொடுமையாகும்.

மோசேயின் நியாயப் பிரமாணத்தில் விவாகரத்து அனுமதிக்கப்பட்டிருந்தது. ''ஒருவன் ஒரு ஸ்திரீயை விவா கம் பண்ணிக் கொண்ட பின்பு, அவளிடத்தில் இலச்சை யான காரியத்தைக் கண்டு அவள் மேல் பிரியமற்றவனா னால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே

கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பி விட லாம்'' என்று வாசிக்கிறோம் (உபாகமம் 24:1). யூதர்கள் வெகு எளிதாக விவாகரத்து செய்வதற்கு இந்த வசனத்தை ஓர் ஏதுவாகப் பயன்படுத்திக் கொண்டனர். ஆகையினால் தான் நமது ஆண்டவர், ''உங்கள் மனைவிகளைத் தள்ளி விடலாமென்று உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக் கவில்லை'' (மத்தேயு 19:8) என்று கூறினார். தேவன் திரு மணத்தை உலகில் முதன் முதலாக ஏற்படுத்தியபொழுது கொடுத்த முதல் திருமணச் சட்டத்தை நினைவு படுத்தினார் (மத்தேயு 19:4-6). இன்னும் நமது ஆண்டவர், ''வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளி விடுகி றவன், அவளை விபசாரஞ் செய்யப் பண்ணுகிறவனாயி ருப்பான்; அப்படித் தள்ளி விடப்பட்டவளை விவாகம் பண் ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்'' (மத் தேயு 5:32) என்றும் கூறினார்.

மத்தேயு 19:9 ல் அவர், ''எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளி விட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்'' என்று சொன்னார். ''நீங்கள் துரோகம் பண்ணாமல் உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்'' என்ற 2:16 ன் கடைசிப்பகுதியை எருசலேம் வேதாகமம் என்ற ஆங்கில மொழி பெயர்ப்பு ''ஆதலால் உங்கள் சொந்த ஜீவனை மதித்து இவ்விதம் நம் பிக்கைத் துரோகம் செய்யாதிருங்கள்'' என்று பொருள் தரும்படி மொழி பெயர்த்துள்ளது. விவாகரத்தானது விவா கரத்து செய்தவரின் வாழ்க்கையையும், விவாகரத்து செய் யப்பட்டவரின் வாழ்க்கையையும், அவர்கள் வாழும் முழு சமுதாயத்தையும் பாதிக்கிறது. ஒருவருக்கொருவர் உண்மை யாயிருந்து தேவனைக் கனம் பண்ணும் திருமண உறவைக் கொண்ட ஆசீர்வதிக்கப்பட்ட குடும்ப வாழ்வே தேவன் தமது மக்களுக்கென்று கொண்டிருக்கும் சித்தமாகும்.

## அதிகாரம் 5

# கடவுளைக் குறை கூறுதல்

தன் கம்பெனியில் நடைபெற்ற ஒரு சம்பவத்தின் காரணமாக அருண் வெகுவாகப் பாதிக்கப்பட்டான், பல நாட்களாக அவனால் தூங்கக் கூட முடியவில்லை. அவன் எவ்வளவுதான் நன்றாக வேலை செய்தாலும் அவனுடைய அதிகாரி அவன் வேலையில் குற்றம் கண்டு பிடிப்பதையே தம் தொழிலாகக் கொண்டிருந்தார். ஆகையினால் நியாயப்படி அவனுக்கு வர வேண்டிய பதவி உயர்வை, அருணுடன் வேலை செய்த மற்றொரு நபருக்குக் கொடுத்து விட்டார். இது பாரபட்சமுள்ள நியாயமற்ற செயல் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அருணால் இதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவன் ஆண்டவரில் வைத்திருந்த விசுவாசம் கூடத் தடுமாறி விட்டது. அவனது போதகர், அவன் ஆண்டவருக்குக் கீழடங்கியிருக்க வேண்டும் என்றும் அவர் இந்தச் சூழ் நிலையின் மேல் ஆதிக்கமுள்ளவராய் தமது நோக்கங்களை நிறைவேற்ற இதைப் பயன்படுத்துவார் என்றும் ஆலோசனை கூறினார். ஆனால் அந்த ஆலோசனையையெல்லாம் ஏற்றுக் கொள்ளும் நிலையில் அருண் இல்லை. தேவன் தன்னைக் கைவிட்டு விட்டதாக அவன் குறை கூறினான். இந்த உலகில் நீதி செய்பவர்களுக்கும், பக்தியுள்ளவர்களுக்கும் இடமில்லை, தேவனுக்குக் கீழ்ப்படிவதில் ஒரு பயனுமில்லை என்று அவன் கூறினான்.

திருமதி தாஸ் தாம் அதிகமாக நேசித்த தம் மகனை இழந்து விட்டார்கள். திருமணமாகி அநேக ஆண்டுகளுக்குப் பின்பு பிறந்த மகன் அவன். அவன் சுகவீனமுற்ற போது அவர்கள் அதிக ஊக்கமாக ஜெபித்ததோடு அவன் சுகம் பெறுவதற்காக அநேகரை ஜெபிக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டார்கள். இப்போதோ அவன் மரித்துப்போனான், அவர்கள் தேவனை நோக்கிக் கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள். மீண்டும் மீண்டும் தேவனிடம், ''அவனை ஏன் எனக்குத்தந்து விட்டு, பின் திரும்பவும் எடுத்துக் கொண்டீர்? நீர் ஏன் அவனைக் குணமாக்கவில்லை? ஏன் என் ஜெபத்தைக் கேட்கவில்லை?'' என்றெல்லாம் கேட்டார்கள். ஆனாலும் அவருடைய அன்பை அவர்கள் சந்தேகிக்கவில்லை.

அருண், திருமதி தாஸ் இருவருமே தேவனைக் கேள்வி கேட்டார்கள். தேவனைக் கேள்வி கேட்பது தவறா? பல வேளைகளில் வாழ்வின் சூழ் நிலைகள் நம்மை உடைத்து, மனம் கலங்கச் செய்து விடுகின்றன. மனம் உடைந்த நிலையில் நமக்கு இவையெல்லாம் ஏன் நடக்கின்றன என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிவதில்லை. நாம் கேள்வி கேட்க ஆரம்பிக்கிறோம். இது தவறா? யோபின் நூலிலே யோபு தேவனை நோக்கிக் கேள்வி கேட்பதைப் பார்க்கிறோம், ஆனால் அதற்காக தேவன் யோபைக் கடிந்து கொள்ளவில்லை. தமது பாடுகளின் மத்தியிலே, ''நான் கர்ப்பத்தில்தானே அழியாமலும், கர்ப்பத்திலிருந்து புறப்படுகிற போதே சாகாமலும் போனதென்ன?'' என்று யோபு கேட்டார் (யோபு *3:11*). ''மனுஷனை நீர் ஒரு பொருட்டாக எண்ணுகிறதற்கும், அவன் மேல் சிந்தை வைக்கிறதற்கும் காலைதோறும் அவனை விசாரிக்கிறதற்கும், நிமிஷந்தோறும் அவனைச் சோதிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்? நான் என் உமிழ் நீரை விழுங்காதபடி எத்தனை காலம் என்னை நெகிழாமலும் என்னை விடாமலும் இருப்பீர். மனுயிரைக் காப்பவரே, பாவஞ் செய்தேனானால் உமக்கு நான் செய்ய வேண்டியது என்ன? நான் எனக்குத் தானே

பாரமாயிருக்கும்படிக்கு, நீர் என்னை உமக்கு இலக்காக வைத்தது என்ன?'' என்று கேட்டார் (யோபு 7:17-20). இன்னும் அநேகக் கேள்விகளையும் அவர் எழுப்பினார். ஆனாலும் தேவன் அவரைக் கடிந்து கொள்ளவில்லை. மாறாக, யோபுவின் பாவங்கள்தாம் அவருடைய பாடுகளுக்குக் காரணம் என்று கூறிய அவரது நண்பர்களைக் கடிந்து கொண்டார். நாம் மனமுடைந்து கதறும் போது எழுப்பும் கேள்விகளையும் முறையீடுகளையும் தேவன் புரிந்து கொள்கிறார். அவ்விதமாக மன வேதனையிலிருந்து எழும்பும் கேள்விகள் கலகத்தையோ, அவிசுவாசத்தையோ காட்டவில்லை. ஆனால் அதே வேளையில் நாம் அவிசுவாசம் கொண்டு தேவனுக்கு எதிராக முரட்டாட்டம் செய்து அவருடைய தன்மையைக் குறித்து கேள்விகள் எழுப்பக்கூடும். அருண் அப்படித்தான் செய்தான். சூழ்நிலையில் தேவனிடமாகத் திரும்பி அவர் கரங்களில் விழுந்து விட்ட திருமதி தாஸைப் போலசெய்யாதபடி, அருண் தேவனை விட்டு விலகிப் போனான்.

மல்கியா தீர்க்கதரிசனம் உரைத்த நாட்களில் இஸ்ரவேலர் கடினமான சூழ்நிலைகளால் நெருக்கப்பட்டிருந்தார்கள். சிறிய மக்கள் கூட்டமாகிய அவர்களைச் சுற்றிலும் வலிமை மிக்க பகைவர்கள் சூழ்ந்திருந்தார்கள். பொருளாதாரம் மிகக் கீழான நிலையில் இருந்தது. ஆலயம் கட்டி முடிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் சார்பாக அற்புதங்கள் ஏதும் நிகழவில்லை. ஏமாற்றம் தலை தூக்கி விட்டது. அவர்கள் நினைத்திருந்தது போல தேவன் அவர்கள் மத்தியில் தமது பிரசன்னத்தை நிரூபிக்கும் வெளிப்பாடுகளைத் தரவில்லை, அற்புதமான விதத்தில் அவர்களுக்கு உதவி செய்ய வரவில்லை. சகரியா *8:3* ல் காணப்படும், ''நான் சீயோனிடத்தில் திரும்பி, எருசலேமின் நடுவிலே வாசம் பண்ணுவேன்'' என்பது போன்ற வாக்குத்தத்தங்களை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருந்தனர். எனவே இப்பொழுது தேவன் தங்களைக் கைவிட்டு விட்டதாக எண்ணினர். அவ

ரைச் சந்தேகித்து கேள்வி கேட்க ஆரம்பித்தனர். முறிந்த உடன்படிக்கையின் மற்றொரு அடையாளம் இந்த விசுவாச வீழ்ச்சியாகும்.

### விசுவாச வீழ்ச்சி 2:17, 3:13-15

''உங்கள் வார்த்தைகளினாலே கர்த்தரை வருத்தப் படுத்துகிறீர்கள்'' என்று தீர்க்கதரிசி கூறுகிறார் (வசனம் 17). வேத வசனத்தின்படி தேவன் நமது ஜெபங்களினாலோ, முறையீடுகளினாலோ அல்லது கேள்விகளினாலோ ஒரு போதும் வருத்தமடைவதில்லை, அவரை வருத்தப்படுத்துவது நம்முடைய பாவங்கள் மட்டுமே. ''உன் பாவங்களினால் என்னைச் சங்கடப்படுத்தி, உன் அக்கிரமங்களினால் என்னை வருத்தப்படுத்தினாய்'' (ஏசாயா 43:24). ஆனால் இங்கு அவர்களுடைய வார்த்தைகளினால் தேவன் வருத்தமடைவதாகப் பார்க்கிறோம். காரணம், அவர்களுடைய வார்த்தைகள் முரட்டாட்டத்தின் வார்த்தைகளாகவும் அவிசுவாசத்தின் வார்த்தைகளாகவும் இருந்தன. அவர்களுக்குத் தேவன் பேரில் நம்பிக்கை இல்லை. அவரைக் கனம் பண்ணாதபடி, மதிக்காதபடி அகங்காரம் கொண்டிருந்தனர். அவர்களுடைய வார்த்தைகள் அவர்களது ஆவிக்குரிய நிலையைக் காட்டின. நம் சொற்களும் நம் ஆவிக்குரிய நிலையைக் காட்டுகின்றன. சில வேளைகளில் நாம் தேவனுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுக்காதபடி அவரைப் பற்றி மனம் போலப் பேசுகிறோம். அவருக்கு எதிராக முறுமுறுக்கிறோம். நாம் சொல்வதையெல்லாம் தேவன் கவனிப்பதில்லை என்று எண்ணிக் கொள்கிறோம். ஆனால் நமது முறையீடுகளின் முறுமுறுப்பின் வார்த்தைகளைத் தேவன் கவனித்துக் கொண்டே இருக்கிறார் என்று வேதம் திட்டவட்டமாகப் போதிக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் எப்பொழுதெல்லாம் தேவனுக்கு எதிராக முறுமுறுத்தார்களோ அப்பொழுதெல்லாம் அதைக் கேட்டு அவர் துக்கப்பட்டார். ''மனுஷர் பேசும்

வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்'' (மத்தேயு 12:36,37) என்று இயேசு சொன்னார்.

## 1. சன்மார்க்க மதிப்பீடுகள் கேள்வி கேட்கப்பட்டன 2:17, 3:15

''எதினாலே அவரை வருத்தப்படுத்துகிறோம் என்கிறீர்கள்; பொல்லாப்பைச் செய்கிறவனெவனும் கர்த்தரின் பார்வைக்கு நல்லவன் என்றும், அப்படிப் பட்டவர்கள் பேரில் அவர் பிரியமாயிருக்கிறாரென்றும் சொல்லுகிறதினாலேயே''

''இப்போதும் அகங்காரிகளைப் பாக்கியவான்கள் என்கிறோம்; தீமை செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள்; அவர்கள் தேவனைப் பரிட்சை பார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்களே என்று சொல்லுகிறீர்கள்.''

நல்லவர்களாகவும் நீதிமான்களாகவும் இருப்பதில் எவ்வித பயனுமில்லை என்றும் துன்மார்க்கர் செழிக்கிறார்கள், தேவனும் அவர்கள் பேரில் பிரியமாயிருக்கிறார் என்றும் அவர்கள் சொன்னார்கள். இது பழைய ஏற்பாட்டில் மீண்டும் மீண்டும் தோன்றிய ஒரு பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்கு யோபின் நூலில் தீர்வு காணப்பட்டது. யோபு பாவம் செய்ததினால் தான் பாடனுபவிக்கிறார் என்று அவரது நண்பர்கள் கருதினர். ஆனால் அவரோ தாம் குற்றமற்றவரென்று சாதித்தார். சங்கீதம் 37:1 கூறுகிறது: ''பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே; நியாயக்கேடு செய்கிறவர்கள் மேல் பொறாமை கொள்ளாதே.'' சங்கீதக்காரர், ''ஆனாலும் என் கால்கள் தள்ளாடுதலுக்கும், என் அடிகள் சறுக்குதலுக்கும் சற்றே தப்பிற்று. துன்மார்க்கரின்

வாழ்வை நான் காண்கையில், வீம்புக்காரராகிய அவர்கள் மேல் பொறாமை கொண்டேன்'' (சங்கீதம் 73:2,3) என்று கூறுகிறார். துன்மார்க்கன் தன்னைப்பார்க்கிலும் நீதி மானை மேற்கொள்வதை, அதாவது பாபிலோனியர் இஸ் ரவேலரை அழித்துப் போட தேவன் அனுமதித்ததை ஆப கூக் கண்டபொழுது குழம்பித் தடுமாறினார். ''துன்மார்க் கன் நீதிமானை வளைந்து கொள்ளுகிறான்; ஆதலால் நியா யம் புரட்டப்படுகிறது'' (ஆபகூக் 1:4). ''துன்மார்க்கன் தன் னைப் பார்க்கிலும் நீதிமானை விழுங்கும்போது நீர் மௌனமாயிருக்கிறதென்ன?'' (ஆபகூக் 1:13). எனவே, இஸ்ரவேலர் நீதியைப் பின்பற்றுவதில் எந்தப் பயனு மில்லை என்ற முடிவிற்கு வந்தனர். நீதியின் பாதையில் நடப்பதால் லாபமில்லை! நாமும் அடிக்கடி இந்த முடிவிற்கு வருகிறோம், இல்லையா?

நமது ஆண்டவரைப் பிரியப்படுத்த வேண்டும், அவ ரைக் கனம் பண்ண வேண்டும் என்பதற்காக நீதியாய் நடக் கிறோமா அல்லது நமது சுய ஆதாயத்திற்காக அவ்விதம் நடக்கிறோமா? கீழ்ப்படிதலின் பாதை நீதியின் பாதை ஆசீர் வாதத்திற்கு நேராக நம்மை நடத்தும் என்பது நிச்சயம். ஆனால் நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கு இது ஒரு உள் நோக்கமாய் அமையக்கூடாது.

## 2. ஆவிக்குரிய மதிப்பீடுகள் கேள்வி கேட்கப்பட்டன 3:14

''தேவனைச் சேவிப்பது விருதா, அவருடைய கட்டளை களைக் கைக்கொள்ளுகிறதினாலும், சேனைகளின் கர்த்த ருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினாலும் என்ன பிர யோஜனம்?''

''கர்த்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறது'' என்பது மனந்திரும்பி ஆண்டவருக்கு முன்பாகப் பயபக்தியோடு நடந்து கொள்ளுதலைக் குறிக்கிறது. அவர்கள் மனந்திரும்பி

தேவனுக்குப் பயந்து நடப்பதில் பிரயோஜனமில்லை என்று கூறினார்கள்.

"தேவனைக் கிட்டிச் சேரச் சேர பாடுகள் தான் அதிகமாகின்றன. பயபக்தியாய், ஆவிக்குரிய வாழ்க்கை செய்வதால் என்ன பயன்?" என்று மக்கள் அடிக்கடி கூறுவதை நாம் கேட்டிருக்கிறோமல்லவா? நாம் எதற்காக தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஊழியம் செய்கிறோம்? அவரை நேசிப்பதினாலா அல்லது நமக்கு ஏதாவது நன்மைகள் கிட்டும் என்பதினாலா? "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்" (யோவான் 14:23) என்று நமதாண்டவர் கூறினார்.

யோபு எல்லாவற்றையும் இழந்த போது, தம் பிள்ளைகளையும் தம் உடல் சுகத்தையும் கூட இழந்த போது, தேவனை நம்புவதில் பயனில்லை என்று கூறவில்லை. அவருடைய மனைவி கூட, "தேவனைத் தூஷித்து ஜீவனை விடும்" என்று கூறினாள். அவரோ, "நீ பயித்தியக்காரி பேசுகிறது போலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ?". என்றார் (யோபு 2:9,10). மேலும் அவர், "அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்" என்றார் (யோபு 13:15).

நேபுகாத்நேச்சார் ராஜா, தான் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ள சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் மறுத்தபோது, அவர்களை எரிகிற சூளைக்குள் போட்டு விடப்போவதாகப் பயமுறுத்தினான். அதற்கு அவர்கள், "நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற் போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்

வதுமில்லை'' (தானியேல் **3:16,17**) என்று பதிலளித்தனர். எவ்வளவு தைரியம்! எத்தனை உறுதி! தேவன் தங்களை ஆபத்திலிருந்து விடுவிப்பார் என்பதற்காக அவர்கள் அவரைச் சேவிக்கவில்லை. நமது சௌக்கியத்திற்காகவும், செல்வமான வாழ்விற்காகவும் நாம் தேவனை நம்பி அவரைச் சேவிக்கிறோமா? அல்லது, அவரில் அன்பு கூர்ந்து அவருக்காகவே அவரை நம்பிச் சேவிக்கிறோமா?

### 3. தேவனுடைய தன்மை கேள்வி கேட்கப்பட்டது. 2:17

''எதினாலே அவரை வருத்தப்படுத்துகிறோம் என்கிறீர்கள்;..... நியாயந்தீர்க்கிற தேவன் எங்கேயென்றும் நீங்கள் சொல்லுகிறதினாலேயே.''

''நியாயந்தீர்க்கிற தேவன் எங்கே'' என்ற கேள்வி தேவன் இருக்கிறாரா என்று கேட்பதற்கு ஒப்பாகும். அது தேவனுடைய சுபாவத்தை, தன்மையைக் கேள்வி கேட்பதாகும். எனவே இது ஒரு கடுமையான கேள்வியாகும். சாத்தான் எப்போதும் தேவனுடைய குணாதிசயங்களைப் பற்றி நாம் கேடாகச் சிந்திக்க விரும்புகிறான். தேவனுடைய தன்மையைப் பற்றி நாம் சந்தேகிக்கவும் கேள்வி கேட்கவும் நம்மைத் தூண்டி விடுகிறான். சர்ப்பத்திடம் ஏவாள், ''அந்த மரத்தின் கனியைப்புசித்தால் நாங்கள் சாவோம் என்று தேவன் சொன்னார்'' என்று கூறியபோது, சாத்தான் தேவனை ஒரு பொய்யராகவும், அவளிடமிருந்தும் அவள் கணவனிடமிருந்தும் நன்மையான ஒன்றை விலக்கி வைப்பவராகவும் காட்ட முயன்றான். ஏவாளிடம், ''நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்'' என்றான் (ஆதியாகமம் **3:4,5**). பல வேளைகளிலும், நமக்குத் துன்பம் நேரிடும்போது, நாம் தேவனுடைய அன்பைச் சந்தேகிக்க ஏவப்படுகிறோம். இது

அவருடைய குணாதிசயத்தையே கேள்வி கேட்பதாகும். அன்பாகவே இருக்கிறார் என்று திட்டவட்டமாய் நமக்குத் தெரிவிக்கும் அவருடைய வசனத்தைப் பார்ப்பதன் மூலமும் (1 யோவான் 4:8) அவரது அன்பை எடுத்துக்காட்டும் சிலுவையை நோக்கிப் பார்ப்பதன் மூலமும் அவருடைய அன்பின் மீதுள்ள நமது விசுவாசத்தை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (ரோமர் 8:32).

**சமுதாய வாழ்வில் தோல்வி 3:5**

சமுதாய வாழ்வின் வீழ்ச்சி முறிந்த உடன்படிக்கைக்கு மற்றொரு அறிகுறியாகும். பல வேளைகளில் நாம் நமது தனிப்பட்ட பாவங்களை மட்டும் பயங்கரமானவையாகக் கருதுகிறோம், சமுதாயப் பாவங்களின் கடூரத்தை நாம் உணருவதில்லை. பாவத்திற்கும் ஒரு சமுதாய கோணம் உண்டென்பதை நாம் மறக்க கூடாது.

"நான் நியாயத்தீர்ப்புச் செய்யும்படி உங்களிடத்தில் வந்து, சூனியக்காரருக்கும் விபசாரருக்கும் பொய்யாணை இடுகிறவர்களுக்கும், எனக்குப் பயப்படாமல் விதவைகளும் திக்கற்ற பிள்ளைகளுமாகிய கூலிக்காரரின் கூலியை அபகரித்துக் கொள்ளுகிறவர்களுக்கும், பரதேசிக்கு அநியாயஞ் செய்கிறவர்களுக்கும் விரோதமாய்த் தீவிரமான சாட்சியாயிருப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (3:5).

கூலிக்காரரின் கூலியை அபகரிப்பது, விதவைகளையும், திக்கற்ற பிள்ளைகளையும் ஒடுக்குவது, பரதேசிகளுக்கு அநியாயம் செய்வது ஆகிய பாவங்கள் சூனியம் செய்வது, விபசாரம் செய்வது போன்றவற்றிற்கு ஒப்பான கடுமையான பாவங்களாவன. நாம் நமது தனிப்பட்ட பாவங்க

ளைக் குறித்து மட்டுமல்ல, சமுதாயப் பாவங்களுக்காகவும் மனம் வருந்தி அவற்றை விட்டுத் திரும்ப வேண்டியது அவசியம். தனி வாழ்வில் மட்டுமல்ல, சமுதாய வாழ்விலும் பரிசுத்தம் காணப்பட வேண்டும். தனி வாழ்வின் நேர்மை மட்டுமல்ல, எல்லா, சமுதாய உறவுகளிலும் நீதியும் நியாயமும் காணப்பட வேண்டியது கிறிஸ்தவ வாழ்விற்கு அவசியமாகும்.

இந்த வசனத்தில், நியாயப்பிரமாணத்தில் எதையெல்லாம் மீறிப்போட்டார்கள் என்பதைக் குறிப்பிடுகிறார் மல்கியா.

**சூனியம்** செய்யக்கூடாது என்று கட்டளை இருந்தது. "சூனியக்காரியை உயிரோடே வைக்க வேண்டாம்" (யாத்திராகமம் 22:18).

**விபசாரம்** யாத்திராகமம் 20:14ல் தடைசெய்யப்பட்டது. "விபசாரம் செய்யாதிருப்பாயாக."

லேவியராகமம் 19:12 **பொய்ச்சாட்சி** சொல்வதற்குத் தடை விதிக்கிறது. "என் நாமத்தைக் கொண்டு பொய்யாணையிடுகிறதினால், உங்கள் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலும் இருப்பீர்களாக."

**கூலிக்காரரின் கூலியை அபகரிப்பதற்கு** லேவியராகமம் 19:13 ம் உபாகமம் 24:14, 15ம் தடை விதிக்கின்றன.

"கூலிக்காரனுடைய கூலி விடியற்காலம் மட்டும் உன்னிடத்தில் இருக்கலாகாது."

"உன் சகோதரரிலும் உன் தேசத்தின் வாசல்களிலுள்ளஅந்நியரிலும் ஏழையும் எளிமையுமான கூலிக்காரனை ஒடுக்காயாக; அவன் வேலைசெய்த நாளில் தானே, பொழுது போகுமுன்னே, அவன் கூலியை அவனுக்குக்

கொடுத்து விடவேண்டும்; அவன் ஏழையும் அதின்மேல் ஆவலுமாயிருக்கிறான்; அதைக் கொடாவிட்டால் அவன் உன்னைக் குறித்துக் கர்த்தரை நோக்கி முறையிடுவான்; அது உனக்குப் பாவமாயிருக்கும்.''

**விதவையையும் திக்கற்ற பிள்ளைகளையும் ஒடுக்குவது** யாத்திராகமம் 22:22, 23 ல் தடை செய்யப்பட்டுள்ளது. ''விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் ஒடுக்காமல் இருப்பீர்களாக. அவர்களை எவ்வளவாகிலும் ஒடுக்கும் போது அவர்கள் என்னை நோக்கி முறையிட்டால், அவர்கள் முறையிடுதலை நான் நிச்சயமாய்க் (கேட்பேன்)''

இப்பொழுது அயல்நாட்டவர் அல்லது குடி பெயர்ந்தவர் என்று நாம் கூறுகிறவர்களை வேதம் அந்நியன் என்றும், பரதேசி என்றும் குறிப்பிடுகிறது. அவ்விதமான **அந்நியருக்கு அநியாயம் செய்வது** உபாகமம் 24:17 ல் தடை செய்யப்பட்டுள்ளது. ''நீ அந்நியனுடைய நியாயத்தையும், திக்கற்ற பிள்ளயின் நியாயத்தையும் புரட்டாமலும்..... (இரு).''

சமுதாயக் கொடுமைகள், சன்மார்க்க பாவங்கள், ஆவிக்குரிய பாவங்களைப் போலவே கடுமையாகக் கருதப்பட்டன. இவையெல்லாமே தேவனுக்கு எதிரான பாவங்கள். இவையெல்லாவற்றுக்கும் மூல காரணம் அவர்கள் ''தேவனுக்குப் பயப்படாததே''.

நமது வேலை, வியாபாரம் மற்றும் சமுதாய வாழ்வு ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் நமது உறவுகளும், கொடுக்கல் வாங்கல்களும் தேவனுக்குப் பயப்படும் பயத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். தேவ பயம் நம்மை அறநெறித் தூய்மை, ஆவிக்குரிய நேர்மை, சமுதாய நீதி இவற்றிற்கு நேராக வழி நடத்த வேண்டும்.

## அதிகாரம் 6

# கடவுளை வஞ்சித்தல்

சாம் தமது திருச்சபையைக் குறித்து அதிக மனத்தாங்கல் கொண்டார். காரணம், அவர் தவறு என்று கருதிய சில தீர்மானங்களைச் சபைக் குழுவினர் செய்ததுதான். அது மட்டுமல்ல, தங்கள் போதகர் ஆவிக்குரியவரல்ல என்று சாம் கருதினார், அவருடைய பிரசங்கமும் சாம் எதிர்பார்த்த அளவு நன்றாக இல்லை. அவர் தமது நண்பரிடம், ''நான் சபைக்குக் காணிக்கை கொடுப்பதை நிறுத்திவிட்டேன். அவர்கள் சரியானபடி பணத்தைச் செலவு செய்வதில்லை. சபையின் தலைமையும் ஆவிக்குரியதாயில்லை'' என்று கூறினார். அவருடைய நண்பர் சொன்னார் : ''சாம், நாம் சபைக்காகவோ அதன் தலைவர்களுக்காகவோ கொடுப்பதில்லை, ஆண்டவருக்குக் கொடுக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் கொடுப்பது, ஆண்டவருக்கு நாம் செய்திருக்கும் அர்ப்பணத்தின் அடையாளமாய் அமைகிறது.''

மணி கடனில் மூழ்கிப் போய் திண்டாடிக் கொண்டிருந்தார். அவருடைய சாட்சியை இது பாதிக்குமென அவரது நண்பர் சுட்டிக் காட்டிய போது அவர், ''இதற்கும் என் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. இது என் தனிப்பட்ட விஷயம்'' என்று கூறினார்.

சாம், மணி இருவரும் கூறுவது சரிதானா? ''துன்மார்க்கன் கடன் வாங்கிச் செலுத்தாமற் போகிறான்; நீதிமானோ இரங்கிக் கொடுக்கிறான்'' (சங்கீதம் 37:21) என்று வேதம் கூறுகிறது. கடனை வாங்கி விட்டு அதைத் திருப்பிக் கொடுக்காமல் இருப்பது தேவனுடைய பார்வையில் துன் மார்க்கமான காரியமாயிருக்கிறது. தேவனுக்கு நமது சம் பாத்தியத்தையும், செலவழிக்கும் முறையையும், நாம் வாங்கு வதையும், விற்பதையும், நமது பொருளாதாரத்தையும், நிதி நிலைமையையும் பற்றி அக்கறை உண்டு. நாம் எந்த விதத் தில் செலவு செய்கிறோம் என்பது நமது அர்ப்பணத்தின் ஆழத்தைக் காட்டுகிறது. நமது நிதி வாழ்க்கை ஆண்டவ ருக்கு முற்றிலுமாக ஒப்புக்கொடுக்கப் படவேண்டும். தேவ னுக்குக் கொடுப்பதில் காணப்படும் தவறு அர்ப்பணத்தில் ஏற்படும் வீழ்ச்சியைக் குறிக்கும். இது முறிந்த உடன்படிக் கைக்கு மற்றுமொரு அறிகுறி.

## *அர்ப்பணத்தில் தோல்வி 3:6-12*

### *1. தேவனுடைய கிருபை அறிவிக்கப்பட்டது 3:6*

*''நான் கர்த்தர், நான் மாறாதவர்; ஆகையால் யாக்கோ பின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாகவில்லை.''*

*3:5*ல் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றிய எச்ச ரிப்புக்கு அடுத்து உடனே, அடுத்த வசனத்தின் ஆரம்பத்தில் அவருடைய கிருபை மாறுவதில்லை என்று கூறப்பட்டுள் ளது. ''யாக்கோபின் புத்திரர்'' என்று கூறப்படக் காரணம், யாக்கோபு என்பது 'எத்தன்' என்று பொருள் படும், உங்கள் முற்பிதாவாகிய யாக்கோபைப் போலவே நீங்களும் ஏமாற் றுபவர்கள் என்று தேவன் கூறுகின்றார். வசனம் 6, ''கர்த் தராகிய நான் மாறவில்லை, யாக்கோபின் புத்திரராகிய நீங்களும் (ஏமாற்றுவதை விட்டு) ஓயவில்லை'' என்றும் மொழிபெயர்க்கப் படலாம். ''ஓயவில்லை'' என்பது ''அழி

யவில்லை'' அதாவது ''நிர்மூலமாகவில்லை'' என்றும் பொருள் படலாம். ஓர் ஆங்கில மொழி பெயர்ப்பு, ''நான் மாறாத கர்த்தர்; நீங்களும் யாக்கோபின் புத்திரராகவே இருக்கிறீர்கள்'' என்ற பொருளில் மொழி பெயர்க்கிறது. ஆண்டவர் மேலும் கூறினார்: ''நீங்கள் உங்கள் பிதாக்க ளின் நாட்கள் தொடங்கி என் கட்டளைகளைக் கைக்கொள் ளாமல், அவைகளை விட்டு விலகிப் போனீர்கள்'' (3:7). அப்படியிருந்தும் கூட, அவர் தமது கிருபையின் நிமித்தமாக அவர்களை நிர்மூலமாக்கவில்லை.

## 2. மனந்திரும்புதல் கட்டளையிடப்பட்டது 3:7

''என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களி டத்திற்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.''

தமது கிருபையின் அடிப்படையில் ஆண்டவர் அவர் கள் தம்மண்டை திரும்ப வேண்டும் என்று கேட்கிறார். அவர்கள் தாங்கள் தோல்வியில் வாழ்வதையே இன்னும் உணரவில்லை; எனவே மனந்திரும்ப இயலவில்லை. ஆகை யினால் தான் ''நாங்கள் எந்த விஷயத்தில் திரும்ப வேண் டும்?'' என்று கேட்டார்கள். தோல்வியை விடக் கேடானது நாம் தோல்வியடைந்து விட்டோம் என்பதையே உணரா மல் இருப்பதுதான்.

''நாங்கள் எந்த விஷயத்தில் திரும்ப வேண்டும்?'' என்று அவர்கள் கேட்டபொழுது, தேவன் ''மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கி றீர்கள்'' என்று பதிலளித்தார். அவர்கள் காணிக்கைகளி லும் தசமபாகங்களிலும் தன்னை வஞ்சிப்பதை அவர்களுக் குச் சுட்டிக் காட்டினார். அவர்களுடைய மனந்திரும்புதல், பணத்தைக் குறித்த அவர்களது மனப்பான்மையில் வெளிப் பட வேண்டும். ஒரு மனிதனுடைய பணம், அவன் வாழ்க் கையைப் பற்றிக் கொண்டிருக்கும் எண்ணத்தை எடுத்துக்

காட்டுகிறது. ஒரு மனிதனுடைய மனந்திரும்புதல் அவனது நிதி வாழ்க்கையையும் பணத்தைப் பற்றிய மனப்பான்மையையும் மாற்றவில்லையானால் அவன் மனநதிரும்பி விட்டேன் என்று கூறுவதை நம்பவே முடியாது. உதாரத்துவமாகவும், தியாகத்துடனும் கொடுக்கும் ஈகை இல்லையெனில் அந்த ஆவிக்குரிய வாழ்க்கை போலியானது. நமது பணப் பைகளை நமது மனமாற்றம் பாதிக்கவில்லையானால் அது உண்மையான மனமாற்றமாக முடியாது. நமது ஆண்டவர், ''உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்'' ((மத்தேயு 6:21) என்று கூறினார். மல்கியா நூலில் ஆண்டவர் தமது மக்களிடம், அவர்கள் உண்மையாகவே தம்மிடம் திரும்புவார்களானால் தமது ஆலயத்திற்குத் தசமபாகங்களையும் காணிக்கைகளையும் கொண்டு வருவதில் உண்மையாய் இருப்பார்கள் என்று கூறினார்.

அவர்கள் இந்தக் காரியத்தில் தோல்வியுற்று இருப்பதை எடுத்துக் காட்டினார்.

### அ. துரோகம் 3:8, 9

''மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலும் தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்.''

''வஞ்சிப்பது'' என்ற சொல்லும், ''யாக்கோபு'' என்ற சொல்லும் ஒரே மூலச்சொல்லிலிருந்து வந்தவை. எருசலேம் வேதாகமம் என்ற மொழிபெயர்ப்பு இதை 'எத்தன்' என்ற பொருளில் மொழிபெயர்த்துள்ளது. தேவன் அவர்களிடம் ''நீங்கள் என்னை யாக்கோபு செய்கிறீர்கள்!'' என்றார். அதாவது தேவனைத் தசமபாங்களிலும் காணிக்கைகளிலும் ஏமாற்றிய போது, தாங்கள் யாக்கோபின் குமாரர் என்பதை

நிரூபிக்கும் வகையில் நடந்து கொண்டனர். காணிக்கைக ளையும் தசமபாகங்களையும் கொடாமல் இருப்பது ''வஞ் சிப்பது'' அல்லது ''ஏமாற்றுவது'' என்று கூறப்படுவதைக் கவனியுங்கள். உண்மையில் இந்தத் தசமபாகங்களையும் காணிக்கைகளையும் அனுபவிப்பவர்கள் ஆசாரியரும் லேவியருமே என்ற போதிலும், அவற்றைக் கொடாமலிருப் பது மக்களுக்குத் தேவனோடிருந்த உறவைப் பாதித்தது. பல வேளைகளில் போதகரோ, அல்லது சபையினரோ தவறு செய்கிறார்கள் என்பதற்காகக் காணிக்கைகள் கொடுப் பதை நிறுத்தி விடுகிறோம். நாம் கொடுப்பது தேவனுக்கே என்றும், கொடாமல் நிறுத்துவது தேவனுக்கும் நமக்குமுள்ள உறவைப் பாதிக்கும் என்றும் நாம் மறந்து போகக் கூடாது. நாம் தேவனை வஞ்சிக்கிறவர்களாய் இருப்போம்! இந்த நூலில் நாம் வாசித்தபடி லேவிய.ரும் ஆசாரியரும் அந்நாட் களில் தேவனுக்கு உண்மையற்றவர்களாயிருந்தார்கள். ஆனால், அந்த உண்மையற்ற லேவியருக்கும் ஆசாரியருக் கும் மக்கள் தசமபாகங்களையும் காணிக்கைகளையும் கொடாதபடி நிறுத்திப் போட்ட பொழுது, தேவன் மக்க ளைக் கடிந்து கொண்டார். ''லேவியருக்கு அவர்கள் பங்கு கள் கொடுக்கப்படவில்லையென்பதை'', நெகேமியா அறிந்த போது, ''தலைமையானவர்களோடே வழக்காடி, தேவனுடைய ஆலயம் கைவிடப்பட்டுப் போவானேன்'' என்று சொல்லி அவர்களைக் கடிந்து கொண்டார் (நெகே மியா **13:10, 11**).

சில மாதங்களில் செலவுகள் அதிகமிருப்பதால் சிலர் அம்மாதங்களில் காணிக்கைகள், தசமபாகங்கள் கொடுக்கா மலிருந்து விடுகின்றனர். இப்படி அவர்கள் செய்யும்பொ ழுது அவர்களுடைய எண்ணம் என்ன? சில செலவினங் கள் தேவனை விட முக்கியமானவை, தேவன் எப்படியும் காத்திருப்பார் என்பதே! நம்முடைய மதிப்பீடுகள் எப்படிப் பட்டவை என்பதையும் நமது அர்ப்பணம் எவ்வளவு ஆழ மானது என்பதையும் இது வெளிப் படுத்துகிறது. அர்ப்ப

ணம் என்பது, நாம் நம்மையும் நமக்குரிய அனைத்தையும் கடவுள் பயன் படுத்துவதற்காக முற்றிலும் அவருக்கு ஒப்புக்கொடுப்பது ஆகும். அது நம் வாழ்க்கையில் வேறு எவரையும், வேறு எதையும் விட அவருக்கு மேலான இடத்தைக் கொடுப்பது, எந்தக் கிரயம் செலுத்தியும் அவருக்குக் கீழ்ப்படிய ஆயத்தமாய் இருப்பது.

## ஆ. பிரமாணம் 3:10

''என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.''

தசமபாகம் அதாவது பத்தில் ஒன்றை ஆண்டவருக்குக் கொடுக்க வேண்டுமென்ற பிரமாணத்தை வேதம் போதிக்கிறது. நாம் அறிய வேண்டிய சத்தியங்கள் மூன்று உண்டு.

### i) தசமபாகம் என்பது தேவன் தமது மக்களுக்குக் கொடுத்த பிரமாணம்

தசமபாகம் என்பது மோசேயின் நியாயப் பிரமாணத்தில் கொடுக்கப்பட்டது என்றும் நாம் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிற படியால் அதைக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும் அநேகர் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். இதிலே இரண்டு தவறுகள் இருக்கின்றன. ஒன்று, தசமபாகம் என்பது மோசேயின் நியாயப்பிரமாணத்தில் மட்டும் கொடுக்கப் பட்டது அல்ல. மோசேயின் நியாயப் பிரமாணம் அருளப் படுவதற்கு முன்னரும் கூட தேவனுடைய மக்கள் தசமபாகம் செலுத்தி வந்தனர். இரண்டாவதாக, பழைய ஏற்பாட்டின்படி குறைந்த பட்சம் பத்தில் ஒன்றாவது கொடுக்கப்பட வேண்டியது அவசியமானால், புதிய உடன்

படிக்கைக்குக் கீழ்ப்பட்டிருக்கிற நாம் எவ்வளவு அதிகமாகக் கொடுக்க வேண்டும்! பொதுவாக தசமபாகம் கொடுக்க வேண்டியது அவசியம் தானா என்று வாதிடுபவர்கள் அந் தக் குறைந்த பட்சத்தைக் கூடக் கொடுப்பதில்லை!

தன்னை விட உயர்ந்த ஒருவருக்கு, தனது உடைமைக ளில் பத்தில் ஒன்றை அளிக்கும் வழக்கம் பண்டைக் காலந் தொட்டே இருந்திருக்க வேண்டும். ஆபிராம், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாகிய மெல்கிசெதேக்குக்குத் தசம பாகம் கொடுத்தார் (ஆதியாகமம் 14:20). யாக்கோபு பெத் தேலில், ''தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன்'' (ஆதியாகமம் 28:22) என்று பொருத்தனை பண்ணினார். தசமபாகம் செலுத்துவதன் அவசியத்தை அவர் அறிந்திருந்தார். புதிய ஏற்பாடும் தசம பாகம் கொடுக்கும் வழக்கத்தை உறுதி செய்கிறது. ''மாயக் காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசம பாகம் செலுத்தி, நியாயப் பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவா சத்தையும் விட்டு விட்டீர்கள்; இவைகளையும் செய்ய வேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டுமே'' (மத் தேயு 23:23) என்று நமது ஆண்டவர் கூறியபொழுது தசம பாகம் தேவையில்லை என்று கூறவில்லை, அது சரியான மனப்பான்மையுடன் கொடுக்கப் பட வேண்டும் என்ப தையே வலியுறுத்தினார். ''இவைகளையும் செய்ய வேண் டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டுமே'' என்று அவர் கூறுவதைக் கவனியுங்கள். விகிதாச்சாரமாக, அதா வது அவரவர் வரவுக்குத் தக்கபடி கொடுப்பதை அப் போஸ்தலனாகிய பவுல் வலியுறுத்தினார். கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபத்தில், ''உங்களில் அவனவன் வாரத் தின் முதல்நாள் தோறும், **தன்தன் வரவுக்குத் தக்கதாக** எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்'' (I கொரிந்தியர் 16:2) என்று எழுதினார். மேலும், அவர்கள்

தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க வேண்டுமென அவர் எழுதினார் (II கொரிந்தியர் 8:3). தசமபாகம், நமது வருமானத்திற்கு ஏற்ற விகிதத்தில் கொடுப்பதை உறுதிப்படுத்துகிறது. நமது வருமானம் பெருகும் போது, நாம் கொடுப்பதும் அதிகரிக்க வேண்டும்.

## ii) தசமபாகம் நாம் கொடுக்கக் கூடிய குறைந்த பட்சம்தான்

மல்கியா 3:10 தசமபாகம், காணிக்கை என்ற இரண்டையும் குறிப்பிடுகிறது. தசமபாகத்திற்கு மிஞ்சிக் கொடுப்பதே காணிக்கையாகும்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் காணிக்கை என்பது ஆசாரியர்களுக்காகப் பிரித்தெடுத்து வழங்கப்படும் பலிகளின் பகுதியாகும் (லேவியராகமம் 7:32, எண்ணாகமம் 5:9). ஒரு சிறப்பான நோக்கத்திற்காக மனப்பூர்வமாய் வழங்கப் படும் உற்சாகமான காணிக்கைகளும் உண்டு (யாத்திராகமம் 25:2-7). அதாவது, சில சிறப்பான தேவைகள் இருக்குமானால் தசமபாகத்திற்கு மிஞ்சி அத்தேவைகளைச் சந்திக்கும்படி காணிக்கைகள் கொடுக்கப் பட வேண்டும் என்று இதிலிருந்து கற்றுக் கொள்கிறோம். நமது தசமபாகம் தவிர, அதற்கு மிஞ்சித் தான் ஞாயிறு ஆராதனைக் காணிக்கைகள் செலுத்த வேண்டும், ஆராதனையில் செலுத்தும் காணிக்கை தசமபாகத்திலிருந்து எடுக்கப் படக் கூடாது! எவ்வளவு நமக்காக வைத்துக் கொள்ள முடியும் என்பதல்ல, எவ்வளவு ஆண்டவருக்காகக் கோடுக்க முடியும் என்பதே முக்கியம்.

## iii) தேவனுடைய ஊழியக்காரரை ஆதரிக்க தசமபாகம் பயன்படுத்தப் படவேண்டும்

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும் படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்" (மல்கியா 3:10) என்று ஆண்டவர் கூறுகிறார்.

ஆலயத்தைச் சுற்றிலும் எசேக்கியா ராஜா பண்டகசாலை அறைகளைக் கட்டி வைத்திருந்தார். மக்கள் கொண்டு வந்த தசமபாகங்களை அந்த அறைகளில் சேர்த்து வைப்பார்கள் (II நாளாகமம் **31:11**, நெகேமியா **13:12**). ஆலயத்திலே பணிவிடை செய்த ஆசாரியரையும் லேவியரையும் போஷிக்க அந்தத் தசமபாகம் பயன் படுத்தப் பட்டது. மோசேயின் நியாயப் பிரமாணம் எல்லா விளைவின் பத்திலொரு பங்கும் ''கர்த்தருக்குப் பரிசுத்தமானது'' என்று உரைத்தது. ''தேசத்திலே நிலத்தின் வித்திலும் விருட்சங்களின் கனியிலும் தசமபாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது'' (லேவியராகமம் **27:30**). இது லேவியரின் ஆகாரத்துக்கானது. ''இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகிய தசமபாகத்தை லேவியருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்'' (எண்ணாகமம் **18:24**) என்று கர்த்தர் சொல்லியிருந்தார். மக்களிடமிருந்து தாங்கள் பெற்றதில் தசமபாகத்தை எடுத்து லேவியர் ஆசாரியருடைய பங்காகக் கொடுத்தனர். ''இப்படியே நீங்கள் இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கும் தசமபாகமாகிய உங்கள் பங்குகளிலெல்லாம் நீங்களும் கர்த்தருக்கு என்று ஒரு படைப்பை ஏறெடுத்துப் படைத்து, அந்தப் படைப்பை ஆசாரியனாகிய ஆரோனுக்குக் கொடுக்க வேண்டும்'' (எண்ணாகமம் **18:28**) என்று தேவன் லேவியருக்குக் கட்டளையிட்டிருந்தார். அவர்கள் பெற்றுக்கொள்ளும் எல்லாவற்றிலும் பத்தில் ஒரு பங்கு கர்த்தருக்குரியது (எண்ணாகமம் **18:26**).

''நான் என் தசமபாகத்திலிருந்து ஆலயம் செல்வதற்கு பஸ் டிக்கெட் செலவிற்குக் காசு எடுக்கிறேன். அது தவறா?'' என்று ஒரு சகோதரி கேட்டார்கள். நிச்சயமாக அது தவறு தான். நாம் விரும்புகின்ற விதத்தில் எல்லாம் தசமபாகத்தைச் செலவு செய்ய நமக்கு உரிமை கிடையாது. அது கர்த்தருக்குரியது, அவர் எதற்காக அதைச் செலவு செய்யலாம் என்று தமது வசனத்தில் கூறுகிறாரோ அதற்காக மட்டுமே அது

செலவு செய்யப் பட வேண்டும். அவர் தமது ஊழியர்களை ஆதரிப்பதற்காக தசமபாகம் கொடுக்கப் பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். மூன்று வருடங்களுக்கொரு முறை தசமபாகத்தைப் பிரித்தெடுத்துச் செலுத்தும் போது, அந்நியரும், திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் வந்து புசித்துத் திருப்தியடைந்தனர் (உபாகமம் 14:28, 29). ஏழை களுக்குக் கொடுப்பது வேறு, தசமபாகத்திற்கு மிஞ்சிக் கொடுக்கப்பட்டது.

''நான் என் தசமபாகம் முழுவதையும் எனது சபைக்குத் தான் கொடுக்க வேண்டுமா?'' என்ற கேள்வி அடிக்கடி எழுப்பப்படுகிறது. தசமபாகம் முழுவதும் ஆலயத்தைச் சேர வேண்டும், அதற்கு மிஞ்சிக் கொடுக்கும் காணிக்கைகளைக் கொண்டே பிற ஊழியங்கள் ஆதரிக்கப் பட வேண்டும் என்று வலியுறுத்தும் சபைப் போதகர்கள் உண்டு. இதற்கு வேத ஆதாரம் கிடையாது. மட்டுமல்ல, இவ்விதமான வற்பு றுத்தலுக்குக் காரணம், சபையையும் குறிப்பிட்ட சபை சார் பற்ற ஊழியங்களையும் தவறாகப் புரிந்து கொள்வதேயா கும். குறிப்பிட்ட சபை சார்பற்ற ஊழியங்களும் தெய்வ மக்கள் செய்யும் ஊழியமேயாகும். மல்கியா 3:10ல் காணப் படும் பிரமாணம் என்னவென்றால், ஆண்டவருக்கு ஊழி யம் செய்பவர்கள், அவருடைய மக்கள் கொண்டு வரும் தசமபாகங்களைக் கொண்டு ஆதரிக்கப் பட வேண்டும் என்பதே. நிச்சயமாகவே, தசமபாகத்தின் ஒரு பெரும் பகுதி அவரவருடைய சபைக்குக் கொடுக்கப்பட வேண்டும். நம் சொந்த சபையின் ஊழியங்களை நாம் அசட்டை செய்து விடக் கூடாது. ஆனால் நமது தசமபாகத்தை எப்படியெல் லாம் கொடுக்க வேண்டும் என்று ஆண்டவர் நம்மை வழி நடத்த வேண்டும். எந்த மனிதனோ, எந்தச் சபையோ அதைக் குறித்து நமக்குக் கட்டளையிட உரிமையில்லை. பல் வேறு ஊழியங்களைத் தாங்க வேண்டுமென்ற வைராக்கி யத்தில் எல்லாருக்கும் ஏதோ கொஞ்சம் என்று அற்பமான தொகையைக் கொடுக்காதபடி, நாம் எந்த ஊழியங்களைத்

தாங்கும்படி தேவன் விரும்புகிறார் என்று அவரிடம் காத்திருந்து அறிந்து கொள்ள வேண்டும்.

தேவன் எப்பொழுதும் தமது ஊழியரோடு தம்மை ஒன்றிணைத்துக் கொள்பவராதலால், அவர்களை ஆதரிக்காமல் விட்டு விடுவது அவரையே வஞ்சிப்பதற்கு ஒப்பாகும்.

## இ. வாக்குத்தத்தம் *3:10, 11, 12*

''அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். பூமியின் கனியைப் பட்சித்துப் போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்; அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை, வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற் போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள்; தேசம் விரும்பப் படத் தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் செல்லுகிறார்.''

அவர்கள் தசமபாகங்களிலும் காணிக்கைகளிலும் தேவனை வஞ்சித்ததினிமித்தமாக (வசனம் 9), சாபத்துக்காளாகி இருந்தார்கள்; ஆனால் இப்பொழுது அவருக்குக் கீழ்ப்படிந்து தங்கள் தசமபாகங்களைச் செலுத்துவார்களானால் அவர்களை ஆசீர்வதிக்க அவர் வாக்குக் கொடுக்கிறார். தேவனுடைய அன்பை ருசிக்கத் தடையாயிருக்கும் முட்டுக் கட்டைகள் நீக்கப் படுமானால், தெய்வ மக்கள் அவருடைய அன்பின் ஈவுகளை ருசிப்பது நிச்சயம் என்று எப்பொழுதுமே தீர்க்கதரிசிகள் உரைத்து வந்தனர். மல்கியாவும் அதே தீர்க்கதரிசன பாரம்பரியத்தில் அதே செய்தியை எடுத்துக் கூறுகிறார். இது ஏதோ தேவனுடன் பேரம் பேசுவதாக எடுத்துக் கொள்ளப் படக் கூடாது. ஆண்டவருக்கு நாம்

பத்து ரூபாய் கொடுத்தால் அவர் நமக்கு நூறு ரூபாய் கொடுப்பார் என்பது போன்ற போதனைகள் நமது தேவனுக்கு ஏற்றவை அல்ல. அது வியாபார விசுவாசம்! பொருளாதார வளமைக்காகவும் சரீரப் பிரகாரமான செழிப்பிற்காகவும் மக்கள் தேவனுக்குக் கொடுக்கும் படியாக அவர்களைத் தூண்டுவது தேவனுடைய உன்னதமான பணியைச் செய்யும் ஊழியர்களுக்குத் தகுந்ததல்ல. ஆனால், தங்களுடைய பணத்தாலும் உடைமைகளாலும் தம்மைக் கனம் பண்ணும் மக்களுக்கு தேவன் உண்மையாகவே தமது நிறைவான ஆசீர்வாதங்களை வாக்குப் பண்ணுகிறார்.

''வானத்தின் மதகுகள்'' (அல்லது பலகணிகள்) திறந்து பூமியின் மக்கள் மேல் நியாயத்தீர்ப்பின் மழையாகப் பொழிந்தனவென்று ஆதியாகமம் **7:11**ல் காண்கிறோம். மல்கியா **3:10**ல் அதே வானத்தின் பலகணிகள் திறக்கப் பட்டு, தேவனைத் தங்கள் ஈகையால் கனம் பண்ணுபவர்கள் மேல் மிகுந்த ஆசீர்வாத மழையைப் பொழியும் என்று பார்க்கிறோம்.

நீதிமொழிகள் **11:25**, ''உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப் படும்'' என்று கூறுகிறது. நமது ஆண்டவரும், ''கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப் படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்'' (லூக்கா **6:38**) என்று சொன்னார். அப்போஸ்தலனாகிய பவுல், ''சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்'' (II கொரிந்தியர் **9:6**) என்று எழுதினார். மேலும் அவர் கொரிந்தியருக்குச் சொன்னார் : ''நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும் படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்'' (II கொரிந்தியர் **9:8**).

வசனங்கள் 11, 12ல் இரண்டு திட்டவட்டமான ஆசீர் வாதங்கள் குறிப்பிடப் படுகின்றன.

### i) அவர்களது நிலத்தின் கனியும், கைகளின் பிரயாசமும் பாதுகாக்கப் பட்டு செழிக்கும் 3:11

அந்த நாட்களில் பயங்கரமானவையாகக் கருதப்பட்ட வெட்டுக் கிளிகள் இங்கே ''கனியை பட்சித்துப் போடுகிற வைகள்'' என்று குறிப்பிடப் படுகின்றன. அவை நிலத்தின் பயிரை அழித்து விடாதபடி கடவுள் பாதுகாப்பார், நிலம் செழித்து மிகுந்த கனி தரும்.

### ii) அவர்கள் சகல தேசங்களுக்கும் ஆசீர்வாதமாய் இருப்பார்கள் 3:12

சகல மக்களுக்கும் ஆசீர்வாதத்தின் வாய்க்காலாக இருக் கும் படித்தான் இஸ்ரவேலர் தெரிந்து கொள்ளப் பட்டனர். ''நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக் கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல் லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்'' என்று தேவன் சொல் லியிருந்தார் (யாத்திராகமம் 19:5, 6). அவர்கள் தங்களு டைய தசமபாகங்களினாலும் காணிக்கைகளினாலும் அவ ரைக் கனம் பண்ண ஆரம்பிக்கும் பொழுது இந்த வாக்குத் தத்தம் நிறைவேறும்.

நாம் உண்மையாகவே நம்மை ஆண்டவருக்கு முழுமை யாக அர்ப்பணம் செய்திருப்போமானால் அது நமது மதிப் பீடுகளிலும், நமது உடைமைகளைப் பற்றிய நமது மனப் பான்மையிலும் வெளிப்படும். அவ்விதமான முழுமையான அர்ப்பணம் நமது வாழ்வில் தேவனுடைய ஆசீர்வாதங்க ளைக் கொண்டு வரும், நம்மைக் கனி தருபவர்களாக மாற் றும்.

## அதிகாரம் 7

# கடவுள் சுத்திகரிக்கிறார், சீர்ப்படுத்துகிறார்

கூட்டத்தின் முடிவிலே அவருக்கு அருகில் ஜெபிக்கும் படி முழங்காலிட்டேன். அவர் தேம்பித் தேம்பியழுதார், சற்றுத் தலையைத் தூக்கி என்னைப் பார்த்தார், குற்றவுணர்வும், நிர்ப்பந்தமும் அவர் முகத்தில் தென்பட்டன. தம்முடைய வீழ்ச்சியினால் முற்றிலும் நம்பிக்கையிழந்தவராக, ''இன்னும் எனக்கு நம்பிக்கை உண்டா? தேவனுடைய அன்பை ருசி பார்த்த பின்னரும் நான் அவரை விட்டுத் தூரம் போய் விட்டேன், அவருக்கு உண்மையாக இருக்கவில்லை'' என்று கேட்டார். நான் சொன்னேன்: ''கிறிஸ்துவைப் பொறுத்த மட்டில் தோல்வி இறுதிக் கட்டமல்ல. உங்கள் வீழ்ச்சி எதுவாயிருந்தாலும், நீங்கள் மனம் திரும்பி அவரண்டை வரும்பொழுது, அவர் உங்களை மன்னித்துச் சுத்திகரித்து, ஏற்றுக் கொள்வார்.'' இது உண்மை! தேவன் தம் மக்களுக்கு அனுப்பிய இறுதிச் செய்தி அவரது அன்பையும் கிருபையையும் பற்றியது. பின்வாங்கிப் போன இஸ்ரவேலுக்கு அவர் சொன்னதைக் கேளுங்கள்: ''நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவு

களை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே'' (எரேமியா 29:11). ''வெட்டுக்கிளிகளும்.... பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்'' (யோவேல் 2:25). ஆனால் அவர்கள் அவரைத் தேடி அவரிடம் திரும்பி வர வேண்டும்.

தெய்வ மக்களின் வீழ்ச்சியைப் பற்றியும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றியும் மல்கியா உரைத்த போதிலும் அவருடைய இறுதி வார்த்தைகள் நம்பிக்கையின் வார்த்தைகளாக, சீர்பொருந்துதலின் வார்த்தைகளாக இருந்தன. முறிந்த உடன்படிக்கை தேவனுடைய உடன்படிக்கை அன்பினால் மீண்டும் நிலைநாட்டப் படும். இந்தச் சீர்பொருந்துதலில் நான்கு படிகளை மல்கியா விவரிக்கிறார் - புடமிடுதல், சீர்ப் படுத்துதல், மீட்டுக் கொள்ளுதல், நினைவூட்டுதல். ஒவ்வொன்றாகக் கவனிப்போம்.

### *1. புடமிடுதல் 3:1-4*

### *அ. புடமிடுபவர் 3:1, 2*

''இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம் பண்ணுவான்: அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்; இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.''

இந்த வசனத்தில், ''என் தூதன்,'' ''நீங்கள் தேடுகிற ஆண்டவர்'', ''சேனைகளின் கர்த்தர்'' என்று மூன்று நபர்கள் குறிப்பிடப்படுகின்றனர். அப்படியானால் புடமிடுகிறவர் யார்? புடமிடுகிறவர் தாம் அவர்கள் தேடிய ஆண்டவரும், உடன்படிக்கையின் தூதனுமானவர். இந்த மேசியா தான் ஆலயத்தையும், ஆசாரியரையும், ஜனங்களையும் சுத்திகரிக்கிறவராக வருவார். யாத்திராகமம் 3:2, 4ல் குறிப்பி

டப்படும் கர்த்தருடைய தூதனானவரைப் போலவே இவ ரும் யெகோவா தாம். அதாவது குமாரனாகிய தேவனுக்கும் பிதாவாகிய தேவனுக்கும் உள்ள உறவைக் காட்டும் வேதா கமத்தின் திரித்துவப் போதனைக்கு இது இன்னுமொரு சான்றாகும். தேவனுடைய மகிமை மீண்டும் ஆலயத்தை நிரப்பும் என்ற எசேக்கியேல் தீர்க்கதரிசியின் தரிசன நிறை வேறுதலாகவே மேசியா ஆலயத்திற்கு வருவார். "கர்த்தரு டைய மகிமை கீழ்த்திசைக்கு எதிரான வாசல் வழியாய் ஆல யத்துக்குள் பிரவேசித்தது. அப்பொழுது ஆவி என்னை எடுத்து, உட்பிரகாரத்திலே கொண்டு போய் விட்டது; இதோ, கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பிற்று" (எசேக்கியேல் *43:4, 5*).

"என் தூதனானவர்" என்ற பதத்தால் குறிக்கப் படும் நபர் **மேசியாவுக்கு முன்னோடி** ஆவார். ஒரு இராஜாவின் ஊர்வலம் செல்வதற்காக முன்னோடி எப்படி பாதையை ஆயத்தம் செய்கிறானோ அதே போல இந்த முன்னோடி யானவர் மேசியாவுக்கு வழியை ஆயத்தம் பண்ணுவார்.

ஏசாயாவும் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத் தத்தைப் பற்றி எழுதுகிறார்: "கர்த்தருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள், அவாந்தர வெளியிலே நம்முடைய தேவனுக் குப் பாதையைச் செவ்வை பண்ணுங்கள்" (ஏசாயா *40:3*). இது முன்னோடியாக வந்த யோவான்ஸ்நானரைப் பற்றிய குறிப்பாகும்.

## ஆ. புடமிடுதல் *3:2, 3*

"ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புட மிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும், வண்ணாரு டைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார். அவர் உட் கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டி ருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, ......

அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் புடமிடுவார்.''

''அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்?'' என்பது புடமிடுதல் **வேதனை தரும் அனுபவம்** என்பதைக் காட்டுகிறது. மட்டுமல்ல, அவர் பார்வையிலிருந்து ஒருவராலும் தப்ப முடியாது; ஒருவராலும் அவருக்கு முன் நிலைநிற்க முடியாது. நம் எல்லாருக்குமே அவரது சுத்திகரிக்கும் பணி அவசியம், அதில் பாடுகளும் அடங்கும். தேவனைப் புடமிடுபவராகச் சித்தரிப்பது தீர்க்கதரிசிகளின் செய்திகளில் பொதுவாகக் காணப்படும் ஒரு சத்தியம். ''நான் என் கையை உன்னிடமாய்த் திருப்பி, உன் களிம்பு நீங்க உன்னைச் சுத்தமாய்ப் புடமிட்டு, உன் ஈயத்தையெல்லாம் நீக்குவேன்'' (ஏசாயா 1:25).

''இதோ, உன்னைப் புடமிட்டேன்; ஆனாலும் வெள்ளியைப் போலல்ல, உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்து கொண்டேன்'' (ஏசாயா 48:10).

**தண்ணீரினால் கழுவப்படுவதன் மூலமும் அக்கினியால் புடமிடப் படுவதன் மூலமும்** சுத்திகரிப்பு நடைபெறுகிறது. ''அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார்.'' தண்ணீரினால் கழுவப்படுவது என்பது மறுபிறப்பையும் புடமிடுதல் என்பது பரிசுத்த ஆவியானவரின் சுத்திகரிப்பையும் பரிசுத்தப் படுத்தும் பணியையும் குறிக்கின்றன. தண்ணீர், அக்கினி ஆகிய இரண்டுமே பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமாயிருக்கின்றன. ''அவர் --- மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்'' (தீத்து 3:5) என்று பவுல் எழுதுகிறார். பரிசுத்த ஆவியானவர் அக்கினியாகத் தங்கள் மேல் இறங்கிய பெந்தெகொஸ்தே நாளைப் பற்றிப் பேசும்பொழுது பேதுரு, ''விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் (பெந்தெகொஸ்

தின் நாளில் யூதர்களுக்கும்) அவர்களுக்கும் (கொர்நேலியுவின் வீட்டில் புறஜாதியாரான விசுவாசிகளுக்கும்) யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்'' (அப்போஸ்தலர் **15:9**).

''அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார்.'' தம்முடைய மக்களின் பரிசுத்தத்தைப் பற்றி **தேவன் கொண்டிருக்கும் கரிசனையை** இது காட்டுகிறது. புடமிடுகிறவன் தன் முன்னாலுள்ள பாத்திரத்தில் இருக்கும் உலோகம் உருகுவதைக் கவனமாக நோக்கியவாறே பொறுமையாக அமர்ந்திருக்கிறான். அந்த உருகின உலோகக் குழம்பில் தனது உருவம் தெள்ளத் தெளிவாகப் பிரதிபலிப்பதைக் காணும் போது புடமிடும் பணி முடிவு பெற்று விட்டது என்று அறிவான்.

## 2. சீர்ப்படுத்துதல் *3:3, 4, 16-18*

### அ. ஆராதனை மீண்டும் நிலைநிறுத்தப் பட்டது 3:3,4

''அப்பொழுது பூர்வ நாட்களிலும், முந்தின வருஷங்களிலும் இருந்தது போல, யூதாவின் காணிக்கையும் எருசலேமின் காணிக்கையும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்.''

சரியான மனப்பான்மையுடன், சரியான காணிக்கைகளை தேவனுக்கு முன்பாகக் கொண்டு வருவதற்கு முன் தெய்வ மக்கள் அவரால் சுத்திகரிக்கப் பட வேண்டியது அவசியம். அப்படிப் பட்ட காணிக்கைகள் தாம் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும். நாம் ஊழியம் செய்ய ஆரம்பிப்பதற்கு முன் பரிசுத்தமாக்கப் பட வேண்டும்.

### ஆ. தேவனுடன் ஐக்கியம் மீண்டும் நிலைநாட்டப் பட்டது 3:16, 17

''அப்பொழுது கர்த்தருக்கு பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்வார்கள்; கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய

நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்த கம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப் பட்டிருக்கிறது. என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடை யவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ் செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறது போல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்''

**''கர்த்தருக்குப் பயந்தவர்கள்''** என்று இங்கே குறிப் பிடப்படுபவர்கள் வீணான வார்த்தைகளைப் பேசுவதை விட்டுத் திரும்பி தேவனில் நம்பிக்கை வைக்கும்படி ஒருவ ரையொருவர் ஊக்குவிக்கிறவர்கள். இந்த விசுவாசத்தின் ஆரம்பம் ஒருவேளை மிகவும் அற்பமானதாயிருந்த போதி லும் அதைத் தேவன் கவனித்துக் கேட்பார். நமது அன்பும் விசுவாசமும் எவ்வளவு சொற்பமானதாயினும் அவர் அதைக் கவனிக்கிறார். ''அவர் நெரிந்த நாணலை முறியா மலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும்'' இருப்பார் (ஏசாயா *42:3*).

''மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப் படு வாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப் படுவாய்'' என்று நமது ஆண்டவர் கூறி னார் (மத்தேயு *12:36, 37*). தேவன் நமது வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்! வீணான வார்த்தைகள், தீமை யான வார்த்தைகள், பெருமையான வார்த்தைகள் யாவும் நியாயந்தீர்க்கப் படும். தெய்வ பயத்தினால் ஆளப் படும் இருதயத்திலிருந்து நமது வார்த்தைகள் வருமானால் அவற் றைத் தேவன் கேட்டு மகிழ்ச்சியடைகிறார்.

ஆண்டவரை நேசித்து, அவருக்குப் பயப்படுகிறவர்கள் ஒருவரோடொருவர் உரையாடி தங்களுக்குள் கொள்ளும்

ஐக்கியத்தின் ஆசீர்வாதத்தைப் பற்றியும் இந்த வசனம் பேசு கிறது. விசுவாசிகள் பேசி, ஒருவரோடொருவர் ஐக்கியம் கொள்ளும் பொழுது, நமது ஆண்டவரும் அந்த உரையாட லிலும் ஐக்கியத்திலும் பங்கு கொள்ளுகிறார். இது எவ்வ ளவு பெரிய சிலாக்கியம்! லூக்கா 24:15ல், "இப்படி அவர் கள் (எம்மாவூர் சீஷர்கள்) பேசி, சம்பாஷித்துக் கொண்டி ருக்கையில், இயேசு தாமே சேர்ந்து அவர்களுடனே கூட நடந்து போனார்" என்று வாசிக்கிறோம்.

**"ஞாபகப் புஸ்தகம்"** அல்லது கர்த்தருடைய ஜனங்க ளின் பெயர்கள் எழுதப் பட்டிருக்கும் பதிவேடு யாத்திராக மம் *32:32, 33*; சங்கீதம் *69:28; 87:6* மற்றும் தானியேல் *12:1* ஆகிய வசனங்களிலும் குறிப்பிடப்படுகிறது. தேவ னுக்குப் பயந்து, அவரைக் கனம் பண்ணினவர்கள் யாராக இருந்தாலும் சரி, ஒருவேளை இந்த உலகில் மிகவும் அற்ப மாக எண்ணப் பட்டவர்களானாலும் கூட அவர்கள் பெயர் தேவனுடைய பட்டியலில் தவறாமல் இடம் பெறும். இந்த ஞாபகப் புஸ்தகத்தில் நமது பெயர் இடம் பெறுவதற்கான நிபந்தனை நமது சுய நீதியோ அல்லது நற்செயல்களோ அல்ல, விசுவாசத்தின் அடிப்படையில் நாம் தேவனுடன் கொண்டுள்ள தனிப்பட்ட உறவேயாகும். அவரில் விசுவா சம் வைத்து, அவருக்குப் பயந்து அவரைக் கனம் பண்ணு கிறவர்கள் மாத்திரம் இப்புத்தகத்தில் இடம் பெறுவார்கள். அவர்கள் கடாட்சம் பெறுவார்கள், இரக்கத்தினால் இரட் சிக்கப் படுவார்கள்.

**"என் சம்பத்து", "என்னுடையவர்களாயிருப்பார் கள்"** என்ற வார்த்தைகள் இஸ்ரவேலர் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் என்பதைக் குறிக்கின்றன. இஸ்ரவேல் மக்க ளோடு அவர் உடன்படிக்கை உறவில் பிரவேசித்தபோது, "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங் களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்"

(யாத்திராகமம் 19:5) என்று சொல்லியிருந்தார். இப்பொழுது அந்த உடன்படிக்கை உறவு மீண்டும் நிலைநாட்டப் பட்டபோது அதே வார்த்தைகளை மீண்டும் கூறுகிறார். அவர்கள் அவருக்கு ஊழியம் செய்கையில் அவருக்கும் அவர்களுக்கும் உள்ள உறவு தகப்பன்-பிள்ளை உறவைப் போலிருக்கும். மீட்டுக் கொள்ளப் படுவதில் நமது சிறந்த பாக்கியம் என்னவென்றால் தேவனுடன் தனிப்பட்ட ஐக்கியம் கொள்ளுவதேயாகும்.

## இ. மதிப்பீடுகள் மீண்டும் சீர்ப்படுத்தப் பட்டன 3:18

*"அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ் செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ் செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்"*

*மல்கியா 2:17லும் 3:14, 15 லும்* இஸ்ரவேலர் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தையும், தேவனுக்கு ஊழியம் செய்கிறவனுக்கும் செய்யாதவனுக்கும் உள்ள வித்தியாசத்தையும் காண முடியாதவர்களாயிருந்தார்களென்று பார்க்கிறோம். ஆனால் இப்பொழுதோ அவர்கள் அந்த வித்தியாசத்தை உணர்ந்து கொள்வார்கள். தேவனுக்கு முன்பாக உத்தமமாய் நடந்து, அவருக்கு ஊழியம் செய்வதற்குப் பலனுண்டு என்பதைக் காண்பார்கள். அவர்களுடைய அறநெறி மதிப்பீடுகள், ஆவிக்குரிய மதிப்பீடுகள் மீண்டும் செம்மையாவன. பரிசுத்த ஆவியானவரின் புதுப்பிக்கும், சுத்திகரிக்கும் பணி இதை நம்மில் நிறைவேற்றும்.

## அதிகாரம் 8

# பூரண இரட்சிப்பு

ஒரு வீட்டு வேத ஆராய்ச்சிக் குழுவிலே, தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றிக் கடுமையான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. "தேவன் அன்பாகவே இருக்கிறார். ஆகையினால் அவர் நியாயத்தீர்ப்பு அளிப்பதோ, மனிதர்களைத் தண்டிப்பதோ கூடாத காரியம். தேவன் கோபம் கொண்டு தண்டனை அளிக்கிறார் என்பது புறமதத்தாரின் நம்பிக்கை, அதைக் கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொள்ள முடியாது" என்று கூறினார் சந்திரன். வேதாகமம் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பேசுகிறது என்றும், நம்முடைய சொந்தக் கருத்துகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் அது எவ்வளவு தான் பிரியமற்றதாயிருந்த போதிலும் நமது விசுவாசத்திற்கும் நடத்தைக்குமான முடிவான சட்ட நூல் வேதாகமமே என்றும் குழுவின் தலைவர் விளக்கினார். மேலும் அவர், தேவன் அன்புள்ளவர் மட்டுமல்ல, நீதியுள்ளவரும் கூட; மனிதர்களுடைய வாழ்க்கையில் அவருடைய நீதி, இரக்கம் ஆகிய இரண்டுமே கிரியை செய்கின்றன என்றும் கூறினார். தேவன் பாவியை நேசிக்கிறார், ஆனால் பாவத்தை வெறுக்கிறார். ஆகவே அவர் பாவத்தைப் பொருட்படுத்தாதவர் போல் இருக்க முடியாது, அதை நியாயம் தீர்த்தேயாக வேண்டும். ஏதோ ஒரு தன்னிச்சையான தெய்வம் கோபம் கொண்டு தமது மனம் போல தண்டிப்பது

அல்ல அது. அன்பு நிறைந்த, பரிசுத்தமுள்ள தேவன் தமது பரிசுத்தமும் நீதியும் நிறைந்த சுபாவத்திற்கு முரணான எதையும் சகிக்கக் கூடாதவராயிருப்பதால் பாவத்தைத் தண்டிக்கிறார் என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஆகையினால் தான், தேவனுடைய மீட்பைப் பற்றிக் கூறும் அதே மல்கியா 4 ஆம் அதிகாரம் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றியும் கூறுகிறது. மீட்பராகிய தேவன் நியாயாதிபதியாகிய தேவனும் கூட. இரட்சகராக வந்த இயேசு தாம் நியாயாதிபதியாகவும் வரப் போவதாகக் கூறினார். ''பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்'' (யோவான் 5:22). ''மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார்'' (அப்போஸ்தலர் 17:31).

சீர் பொருந்துதலின் படிகளாக மல்கியா குறிப்பிடும் நான்கு படிகளில் கடைசி இரண்டும் மீட்டுக் கொள்ளுதல், நினைவு கூருதல் என்பவையாகும்.

### 1. மீட்டுக் கொள்ளுதல் 4:1-3

''இதோ, ... (அந்த) நாள் வரும்'' (வசனம் 1). தீர்க்கதரிசன நூல்களிலே ''கர்த்தருடைய நாள்'' என்ற சொற்றொடர் அடிக்கடி வருகிறது. ''கர்த்தரின் நாளானது'' (ஏசாயா 2:12) என்று ஏசாயா எழுதுகிறார். ஆமோஸ் (5:18-20), யோவேல் (1:15), செப்பனியா (1:7, 14), மற்றும் சகரியா (14:1) ஆகியோரும் அதைப் பற்றிக் குறிப்பிடுகின்றனர். முக்கியமான சம்பவங்களைக் குறிக்க எபிரேயர் ''நாள்'' என்கிற சொல்லைப் பயன் படுத்துவார்கள். கர்த்தருடைய நாள் என்பது எதிர்காலத்தில் அவர் தங்களுக்கு நம்பிக்கையையும் ஆசீர்வாதத்தையும் கொண்டு வரும் நாள் என்று இஸ்ரவேல் மக்கள் நம்பியிருந்தனர். ஆனால் தீர்க்கதரிசி

களோ, இஸ்ரவேலர் தேவனுக்கு எதிராக முரட்டாட்டம் செய்ததால் அந்த நாள் அவர்களுக்கு இக்கட்டின் நாளாகவே இருக்கும் என்று முன்னுரைத்தனர். அந்த நாள் அவருக்கு உண்மையாயிருக்கிறவர்களுக்கு நம்பிக்கையின் நாளாகவும், ஆசீர்வாதத்தின் நாளாகவும், கீழ்ப்படியாமையில் வாழுபவர்களுக்கோ நியாயத்தீர்ப்பின் நாளாகவும் அமையும். பாபிலோனியரின் படையெடுப்பு போன்ற வரலாற்று நிகழ்ச்சிகளை தேவனுடைய நியாயத்தீர்ப்பாகவே தீர்க்கதரிசிகள் கருதினர். அகில உலகையும் கடவுள் நியாயம் தீர்க்கின்ற இறுதியான நியாயத்தீர்ப்பின் நாள் ஒன்றையும் அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். அந்த நாள் இஸ்ரவேலருக்கு மீட்பின் நாளாக இருக்கும் (ஆமோஸ் 9:11-15, செப்பனியா 3:9-20). எனவே "அந்த நாள்" என்பது இஸ்ரவேலரின் வரலாற்றிலேயே கர்த்தர் அவர்களைச் சந்திக்கும் நாளை மட்டுமல்ல, வரலாற்றின் முடிவில் வரவிருக்கும் இறுதி நியாயத்தீர்ப்பு நாளையும் குறித்தது. இந்தத் தீர்க்கதரிசனப் பின்னணியில் தான் மல்கியாவின் இந்த வசனத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

வரப்போகின்ற **அந்த நாள், நியாயத்தீர்ப்பின் நாளாகவும், ஆரோக்கியத்தின் நாளாகவும், விடுதலையின் நாளாகவும், வெற்றியின் நாளாகவும்** இருக்கும்.

### அ. நியாயத்தீர்ப்பு 4:1

"இதோ, சூளையைப் போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ் செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப் போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற் போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்."

"அந்த நாள்" எரிகிற நாளாயிருக்கும். 3:2ல் மல்கியா புடமிடுகிற அக்கினியைப் பற்றிப் பேசினார், ஆனால் இங்கே அழிக்கிற அக்கினியைப் பற்றிக் கூறுகிறார். இது நியாயத்தீர்ப்பின் காட்சி. தேவனுக்குப் பயப்படாதவர்க

ளின் பரிதாப நிலை இது தான். உடன்படிக்கையின் மக்க ளின் மத்தியிலும் கூட தேவனுடைய நாமத்துக்குப் பயந்த வர்கள் மற்றும் பொல்லாப்புச் செய்கிற அகங்காரிகள் என்ற இருபிரிவினர் உண்டு. பவுல் எழுதுகிறபடி, ''புறம் பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய் யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல'' (ரோமர் 2:28).

நியாயத்தீர்ப்பு முழுமையானதாகவும் பாரபட்சமற்றதா கவும் இருக்கும்.

## ஆ. ஆரோக்கியம் 4:2

''ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்.''

அகங்காரிகளுக்கும் தீமை செய்பவர்களுக்கும் நியாயத் தீர்ப்பின் நாளாயிருக்கும் அதே நாள் கர்த்தருக்குப் பயந்த வர்களுக்கு ஆசீர்வாதத்தின் நாளாகவும், ஆரோக்கியத்தின் நாளாகவும் இருக்கும். துன்மார்க்கரை அழிக்கிற அக்கினி யாக எரிந்த அதே சூரியன் நீதியை விரும்புகிறவர்களுக்கு ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் தரும் **நீதியின் சூரி யனாக** இருக்கும். கதிரவனின் கதிர்கள் அதன் செட்டைக ளாகச் சித்தரிக்கப் படுகின்றன.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நீதியின் சூரியனாக வரும் அந்த இறுதி நாளில் முழுமையான, முடிவான உட லுக்குரிய, ஆவிக்குரிய ஆரோக்கியம் நமக்குக் கிடைக்கும். இந்த வாழ்வில் எல்லோருக்கும் நோயிலிருந்து சுகம் கிடைப் பதில்லை. ஆனால் கிறிஸ்து வரும் பொழுது முழுமையான, முடிவான சுகம் நிச்சயமாய் எல்லோருக்கும் கிடைக்கும்.

## இ. விடுதலை 4:2

''நீங்கள் வெளியே புறப்பட்டுப் போய், கொழுத்த கன் றுகளைப் போல வளருவீர்கள்.''

இது காலை கதிரவனின் ஒளியில் தங்கள் தொழுவத்திலிருந்து கட்டவிழ்க்கப் பட்டு வெளியே வந்து துள்ளி குதிக்கும் இளம் கன்றுகளைப் பற்றிய ஒரு காட்சி. இது நமது ஆண்டவர் வரும்பொழுது நாம் எல்லாக் கட்டுகளிலிருந்தும் விடுதலையாகி பூரண இரட்சிப்பை அடையும் போது கிடைக்கும் முழுமையான விடுதலையைக் குறிக்கிறது. நாம் நம்மைத் தடைசெய்யும் யாவற்றிலிருந்தும், நமது மனுஷீக பலவீனங்களிலிருந்தும், குறைபாடுகளிலிருந்தும், பாவத்தின் பிரசன்னத்திலிருந்தும் கூட விடுவிக்கப் படுவோம். இது எவ்வளவு மகிழ்ச்சி தரும் நம்பிக்கை! ''சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத் தனத்தினின்று விடுதலையாக்கப் பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்ளும்'' (ரோமர் 8:20). ''ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்'' (ரோமர் 8:23).

### ஈ. வெற்றி 4:3

''துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; நான் இதைச் செய்யும் நாளிலே அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின் கீழ் சாம்பலாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.''

துன்மார்க்கரின் மேல் இறுதியான வெற்றி கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு வாக்குப் பண்ணப் படுகிறது. அவர்கள் ஆண்டவருக்குப் பயந்து நடந்ததால் துன்மார்க்கரால் உபத்திரவப் பட்டார்கள். தேவன் தம்முடைய வசனத்திலே அவர்கள் அதற்காகப் பதிலுக்குப் பதில் செய்யவோ, பழி வாங்கவோ கூடாது எனக் கட்டளையிட்டிருந்தார். எனவே அவர்கள் பொறுமையாகப் பாடுகளைச் சகித்தனர். ஆனால் அவர்கள் தீமையின் மேலும், தீமை செய்யும் மக்கள் மேலும் முழுமையான வெற்றி கொள்ளும் காலமொன்று வரும். எல்லாக் கால கட்டங்களிலும் தேவன்

தமது விசுவாசிகள் படும் உபத்திரவங்களுக்குப் பழி வாங்கி, நீதியை நிலைநாட்டி, தமது ஆட்சியை உறுதிப்படுத்த வேண்டும் என்ற ஏக்கம் துன்புறுத்தப்பட்ட விசுவாசிகளுக்கு இருந்ததுண்டு. ''அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்த போது, தேவ வசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப் பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின் கீழே கண்டேன். அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழி வாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்'' (வெளிப்படுத்தின விசேஷம் 6:9, 10).

தீமையின் மீதான இந்த இறுதி வெற்றிக்கு நாம் காத்துக் கொண்டிருக்கும் அதே வேளையிலே கிறிஸ்துவின் மூலமாக நாம் அனுபவிக்கக் கூடிய உடனடியான, நிகழ்கால வெற்றியும் உண்டு. ''தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, . . . எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத் தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி(னார்)'' (எபேசியர் 1:19-22). இப்பொழுதும் கூட இந்த அண்ட சராசரத்திலுள்ள அனைவர் மேலும், அனைத்தின் மேலும் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சகல அதிகாரமும், முழு வெற்றியும் உண்டு என்பது இந்த வசனங்களிலிருந்து தெளிவாகிறது. ''(தேவன்) . . . கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை உயிரோடே எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்'' என்று எபேசியர் 2:6 கூறுகிறது. சகலமும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்குமானால், உன்னதங்களில் அவரோடே கூட உட்கார்ந்திருக்கும் நம்முடைய பாதங்களுக்கும்

அவை யாவும் கீழ்ப்பட்டிருக்கும். இப்பொழுதே இந்த வெற்றியை நாம் சொந்தமாக்கிக் கொள்ளக் கூடும்.

## 2. நினைவு கூருதல் 4:4-6

மல்கியாவின் நூல் எபிரேய வேதத்தில் இறுதியான புத்தகம் அல்ல; ஆனால் கிரேக்க, லத்தீன் மொழி வேதாகமங்களில் அது இறுதியான நூலாக இருப்பதைப் பின்பற்றி நமது வேதாகமத்திலும் அப்படி அமைந்துள்ளது. எனவே மல்கியாவின் இறுதி மூன்று வசனங்கள் பழைய ஏற்பாட்டின் முடிவுரையாக அமைகின்றன. இந்த வசனங்களில் நியாயப் பிரமாணத்தை வழங்கிய மோசே, தீர்க்கதரிசியாகிய எலியா ஆகிய இருவரும் குறிப்பிடப் படுகின்றனர். அவர்கள் பழைய உடன்படிக்கைக்கு அடையாளமானவர்கள். பழைய உடன்படிக்கையை நிறைவேற்றுபவரும் புதிய உடன்படிக்கையை ஆரம்பித்து வைத்தவருமான இயேசுவுடன் இவர்கள் இருவருமே மறுரூப மலையில் பேசினார்கள். மேலும் 4:5,6 மேசியாவுக்கு முன்னோடியான யோவான்ஸ்நானனின் வருகையைக் குறித்துப் பேசுகிறது. இப்படியாக இந்தப் பகுதி பழைய ஏற்பாட்டுக்குச் சரியான முடிவுரையாகவும் புதிய ஏற்பாட்டுக்கு ஏற்ற முகவுரையாகவும் அமைந்துள்ளது.

### அ. நியாயப் பிரமாணத்தை நினையுங்கள் 4:4

''ஓரேபிலே இஸ்ரவேலரெல்லாருக்காகவும் என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப் பிரமாணமாகிய கட்டளைகளையும் நியாயங்களையும் நினையுங்கள்.''

தம்முடைய உடன்படிக்கையை மீண்டும் அவர்களோடு நிலைநாட்ட வாக்குக் கொடுத்த தேவன் அதே சமயத்தில் அந்த உடன்படிக்கையில் தாம் விதித்த நியமங்களையும் நிபந்தனைகளையும் அவர்கள் நினைவு கூர வேண்டுமென்றும் அழைப்புக் கொடுக்கிறார். மோசேயின் நியாயப் பிர

மாணம் அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளைக் கொடுத்தது. ''ஒரேப்'' என்பது ''சீனாய்'' என்பதன் மறுபெயராகும். ''நினையுங்கள்'' என்ற சொல் உபாகமத்தில் பதின்மூன்று தடவைகள் வருகிறது. உபாகமம் உடன்படிக்கையின் புத்தகமாகும். இப்பொழுது அதையெல்லாம் திரும்பிப் பார்க்கும்படி அழைப்பு கொடுக்கப் படுகிறது.

## ஆ. தீர்க்கதரிசியைப் பாருங்கள் 4:5, 6

''இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்.''

இந்தப் பகுதியில் முன்னோக்கிப் பார்க்கும்படி அழைப்பு விடப் படுகிறது. மோசே நியாயப் பிரமாணத்துக்கும் அதன் சட்ட திட்டங்களுக்கும் எலியா தீர்க்கதரிசனத்துக்கும் அதன் வாக்குத்தத்தங்களுக்கும் அடையாளமாய் இருந்தார்கள். இந்தத் தீர்க்கதரிசனம் யோவான்ஸ்நானனின் வருகையில் நிறைவேறிற்று. சிலர் தவறாகப் போதிக்கிறபடி அவர் எலியாவின் மறு அவதாரம் அல்ல. வேதம் மறு அவதாரத் தத்துவத்தைப் போதிப்பதில்லை. தான் எலியா அல்ல என்று யோவான் திட்டமாக லேவியருக்கும், ஆசாரியருக்கும் தெரிவித்தார் (யோவான் 1:21). அவர் எலியாவின் ஆவியும், செய்தியும் உடையவராய் மக்களைத் தேவனண்டை திரும்ப அழைக்கும் படியாக வந்தார்.

உடன்படிக்கையை மீண்டும் நிலை நாட்டுவேன் என்று வாக்கருளிய தேவன் மக்கள் தமது வசனத்திற்கு உண்மையுள்ளவர்களாய் இருக்கும் படியும் தமது மேசியாவின் வருகைக்கு எதிர்பார்த்திருக்கும் படியும் அவர்களுக்கு நினைவூட்டினார்.

பழைய ஏற்பாட்டிலே எஸ்றா, நெகேமியா காலத்தைச் சேர்ந்த தீர்க்கதரிசிகளுள் கடைசியானவர் மல்கியா. அவரது பெயரைக் கொண்ட இந்தத் தீர்க்கதரிசன நூல் பழைய ஏற்பாட்டின் கடைசி நூலாக அமைந்துள்ளது.

இஸ்ரவேல் மக்கள் தேவனை விட்டு விலகிப் போனார்கள். எஸ்றாவின் புத்தகத்தில் இஸ்ரவேலரின் தாறுமாறான மத வாழ்விற்கு அடையாளமாக இடிந்து போன ஆலயத்தைக் காண்கிறோம். நெகேமியாவின் புத்தகத்தில் அவர்களுடைய சீர்கெட்ட அரசியல் வாழ்வு, சமூக வாழ்விற்கு அடையாளமாக இடிந்து போன மதிலைப் பார்க்கிறோம். மல்கியாவின் புத்தகத்தில் அவர்களுடைய வீழ்ச்சியுற்ற ஆவிக்குரிய வாழ்விற்கு அடையாளமாக முறிந்த உடன்படிக்கையைக் காண்கிறோம். ''என்னுடைய செய்தி'' என்ற பொருள்படும் மல்கியாவின் நூலின் முக்கியமான பொருள் முறிந்த உடன்படிக்கையும், அதை மீண்டும் நிலைநாட்டும் தேவனுடைய அன்புமாகும்.

இன்று தேவனுடைய மக்களாகிய நாம் அவருடன் உள்ள நமது உறவைச் சீர்தூக்கிப் பார்த்து, அவருடைய அன்பினால் மீண்டும் அவரண்டை சேருவதற்கான வழி முறைகளைக் கண்டு கொள்ள இந்த நூல் நம்மை அறைகூவி அழைக்கின்றது.

**திருமறைப் போதனை ஊழியங்கள்**
**64 மகாலட்சுமி நகர்**
**சென்னை 600 073**